ஓம் சக்தி

# பளை - இரட்டைக்கேணி

# கண்ணகை அம்பாள் திருக்கோயில்






## மஹா கும்பாபிஷேகச் சிறப்பு மலர்

02.09.2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூலமூர்த்தி விக்கிரகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

அருள்மிகு

# பளை - இரட்டைக்கேணி
# கண்ணகை அம்பாள் ஆலயம்



# மஹா கும்பாபிஷேகச்
# சிறப்பு மலர்

## 02.09.2011

*அருள் வளரும் திரு நிலமாய் அமைந்திலங்கும்*
*பளை யுறையும் பதியமைந்த அம்பிகையின்*
*மனம் சிறந்த மஹா கும்பாபிஷேகப் பெருவிழாவின்*
*நினைவுக்காய் உருவான சிறப்பு நூலாம்.*

வெளியீடு

**பரிபாலன சபை,**
**அருள்மிகு இரட்டைக்கேணி**
**கண்ணகை அம்பாள் தேவஸ்தானம்**
**பளை நகரம், பளை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலரின் பெயர் :- மஹா கும்பாபிஷேகச் சிறப்புமலர்

உரிமை :- மலர்க்குழு

ஆசிரியர் :- க. விஸ்ணுகாந்தன்

காலம் :- 06.09.2012

பக்கங்கள் :- 102

வெளியீடு :- பரிபாலனசபை,
அருள்மிகு இரட்டைக்கேணி கண்ணகையம்பாள் தேவஸ்தானம்
பளை நகரம், பளை.

பதிப்பு :- கரிகணன் பிறிண்டேர்ஸ்,
இல. 424, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலய பரிபாலனசபை உறுப்பினர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிர்வாகசபை விபரம்

| | | |
|---|---|---|
| காப்பாளர்கள் | : | திரு. பசுபதி அரியரத்தினம் |
| | | திரு. சின்னத்தம்பி சண்முகானந்தன் |
| போஷகர் | : | திரு. அமரசிங்கம் கேதீஸ்வரன் |
| தலைவர் | : | திரு. செல்லத்துரை கந்தசாமி |
| செயலாளர் | : | திரு. துரையப்பா திரவியரத்தினம் |
| பொருளாளர் | : | திரு. துரைராசா ஆனந்தன் |
| உப தலைவர் | : | திரு. அரியரத்தினம் மயூரன் |
| உப செயலாளர் | : | திரு. குமாரசாமி ரவீந்திரன் |
| நிர்வாக உறுப்பினர்கள் | : | திரு. சின்னத்தம்பி வினாசித்தம்பி |
| | | திரு. செல்லத்துரை சிவஞானம் |
| | | திருமதி மிருகண்டர் மகேஸ்வரி |
| | | திருமதி தவரட்ணசிங்கம் கனகேஸ்வரி |
| கணக்காய்வாளர் | : | திரு. செல்லையா நிமலரூபன் |

## மலர் வெளியீட்டுக் குழு

| | | |
|---|---|---|
| **மலர்க்குழுத் தலைவர்** | : | திரு. அமரசிங்கம் கேதீஸ்வரன் |
| **மலர்க்குழு உறுப்பினர்கள்** | : | திரு. சிவஞானம் கோகுலதர்சன் |
| | | திரு. சின்னத்தம்பி முருகானந்தன் |
| | | திரு. செல்லையா நிமலறங்கன் |
| | | திரு. சிவபாதம் சிவகணேசன் |
| | | திரு. துரைராசா சிவானந்தன் |
| | | திரு. இராசதுரை யோகேந்திரம் |

## மலராசிரியர்

திரு. கந்தையா விஸ்ணுகாந்தன்

## கும்பாபிஷேகக் குழு

| | |
|---|---|
| திரு. கந்தையா விஷ்ணுகாந்தன் | திருமதி நவரத்தினசிங்கம் வசந்தினி |
| திரு. சிவஞானம் மதனதர்சன் | திரு. கனகசபை சசிதாஸ் |
| திரு. செல்வரத்தினம் ஜெயவரதன் | திரு. சிவகுரு விநாயகமூர்த்தி |
| திருமதி அன்ரன் அன்பழகன் பரமேஸ்வரி | திரு. கணபதிப்பிள்ளை நாகராசா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்டலாபிஷேக உபயகாரர் விபரம்

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு. செ. கனகசபை | - | பெரியபளை |
| 2. | திரு. பொ. வரதராசன் | - | பெரியபளை |
| 3. | திருமதி இ. பத்மநாதன் | - | பெரியபளை |
| 4. | திரு. த. முத்துத்தம்பி | - | பெரியபளை |
| 5. | திரு. வீ. கந்தையா | - | பெரியபளை |
| 6. | திரு. வீ. சுப்பிரமணியம் | - | பெரியபளை |
| 7. | திரு. க. சிவதீஸ்வரன் | - | பெரியபளை |
| 8. | திரு. த. சண்முகம் | - | பெரியபளை |
| 9. | திருமதி ம. முத்துவேலு | - | பெரியபளை |
| 10. | திரு. ப. அரியரத்தினம் | - | பெரியபளை |
| 11. | திரு. க. சின்னத்தம்பி | - | பெரியபளை |
| 12. | திரு. சி. விநாசித்தம்பி | - | பெரியபளை |
| 13. | திருமதி ம. வல்லிபுரம் | - | ஆனைவிழுந்தான் |
| 14. | திருமதி ச. பாக்கியம் | - | புலோப்பளை |
| 15. | திருமதி ம. நடேசபிள்ளை | - | கச்சார்வெளி |
| 16. | திரு. சி. விநாயகமூர்த்தி | - | பெரியபளை |
| 17. | திரு. க. குலேந்திரன் | - | தர்மக்கேணி |
| 18. | திருமதி. சு. நவமணி சரோஜாதேவி | - | பெரியபளை |
| 19. | திரு. சு. நவரத்தினசிங்கம் | - | பெரியபளை |
| 20. | திரு. தா. தர்மகுலசிங்கம் | - | பெரியபளை |
| 21. | திரு. க. பரந்தாமன் | - | பளைநகரம் |
| 22. | திரு. கனகரத்தினம் | - | பெரியபளை |
| 23. | திருமதி தி. மயில்வாகனம் | - | பெரியபளை |
| 24. | திரு. நாதன். திரு. சி. தீபன் | - | அரசர்கேணி. பெரியபளை |
| 25. | திரு. குமாரசாமிப்புலவர் குடும்பம் | - | உடையார்கட்டு |
| 26. | திரு. ஐயாத்துரை குடும்பம் | - | பெரியபளை |
| 27. | திரு. பொ. இராசதுரை குடும்பம் | - | பெரியபளை |
| 28. | திரு. ம. செல்லையா குடும்பம் | - | பெரியபளை |
| 29. | திரு. மா. குமாரசாமி குடும்பம் | - | பெரியபளை |
| 30. | திரு. கா. வைகுந்தநாதன் | - | கச்சார்வெளி |
| 31. | திருமதி கோமளா. ஜவனராணி | - | பெரியபளை |
| 32. | திரு. சி. கந்தசாமி | - | விடத்தற்பளை |
| 33. | திரு. சி. சிவஞானசுந்தரம் | - | தம்பகாமம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 34. | பச்சிலைப்பள்ளிப் பிரதேசசபை | | |
| 35. | பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகம் | | |
| | பச்சிலைப்பள்ளி ப. நோ. கூட்டுறவுச் சங்கம் | | |
| 36. | திருமதி க. றஞ்சினிதேவி | - | டென்மார்க் |
| 37. | திரு. பொன்னையா குடும்பம் | - | பெரியபளை |
| | ஈஸ்வரராசன் குடும்பம். | | |
| 38. | திரு. இ. ரவி | - | கச்சார்வெளி |
| 39. | திரு. து. திரவியரத்தினம் | - | முல்லையடி |
| 40. | திரு. இராசேந்திரம் | - | முல்லையடி |
| 41. | திருமதி பா. பாலசுந்தரம் | - | செல்வபுரம். வவுனியா |
| 42. | திரு. சி. தம்பையா குடும்பம் | - | பெரியபளை |
| 43. | திரு. கெ. துஸ்ஸியந்தன் குடும்பம் | - | பெரியபளை |
| 44. | திரு. வ. சிவசுப்பிரமணியம் குடும்பம் | - | செந்தில்நகர் |
| 45. | திரு. கந்தசாமி குடும்பம் | - | தர்மக்கேணி |
| 46. | திரு. செ. சிவஞானம் குடும்பம் | - | பெரியபளை |
| 47. | திரு. து. ஆனந்தன் குடும்பம் | - | பெரியபளை |

## ஆலயத்தின் புனருத்தாரணத்தின் பிரதான வேலைகளை நிறைவுறுத்தியோர் விபரம்

| | | | |
|---|---|---|---|
| 1. | பிள்ளையார் கோவில் | - | ம.செல்லையா குடும்பம் |
| 2. | முருகன் கோவில் | - | த. சின்னத்தம்பி குடும்பம் |
| 3. | வைரவர் கோவில் (புணரமைப்பு) | - | து. தவரத்தினசிங்கம் குடும்பம் |
| 4. | நாகதம்பிரான் கோவில் | - | கு.குலசிங்கம் குடும்பம் |
| 5. | மணிக்கோபுரம் (புணரமைப்பு) | - | து. ஆனந்தம் குடும்பம் |
| 6. | சண்டேஸ்வரி கோவில் | - | ப . அரியரத்தினம் குடும்பம் |
| 7. | மூலவிக்கிரகங்கள் | - | வீ. கந்தையா குடும்பம் |
| 8. | சிங்கவாகனம் | - | க. லகுமதன். பெரியபளை |
| 9. | எலி வாகனம் | - | சிவசுப்பிரமணியம் குடும்பம் |
| 10. | சுற்றுமதில் | - | வீரசிங்க முதலியார் குடும்பம் |
| 11. | வசந்தமண்டபம் | - | வீரசிங்க முதலியார் குடும்பம் |
| 12. | மயில் | - | து. ஆனந்தன் |
| 13. | குதிரை | - | து. தவரட்ணசிங்கம் |
| 14. | பிள்ளையார் எழுந்தருளி | - | ம. செல்லையா குடும்பம் |
| 15. | முருகன் எழுந்தருளி | - | த. சின்னத்தம்பி குடும்பம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலய வருடாந்த அலங்கார உற்சவத் திருவிழா உபயகாரர்கள்.

| | | | |
|---|---|---|---|
| 1ஆம் நாள் | திரு. சே. கனகசபை | – | பெரியபளை |
| 2ஆம் நாள் | திரு. பொ. வரதராசன் | – | பெரியபளை |
| 3ஆம் நாள் | திருமதி இ. பத்மநாதன் | – | பெரியபளை |
| 4ஆம் நாள் | திரு. த. முத்துத்தம்பி | – | பெரியபளை |
| 5ஆம் நாள் | திரு. வீ. கந்தையா | – | பெரியபளை |
| 6ஆம் நாள் | திரு. வீ. சுப்பிரமணியம் | – | பெரியபளை |
| 7ஆம் நாள் | திரு. க. சிவதீஸ்வரன் | – | பெரியபளை |
| 8ஆம் நாள் | திரு. த. சண்முகம் | – | பெரியபளை |
| 9 ஆம் நாள் | திருமதி ம. முத்துவேலு | – | பெரியபளை |
| 10ஆம் நாள் | திரு. ப. அரியரத்தினம் | – | பெரியபளை |
| 11 ஆம் நாள் | திரு. ம. செல்லையா | – | பெரியபளை |
| 12 ஆம் நாள் | திரு.சு.தவரத்தினசிங்கம் | – | பெரியபளை |
| 13ஆம் நாள் | திரு. செ. சிவஞானம் | – | பெரியபளை |
| 14 ஆம் நாள் | திரு. து. ஆனந்தன் | – | பெரியபளை |
| 15ஆம் நாள் | திரு. க. சின்னத்தம்பி | – | பெரியபளை |
| வைரவர் சாந்தி | திரு. சி. விநாசித்தம்பி | – | பெரியபளை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலயப் பிரதிஷ்டா பிரதமகுரு

### அவர்களின்

# ஆசிச்செய்தி



"குடமுழுக்குப் பெருகி மகிழ்ச்சி பொங்கட்டும்"

ஆன்மாக்களின் ஈடேற்றத்தின் பொருட்டே இறைவன் பல்வேறு வடிவங்கள் தாங்கிக் கோவில்களிலே எழுந்தருளி இருக்கின்றார். அங்கு இடம்பெறும் விழாக்கள் மனித சமுதாயத்தை வளம்படுத்த ஏதுவாக அமைகின்றன. கோவில்கள் கலைகளின் இருப்பிடமாகவும், ஆன்மிகப் பயிற்சி நிலையங்களாகவும், உயிர்களின் உணர்வைக் கடவுள்பாற் செலுத்துவதற்கு ஏற்றவகையில் அங்கே விக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்யப்படுகின்றன. பிரதிஷ்டை என்றால் மந்திரோக்தமாகச் சுவாமி சிலையை நல்லபடி நிலைநிறுத்துதல் ஆகும். இதனைப் பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் எனப் பிரசித்தமாக அழைப்பர்.

மனிதன் முற்காலத்தில் இயற்கையையே வழிபட்டான். பின்னர் அவற்றை எல்லாம் இயக்குவதற்குச் சக்திமிக்க ஒருவர் இருக்கவேண்டும் என நம்பினான். அவரே கடவுள். அவரே அனைத்தையும் படைக்கவும், காக்கவும், அழிக்கவும், மறைக்கவும், அருளவும் வல்லவர். எனவே, இப்படியாக எமக்கு வாழ்வுதந்த அவரை நாம் ஆராதிக்கவேண்டும். அதற்காக அமைந்தவையே ஆலயங்கள். இயற்கை என்னும்போது அது நிலம், நீர், காற்று, தீ, ஆகாயம் ஆகும். கோவில்களும், அங்கு இடம்பெறும் பூஜைகளும் பஞ்சபூத சம்பந்தமாகவே நடைபெறுகின்றன. பூமி சம்பந்தமான கல்லிலே சிலைவடித்து நீர்கொண்டு கும்பம் வைத்து, அக்கினியாலே சக்தியை ஆவாகித்து, வாயுரூபமான மந்திரம் உருவேற்றி, இப்பிர பஞ்சமான உலகில் நிலைநிறுத்தி வழிபடலாகும்.

அந்தவகையிலே தான் இரட்டைக்கேணி கண்ணகை அம்பாள் ஆலயமும் அமைக்கப்பட்டதாகும். பூமியிலே கல்லுக்கண்டம்வரை அத்திவாரம் வெட்டி நீர் சுரக்கக் கண்டு; அடியார்கள் "ஓம் சக்தி" என ஒரு லட்சம் மந்திர உருவேற்றிய ஓலைகளை அத்திவாரத்திலிட்டு, யந்திரம்வைத்து அதன்மேல் அம்பாளைப் பிரதிஷ்டை செய்திருக்கின்றோம் இத்துணைச் சிறப்புமிக்க கும்பாபிஷேகம் வேறு எங்கும் நடைபெற்றதாக நான் அறியேன். இவையெல்லாம் அந்தப் பராசக்தியின் திருவருளே எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து நாற்பத்தெட்டு நாட்கள் முழுமண்டலமாக அபிஷேகம் நடைபெறுவதும் மிகச் சிறப்பாகும். அதில் அபிஷேகம், தூப, தீப ஆராதனை, கீதம், நிவேதனம், கீதம் என்ற ஒழுங்கும் பஞ்சபூத சம்பந்தமானதாகும்.

இம்மண்டலாபிஷேகத்தைத் தொடர்ந்து பல விரத விழாக்கள், உற்சவங்கள் எல்லாம் நடைபெற்று இவ்வாலயம் மென்மேலும் ஆன்மிகம் வளர்ப்பதில் முன் நிற்கும் என்பதில் ஐயமில்லை.

கலைமிகு கோவிலைக் கட்டிக் கும்பாபிஷேகத்தையும், மண்டலாபிஷேகத்தையும் சிறப்புற நடாத்த முன்னின்றுழைத்த ஆலய பரிபாலன சபையினர், ஊர்ப் பொதுமக்கள், இன்னும் வெளிநாடுகளிலுள்ள அம்பாள் அடியார்கள், நிதி உதவி, ஆலோசனை, சரீர உதவி செய்த அன்பர்கள் எல்லோருக்கும் சக்தியின் திருவருள் கிடைக்கப் பிரார்த்திப்பதோடு; மஹாகும்பாபிஷேகச் சிறப்புமலராக வெளிவரும் இம்மலர் பக்தி மணம் வீசும்வண்ணம் அனைவரின் இல்லங்களையும் அலங்கரிக்க அம்பாள் திருவருளோடு எனது குரு ஆசிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

" இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க"

**சிவஸ்ரீ இ. கேதீஸ்வரக்குருக்கள்,**
*பிரதமகுரு,*
*உசன் கந்தசுவாமி கோயில்,*
*மிருசுவில்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆலய பூசகர் அவர்களின்

# ஆசிச்செய்தி

எமது பிரதேசத்தின் நடுநாயகமான பளை நகரப் பகுதியில் 1900க்குப் பின் வாழ்ந்த மக்களின் முதன்மை யாளரான சு. வே. என அழைக்கப்படும் சுப்பிரமணியம் வேலுப்பிள்ளை அவர்களால் உருவாக்கப்பட்ட இவ்வால யமானது 1952ஆம் ஆண்டில் முதலாவது குடமுழுக்கு விழாவை நிறைவு செய்திருந்தது.

தொடர்ந்து 1983ஆம் ஆண்டில் நடைபெற்ற இரண்டாவது கும்பாபிஷேக மானது இவ்வாலயத்தின் பல்வேறு அமைப்பு வடிவங்களை மாற்றியது. சைவக் கோவில்களிலே சைவ அர்ச்சகர்கள்மூலம் பூசைகள் நிறைவேற்றவேண்டுமெனக் கருதிய எமது மாவட்ட முன்னோடியும், குருகுல பிதாவுமான திரு. அப்புஜி கதிரவேற்பிள்ளை அவர்களால் வளர்த்தெடுக்கப்பட்ட சைவக்குருமார்களில் ஒருவராகிய நான், எனது தந்தையாரின் வழிப்படுத்தலின் பின் இவ் ஆலய பூசகராகப் பணியாற்றப் பேறுபெற்றேன். எனது பணிக்காலத்தில் 1999இல் மீளவும் கும்பாபிஷேகம் செய்யவேண்டுமென எண்ணிய ஊர்மக்களால் இவ் ஆலயம் பாலஸ்தாபனம் செய்யப்பட்டபோதும், பல்வேறு நெருக்கடிகளால் ஒரு தசாப்த காலமாக இந்தப்பணி பூர்த்தியடையவில்லை என்ற பெரும் கவலையோடு இருந்த எல்லோருக்கும் ஒரு நல்நாளாக 02.09.2011 அமைந்தது மகிழ்ச்சிக்குரியது. அம்பிகையையும், எல்லாப் பரிவார மூர்த்திகளையும், அவர்களுக்கெனத் தனித்தனியாக அமைக்கப்பட்ட ஆலயங்களில் திருநிலைப்படுத்தி, எல்லோர்க்கும் அருள்பாலிக்கக் கிடைத்த இந்நாளை வரலாற்றில் ஒரு பொன்னாளாகப் பதிந்து என் ஆசிகளைப் பகிர்ந்துகொள்கிறேன்.

நன்றியுடன்,

**திரு. செ. கனகசபை,**

*அருள்மிகு இரட்டைக்கேணி*

*கண்ணகை அம்பாள் ஆலயப் பூசகர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# செஞ்சொற் செல்வரின் ஆசிச்செய்தி

அம்பிகையைச் சரணடைந்தால் அதிகவரம் பெறலாம். அற்புதம் நிறைந்த பளை – இரட்டைக்கேணி அம்மன் ஆலயத்திலே திருப்பணி வேலைகள் நிறைவுபெற்று மஹா கும்பாபிஷேகம் நடைபெறுவது அறிந்து மிகவும் ஆனந்தமடைகிறேன். தெய்வத் திருத்தலங்களைப் பாதுகாப்பது எம் கடனாகும். போரின் அனர்த்தங்களால் எமது சமூகம் இழந்தவை ஏராளம். திருக்கோவில்களும்; சன்னங்களையும் ஏவுகணைகளையும் சந்தித்து உருக்குலைந்தமை மறக்கமுடியாது. பளைவாழ் சைவமக்கள் தம் பாரம்பரிய கோவிலை மீளவும் நிலைநிறுத்தி மக்கள் மனங்களை ஆற்றுப்படுத்துவது பாராட்டுக்குரியது. ஆன்மிகப் பலம் மக்களுக்கு மிகவும் அவசியம். எல்லாத் துயரையும் மேம்படுத்தவல்ல சக்தி வழிபாட்டின் மூலம் மக்கள் பெறுவர்.

எனவே, இரட்டைக்கேணி அம்மன் ஆலயத் திருப்பணியில் ஈடுபட்ட அனைவருக்கும் என் இனிய பல வாழ்த்துக்களும் நன்றிகளும் உரித்தாகுக.

"யாவர்க்குமாம் இன்னுரைதானே"

**திரு. ஆறு.திருமுருகன்**
*தலைவர்,*
*தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்காதேவி*
*தேவஸ்தானம்,*
*தெல்லிப்பளை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர்**

அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

கிளிநொச்சி மாவட்டத்தின் வடபுலத்தே அமைந்திருக்கும் பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலகப்பிரிவின் மையப்பகுதியான பளை நகரத்தில் அமைந்து, மக்கள் யாவருக்கும் ஆன்மிக அருள்பாலித்துவரும் அருள்மிகு இரட்டைக்கேணி கண்ணகை அம்மன் ஆலயம் புனரமைக்கப்பட்டுப் புதுப்பொலிவோடு புனராவர்த்தன கும்பாபிஷேக நிகழ்வை நிறைவுசெய்திருப்பது கண்டு உவகையடைகின்றேன். தொடர்ச்சியான இடப்பெயர்வும், அலைவுமாக இருந்த இப்பிரதேச வாழ்வில் மீண்டும் அமைதியும், நிம்மதியும் கிடைக்கவும்; தென்னைச் செய்கையில் புதுப்பொலிவு கண்டு வருமானம் உயர்ந்து வளம் பெருகவும்; மக்கள் யாவரும் கடந்தகாலத் துன்ப நிகழ்வுகளிலிருந்து மீண்டு புதிய சுதந்திரமான வாழ்விற்குள் நுழையவும்; எல்லாம்வல்ல அம்பிகையின் திருவருள் கிடைக்கவேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

**செ. ஸ்ரீநிவாஸன்,**
*மேலதிக மாவட்டச் செயலாளர்,*
*மேலதிக அரசாங்க அதிபர்,*
*அரச அதிபருக்காக,*
*கிளிநொச்சி மாவட்டம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



### கிளிநொச்சி மாவட்ட இளைப்பாறிய அரச அதிபர்

அவர்களின்

# ஆசிச்செய்தி

வன்னி வளநாட்டின் வடபால் அமைந்து, கிளிநொச்சி மாவட்டத்தின் தென்னை வளம் நிறைந்த பிரதேசமான பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தின் வரலாற்றுத் தொன்மைமிகு ஆலயங்களில் ஒன்றாக நகரின் மத்தியிலே கோயில்கொண்டமைந்து அடியவர்களுக்கெல்லாம் அருள்பாலித்துவரும் அருள்மிகு இரட்டைக்கேணி கண்ணகை அம்மன் ஆலயத்தின் குடமுழுக்கு நிகழ்வுக்கும், அதனை நினைவுகூர்ந்து வெளிவரும் இம்மலருக்கும் ஆசிகூறுவதில் நான் நிறைவடைகின்றேன். இந்துப் பண்பாட்டின் அடியொற்றி முறைப்படியான வணக்க வழிபாடுகள் மறைந்துவரும் ஒரு நெருக்கடியான சூழலில், எதிர்காலத் தலைவர்களான எமது இளைய தலைமுறையினருக்குப் பக்தி மார்க்கத்தைப் பகிர்ந்துகொள்ள இந்நிகழ்வுகள் நிச்சயம் உதவியளிக்கும். அத்துடன் இந்துமதப் பண்பாடுகளான பெரியோரைப் பேணுதல். ஏழை எளியவரை ஆதரித்தல், பெற்றோரை இழந்து ஏதிலிகளான பிள்ளைகளின் எதிர்காலத்தை உறுதிசெய்தல் போன்ற பல சமூகப் பணிகளில் நாம் எல்லோரும் மனத்திருப்தியோடு ஈடுபடல்வேண்டும். ஆதரவற்றோரின் வாழ்வின் வழித்துணையாக அனாதை இல்லங்களைவிட, அவர்கள் தத்தம் கிராமங்களிலேயே அவர்களின் உறவுகளாலும், நண்பர்களாலும் பராமரிக்கப்படும் நிலை உருவாக்கப் படல் வேண்டும். ஏழைகளின் இதயங்களில் இறைவன் குடியிருக்கிறான். ஏதிலிகளைப் பராமரிப்பதே இறைபணி. இவ்வழிபாடு எல்லோரும் இணைந்து கொள்ள எல்லாம்வல்ல உருத்திரபுரீஸ்வரர் அருள்மழை பொழியவேண்டி என் ஆசிகளை உளமாரத் தெரிவிக்கின்றேன்.

**தி. இராசநாயகம்,**
*தலைவர், கிளிநொச்சி,*
*மகாதேவ சைவச் சிறுவர் இல்லம்,*
*வடக்கு மாகாண சபையின்*
*பொது நிர்வாக அமைச்சின்*
*பிரதி பிரதம செயலாளரும், முன்னாள் அரச அதிபர்,*
*கிளிநொச்சி மாவட்டம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பச்சிலைப்பள்ளி உதவி அரசாங்க அதிபர்

அவர்களின்

## வாழ்த்துச் செய்தி

கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளிப் பகுதியிலே, பளை நகரத்தின் மத்தியிலே நாயகியாக வீற்றிருந்து அருள்பாலித்துக்கொண்டிருக்கும் இரட்டைக்கேணி அம்பாள் ஆலயத்தின் புனருத்தாரனப் பணிகள் இனிதே நிறைவெய்தி மஹா கும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டுப் பெருமகிழ்வடைகின்றேன். இடப்பெயர்வினால் எமது பகுதி மிகவும் சேதமடைந்திருந்தது. இதில் ஆலயமும் விதிவிலக்கல்ல. இச் சேதமடைந்த ஆலயங்களையெல்லாம் பார்க்கும்போது எப்போது புதுப்பொலிவு பெற்று இப்பிரதேசத்தை அழகுறச் செய்யும் என்ற ஏக்கம் தொடர்ந்துகொண்டிருந்தது.

"கோயில் இல்லா ஊரிற் குடியிருக்க வேண்டாம்" என்பதற்கிணங்க இப்பிரதேச மக்களின் பரிபூரண ஒத்துழைப்பினாலும், உதவியினாலும் அம்பிகையின் அருளினாலும் மிகவும் விரைவாகவும் அழகாகவும் புனருத்தாரனம் செய்யப்பட்டு மீண்டும் புதுப்பொலிவு பெற்று மஹா கும்பாபிஷேகம் நடைபெறுவதைக் கண்டு மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். அத்தோடு இவ் ஆலயத்தின் திருப்பணி வேலைகள் இத்துடன் நிறுத்தப்படாது தொடர்ந்து ஆலயம் அபிவிருத்தி காணவேண்டும். இதற்கு எமது பிரதேச மக்கள் ஒத்துழைப்பு நல்கவேண்டி இக் கும்பாபிஷேகம் நடைபெறும் இவ்வேளையில் ஆசிச்செய்தி வழங்குவதிற் பெருமகிழ்வு அடைவதோடு; அம்பாளின் அருள் யாபேர்க்கும் கிடைக்கவேண்டும் எனப் பிரார்த்திக்கின்றேன்.

**த. முகுந்தன்,**
*உதவி அரசாங்க அதிபர்,*
*பச்சிலைப்பள்ளி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



### ஆலயக் காப்பாளர் அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

பச்சிலைப்பள்ளிப் பழம்பெரும் கிராமத்தில்; மா,பலா, வாழை எனும் முக்கனி மரங்களும்; தெங்கு, பனை, அடர்ந்த சோலை தனில் A ஒன்பது வீதியின் அருகில் அருளாட்சி கொடுத்து அமைந்திருப்பதுதான் இரட்டைக்கேணி அம்பாள் ஆலயம்.

இவ் ஆலயம் செல்லையா மணியகாரரின் முயற்சியினால் தனது சொந்தக் காணியில் இரண்டு கேணிகளின் நடுவில் அமைக்கப்பட்டு, விளக்குவைத்து வழிபாடு இயற்றப்பட்டு வந்தது. அவரின் மறைவின்பின் சுப்பர் வேலுப்பிள்ளையின் பாரமரிப்பிலே காரதீவான் தோட்டம், பரவைக்குளத் தாழ்வயல் நிலப்பரப்பு, பெரியபளை தென்னம்தோப்பு எனப் பல நிலப்பரப்புக்களுடன் இவ்வாலயம் அமைந்து சிறப்பான அருளாட்சி கொடுத்து வந்தது. ஆலயத் தேவைகளை இவ்வருமானம் பூர்த்திசெய்தது. அவரின் மறைவின்பின் செல்லத்துரை என்ற மருமகனின் நிர்வாகத்தில் மூத்த புத்திரன் கந்தசாமியின் பூசை வழிபாட்டுடன் ஆலயம் மிளிர்ந்தது. கந்தசாமி திருமண பந்தத்தில் இணைந்தபின், செல்லத்துரை மணியகாரரின் மகன் கனகசபை (மணியம்) பூசை ஒழுங்குகளைப் பொறுப்பேற்று இன்றுவரை திறம்பட நடாத்திவருவது பாராட்டத்தக்கது.

மூன்று இடப்பெயர்வுகளின்போதும் எமது கண்ணகை அம்மன் தனது அடியவர்களைக் காத்து வருகின்றது. கிராமியத் தெய்வமான கண்ணகி வழிபாடு சீர் சிறப்புடன் பொங்கல், குளிர்த்தி, அலங்கார உற்சவம் எனச் சிறப்பாகப் பாற்காவடி, கரகக்காவடி, கற்பூரக்காவடி எனப் பக்தர் புடைசூழ நடைபெறுவது வழக்கம். அம்பி கைக்கு உகந்த காத்தவராயன், சிந்து நடனக் கூத்தும் வருடாவருடம் சிறப்பாக நடைபெற்றது.

பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு தடவைதான் ஆலயங்களிற் மஹா கும்பாபிஷேகம் நடைபெறுவது வழக்கம். இவ் ஆலயம் பாலஸ்தாபனம் செய்து இடம் பெயர்வைச் சந்தித்துப் பன்னிரெண்டு வருடங்களின்பின் குடமுழுக்கு நடை பெறுவது ஒரு புதுமை. இவ்வாலயம் இதற்குமுன் நடைபெற்ற கும்பாபிஷேகத்திற் பிள்ளையார், முருகன் தெய்வங்களைத் தன் கருவறையில் வைத்தே நடைபெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்முறை நடைபெற்ற கும்பாபிஷேகம் விநாயகர், கண்ணகா பரமேஸ்வரி, முருகன், நாகதம்பிரான், வைரவர், சண்டேஸ்வரி எனத் தனிக்கோயில்கள் அமைத்துக் குடமுழுக்கு நடைபெற்றது அம்பிகையின் புதுமை என்றே எண்ணத் தோன்று கின்றது.

இடப்பெயர்வின் மத்தியிலே சகல சொத்துக்களையும் இழந்து நிர்க்கதியான நிலையுடன் தமது சொந்த மண்ணிற் காலடி எடுத்துவைத்த மக்கள்; முதலில் தமது குல தெய்வத்திற்குக் கோயிலமைத்துக் குடமுழுக்கு விழாவைச் சீர்சிறப்பாகக் கொண்டாடி, மண்டலாபிஷேகம் நடத்துகின்றனர் என்றால்; மக்களுக்கு அம்பிகை யின் நம்பிக்கை, அருளாட்சி, வெள்ளிடை மலையாகப் பரிணமிக்கின்றது.

சங்காபிஷேக நாளில் இக் கும்பாபிஷேக மலர் வெளிவருவது சாலப் பொருத்தமானதொன்றாகும். "கோயிலில்லா ஊரிற் குடியிருக்க வேண்டாம்" என்றனர் ஆன்றோர். அவ்வூர்த் தெய்வத்தின் வரலாற்றை நூல் வடிவாக்கி ஆவணப்படுத்தி; கற்றோரும், மற்றோரும் தம் கரங்களில் தவழவிடுவது நிர்வாகத் தின் தலையாய கடமை. எனவே, இம்மலர் சிறப்பாக மலர்ந்து பரிணமிக்க எமது மனமார்ந்த வாழ்த்தினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

" மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்"

ஓம் பராசக்தி, ஓம் பராசக்தி, ஓம் பராசக்தி.
ஓம் பராசக்தி, ஓம் பராசக்தி, ஓம் பராசக்தி.

**திரு. ப. அரியரத்தினம்,**
*மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்,*
*கிளிநொச்சி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



### ஆலயக் காப்பாளர் அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

பளை, இரட்டைக்கேணி திருவருள்மிகு கண்ணகை அம்பாள் தேவஸ்தான மஹாகும்பாபிஷேகப் பெருவிழா மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதிற் பெருமகிழ் வடைகின்றேன்.

திருமூலரால் "சிவபூமி" என்று வர்ணிக்கப்படும் ஈழத்திருநாட்டின் வடபால், சிகரம் போல் விளங்கும் யாழ்ப்பாணத்தின் கிழக்கே; நீர்வளம், நிலவளம் கொண்டு வேளாண்மையால் மேலோங்கித் திகழும் கிளிநொச்சி மாவட்டத்தில்; சைவமும், தமிழும் தழைத்தோங்கும் பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தின் பளை மாநகரிற் குடிகொண்டு; வேண்டுவோர்க்கு வேண்டும்வரம் அனைத்தும் வழங்கி அருள்புரியும் பளை– இரட்டைக்கேணி கண்ணகை அம்பாளுக்கும், பரிவார மூர்த்தி களுக்கும் கும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு அம்பாளின் அடியவன் என்ற வகையிலும், அக்கிராமத்தின் மைந்தன் என்றவகையிலும் நான் மிக அகமகிழ்வடைகின்றேன்.

மிகவும் தொன்மையான வரலாற்றுப் பின்னணியையும், பூர்வீகக் குடிகளையும் கொண்ட பளை நகரிலே, ஆதிகாலம் தொட்டு அப்பிரதேச மக்களின் வாழ்க்கைச் செழுமைக்கும், அவர்களின் வாழ்வின் சிறப்பிற்கும் வழிகாட்டி அருள்புரிந்துவரும் கண்ணகைத் தாயின்- மஹா கும்பாபிஷேகம் சிறப்புற நடந்தேறியதையிட்டு புளகாங்கிதமடைகின்றேன்.

"கோயில் இல்லா ஊரிற் குடியிருக்க வேண்டாம்"

எனும் கூற்றுக்கு இணங்கக் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் கண்ணகா பரமேஸ்வரியின் சிறப்பும், பெருமையும் சொற்களில் அடங்காதவை.

நாட்டில் நிலவிய போர்ச்சூழலின் காரணமாகப் பாதிக்கப்பட்ட பல தமிழ்ப் பிரதேசங்களிற் பளைப் பிரதேசமும் விதிவிலக்கல்ல. இன்று அந்தச் சூழலில் இருந்து விடுபட்டு மக்கள் மீளக்குடியமர்ந்துள்ள நிலையில் அம்பாளுக்குக் கும்பாபிஷேகக் கைங்கரியம் நடைபெறுவது சாலப்பொருத்தமானது. கடந்த 12 வருடங்களாகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலஸ்தாபனம் செய்யப்பட்ட நிலையில் அம்பாளின் ஆலயம் புனருத்தாரணம் செய்யப்பட்டது. தொடர்ந்து நாட்டில் ஏற்பட்ட குழப்பங்கள் காரணமாகப் பல்வேறு இடப்பெயர்வுகளையும் கட்டடப் பொருட்களுக்கு ஏற்பட்ட தட்டுப்பாடு, நிதிப்பற்றாக் குறை காரணமாகவும், அம்பாளை உரிய இடத்தில் அமரச்செய்ய முடியாத சூழ்நிலை ஏற்பட்டது.

தற்போது எல்லாம்வல்ல இறைவி, தனது இருப்பிடத்திற்குச் செல்வதற்கான சூழ்நிலை எட்டப்பட்டு, மஹா கும்பாபிஷேகப் பெருவிழா நடந்தேறியுள்ளது. நீண்ட இடைவெளியின் பின்னர் அம்பாளின் குடமுழுக்குப் பெருவிழா நடந்தேறி குடமுழுக்குப் பெருவிழா கண்கொள்ளாக் காட்சியாக எம் மனதிற் பதிந்துள்ளது. சைவமும் தமிழும் தழைத்தோங்கும் இப்பிரதேச மக்களுக்கு எல்லாம்வல்ல கண்ணகைத்தாயின் அருட்கடாட்சம் கிட்டவேண்டும். இவ்வருளாலே இம்மக்களின் துன்பங்கள், துயரங்கள் யாவும் நீங்கி, ஒளிமயமான எதிர்காலம் கிடைக்கவேண்டும் என இறைவியை இறைஞ்சி, இம்மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதிற் பெருமகிழ்வு அடைகின்றேன்.

**திரு. சி. சண்முகானந்தன்,**
*காப்பாளர்,*
*பனை - இரட்டைக்கேணி*
*கண்ணகை அம்பாள் ஆலய பரிபாலனசபை,*
*உதவித் திட்டமிடற் பணிப்பாளர்,*
*பிரதேச செயலகம்,*
*வெங்கலச்செட்டிக்குளம், வவுனியா.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலய போஷகர் அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

"புதுப்பொலிவு பொங்கும் குடமுழுக்குப் பெருவிழா"




பச்சிலைப்பள்ளியின் மத்தியில் அமைத்து மூர்த்தி, தலம், தீர்த்தம், விருட்சம் என்பன ஒருங்கே அமையப்பெற்ற ஆலயமாக விளங்கும் அருள்மிகு இரட்டைக்கேணி கண்ணகை அம்மன் ஆலயத்தின் மூன்றாவது குடமுழுக்கு நிகழ்ச்சி குறித்து வெளியாகும் இம்மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் நான் பேருவகை யடைகின்றேன். கடந்த மூன்று தசாப்தகாலமாக இடப்பெயர்வு வாழ்வை முடிவுக்குக் கொண்டுவந்து எம்மக்கள் மீள நிலைப்படுத்தப்படும் காலகட்டத்தில், அம்பாளின் புனருத்தாரணமும் நிறைவுபெற்று; அதிகாலை கேட்கும் மணியோசை எம் உள்ளத்துக் கும், உடலுக்கும் ஒரு புத்துணர்வு தரும் செயற்பாடாகும். "ஆலய தரிசனம் கோடி புண்ணியம்" என்ற வகையில்; சமூகம் தன் முரண்பாடுகளை மறந்து ஐக்கியப்படவும், ஒருவருக்கொருவர் தம் புரிந்துணர்வை மேம்படுத்தவும், இந்தக் கோவில்களின் ஒன்றுகூடல் ஊக்கமளிக்கின்றது. சமூக நெறிமுறைகளின்பால் இளம் சமூகம் வழிநடாத்திச் செல்லப்பட்டாலே அவர்களின் எதிர்காலம் சிறப்புற அமையச் சந்தர்ப்பம் ஏற்படும். துரித விஞ்ஞான வளர்ச்சியும், அதன்மூலம் உருவாகியுள்ள நவீன தொழில்நுட்பக் கருவிகளும், சமூகத்தை நல்மார்க்கத்துக்குப் பயன்படுத்தும்போது சிறப்பானவை. ஆனால், அதே கருவிகள் தீயபாவனைக்கும் ஊக்கமளிக்கும் ஆபத்துக் காணப்படுகின்றன. ஆன்மிக வழிமுறைகளுக்கூடாகக் கட்டியெழுப்பப்படும் சமூக வளர்ச்சி அர்த்தபூர்வமான சமூக உருவாக்கத்திற்கு ஊக்கமளிக்கக் கூடியதாகும். போரோடும், புலம்பெயர்ந்த வாழ்வோடும் நிம்மதியற்று அலைந்த காலங்களின் துயர்நீங்கி; நாம் எல்லோரும் நிம்மதியாக வாழ எம்பெருமாட்டியின் அருள் அனைவருக்கும் கிடைக்கவேண்டி இம்முயற்சியில் ஈடுபட்ட நூல் வெளியீட்டுக் குழுவினருக்கும், நன்றிகூறி என் உளம் கனிந்த பாராட்டைப் பகிர்ந்துகொள்கின்றேன்.

**அ. கேதீஸ்வரன், B.A. (Hons.) M.Phil(ECON),**
*ஆலயப் போஷகரும்,*
*உதவித்திட்டமிடற் பணிப்பாளரும்,*
*மாவட்டச் செயலகம்,*
*கிளிநொச்சி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பளை மத்திய கல்லூரி அதிபர்

அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

பச்சிலைப்பள்ளி எனும் புகழ்பூத்த பெரும்பதியிலே, பளை நகரத்தின் மத்தியிற் புதுபொலிவு பெற்றுக் கண்ணை இமை காப்பதுபோற் காத்து அருள்பாலித்துக்கொண்டிருக்கும் இரட்டைக்கேணி அம்மனின் மஹாகும்பாபிஷேகம் அம்மனின் திருவருளால் இன்று நிறைவேறியுள்ள தருணத்தில், தேவியின் திருவருளையும், கோயிலின் சிறப்பையும் பிரதிபலிக்கும் வகையிற் கும்பாபிஷேகச் சிறப்புமலர் சிறப்புற அமைய, அன்னையிடம் மனதார வேண்டுகின்றேன்.

அம்மா எனும் போது அருகிருந்து காப்பவளே
இம்மா நிலத்தில் உன்னைப் போல் ஒரு தெய்வம் உளதோ
அன்னையே உன் திருவடி சரணம்
ஓம் சக்தி, ஓம் சக்தி, ஓம் சக்தி ஓம்

**திரு. க. குணபாலசிங்கம்**
*அன்னையின் அடியவர்,*
*அதிபர்,*
*கிளி/ பளை மத்திய மகா வித்தியாலயம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆலய பரிபாலன சபைத் தலைவர்
அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

பளை நகரின் செல்வமாக எல்லோர்க்கும் அருள் வழங்கும் அருள்மிகு இரட்டைக்கேணி அம்பாளது 3ஆவது குடமுழுக்குப் பெருவிழாவினைத் தலைமை தாங்கி நடாத்தக் கிடைத்த வாய்ப்பை நான் பெரும் பேறாகக் கருதுகின்றேன். அடிக்கடி நிகழ்ந்த இடப்பெயர்வு காரணமாக அம்பிகையின் ஆலயத்தில் குடமுழுக்குக் கிரிகையின் தேவை எழுந்ததால் எல்லோரும் கூடி ஒருவருட காலத்தில் நிறைவு செய்யத் திட்டமிட்டுப் பாலஸ்தாபனம் செய்யப்பட்டாலும், உரியவாறு அதனை நிறைவுசெய்ய முடியாமற் போயிருந்தது. கொடுமையான எல்லாக்காலங்களும் கழிந்து மீளவும் இன்று இவ்விழா எம் எல்லோரது பங்களிப்புடன் நிறைவு கண்டுள்ளது.

இதற்கெனப் பரிவாரங்களைப் பொறுப்பெடுத்து நிர்மாணித்துத்தந்த அனைவருக்கும் நான் நன்றி கூறுவதுடன்; உள்நாட்டிலும், வெளிநாடுகளிலிருந்தும் பெருமளவு நிதி உதவியளித்தோருக்கும் எனது நன்றிகள். அத்துடன் அரசின் சார்பில் உதவி கிடைப்பதற்கு அனுசரணை வழங்கியவர்களுக்கும் எனது பாராட்டுக்கள் உரித்தாகட்டும். எவ்வித முயற்சியுமின்றித் தாங்களாக முன்வந்து மண்டலாபிஷேகக் கிரியைகளையும், சங்காபிஷேகத்தையும் நிறைவேற்றிய முழு உபயகாரர்களுக்கும் நான் நன்றிகூறி; இக்குடமுழுக்கினை நிறைவேற்றித்தந்த அனைத்து அந்தணர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்து; அம்பாளின் அருள் அனைவருக்கும் கிடைக்கவேண்டி நிறைவுசெய்கின்றேன்.

**திரு. செ. கந்தசாமி**
*தலைவர், ஆலய பரிபாலனசபை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



### பச்சிலைப்பள்ளி பிரதேசசபை செயலாளர்

அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

பளையூர் இரட்டைக்கேணி அம்பாள் ஆலய நிர்வாகத்தினரால் வெளியிடும் இம்மலரிற்கு வாழ்த்துரை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

சைவத்தமிழ் மக்களின் சமய விழுமியங்களையும், பண்பாட்டுக் கருமங்களையும் வளர்ந்துவரும் சமூகம் அறிந்துகொள்ள வேண்டியது அவசியமாகும். இதனை உணர்த்தும் வகையில் இவ்வாலய நிர்வாகத்தினர் சிறந்த பணியை ஆற்றுவதை இட்டு மகிழ்ச்சி. வாழுகின்ற உயிர்களில் மனித இனம் பெருமையுடைய இனமாகும். இதனை வழிநடத்த விரும்பி சமயங்கள் உருவாக்கப்பட்டன. சமயங்கள் கொண்டிருக்கும் சடங்குகள் ஒவ்வொன்றும் ஆழமான கருத்துக்களைக் கொண்டவையாகும். சைவசமயச் சடங்கு, ஆலய வழிபாடு, விழா, பொதுச் செயற்பாடுகள் அனைத்தும் மனிதனை மனிதநேயப் பண்புகளுடன் வாழ வழிகாட்டுகின்றன. இதனை ஒவ்வொருவரும் புரிந்துகொண்டு வாழவேண்டியது இந்துதர்மம் ஆகும். இதனை முன்னிட்டு இரட்டைக்கேணி அம்பாள் ஆலயத்தினரால் வெளிவரும் இம்மலரானது இவ்வாலயத்தின் வரலாறு, ஆலய மகிமை மற்றும் சைவ விழுமியங்கள் என்பவற்றை உணர்த்துவதாக அமைவதையிட்டுப் பெருமிதமடைகிறேன். இவ்வாலயத்தினரது அயராத உழைப்பு, விடாமுயற்சியினாலும் மஹா கும்பாபிஷேகம் ஆனது சிறப்புற நடைபெற்றதோடு மலர் வெளியிடுவதையும் காணும்போது,

*"மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் - கண்துஞ்சார்*
*எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார் - செவ்வி*
*அருமையும் பாரார், அவமதிப்பும் நோக்கார்*
*கருமமே கண்ணாயினார்"*

என்ற ஔவையாரின் பாடலே நினைவில் வருகின்றது.

உலகெலாம் உணர்ந்து ஓதுவதற்கரிய இறைவன் எமதுள்ளத்துள் உறைந்து எம்மை வழிநடத்துவதுடன்; இவ்வுலக இயக்கத்திற்குக் காரணமாகவும் அமைந்துள்ளான். இறையருளை இல்லமெல்லாம் பிரகாசிக்கச் செய்வதற்கு வேண்டிய சக்தியை மக்கள் அனைவரும் பெறவேண்டி இம்மலர் வெளியீடு சிறப்புற நடைபெற எனது உளமார்ந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்"

**திரு. சி. சிவப்பிரகாசம்,**
*செயலாளர்,*
*பச்சிலைப்பள்ளி பிரதேசசபை, பளை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பச்சிலைப்பள்ளி கலாசார உத்தியோகத்தர்**

அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தின் ஏ–9 வீதிக்கருகில் பளை நகரத்தில் வீற்றிருந்து அடியவர்க்கு அருள்பாலிக்கும் அன்னையவளாம் இரட்டைக் கேணி அம்மன் ஆலய மஹா கும்பாபிஷேகம் நடைபெறுவதை யொட்டி வாழ்த்து வழங்க அவ்அம்பாள் அருள்பாலித்துள்ளதை இட்டு மனமகிழ்ச்சி கொள்கின்றேன்.

முல்லை, மருதம், நெய்தல் நிலங்களால் சூழ்ந்த பச்சிலைப்பள்ளி வன்னி மாவட்டத்தின் சிறப்புக்கள் பல கொண்ட ஒரு பிரதேச செயலர் பிரிவு ஆகும். இங்கு தென்னை, பனை வளங்களுடன் பக்தி மணம் கமழும் மக்கள் வாழும் பகுதி என்றால் மிகையில்லை. நீண்டகால யுத்தத்தாலே பாதிக்கப்பட்ட பளைப் பிரதேசத்தில் ஏற்பட்ட சேதங்களுக்கு ஆலயங்களும் விதிவிலக்கல்ல. "தேடிய கண்கள் தரிசனம் செய்யும்" எனும் வார்த்தைக்கிணங்க இப்பிரதேச மக்களின் அயராத உழைப்பும் பரிபாலன சபையினரின் அயராத முயற்சியும் குறிப்பாக தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோரின் முயற்சியில் புனரமைப்பு வேலைகள் பாராட்டப்பட வேண்டியவை. மீள்குடியமர்விற்கு என் இப்பிரதேசத்திற்கு வந்த நான் முதலில் சென்ற இடம் இக் கோயில் தான். மிக அதிகளவான யுத்த வடுக்களைத் தாங்கி நின்று இன்று புதுப்பொலிவு பெற்று விளங்குவது எல்லாம்வல்ல நாயகியின் அருளாகும். மீள்குடியமர்வின் பின் நடைபெற்ற முதல் நிகழ்வான ஆளுநரின் செயலாளரினால் "பாதிக்கப்பட்ட ஆலயங்களுக்குப் பூஜை உபகரணங்கள் வழங்கல்" நிகழ்வு இவ் ஆலயத்திலேதான் இடம்பெற்றது.

காலம் கனிந்து வந்துள்ளது. அபிவிருத்திப் பாதையிற் செல்லும் பச்சிலைப் பள்ளி கலை, கலாசாரத்துடன் உள்ளடங்கும் சமய நிகழ்வுகளும் சிறப்புற வேண்டுமென வேண்டி என் வாழ்த்துரையை நிறைவு செய்கின்றேன்.

நன்றியுடன்,

**திரு. பா. ஜெயதாசன்**

*கலாசார உத்தியோகத்தர்,*

*பிரதேச செயலகம், பச்சிலைப்பள்ளி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச்செய்தி

எல்லாம்வல்ல இறையருளை வேண்டிப் பணிந்து பளையில் நாம் வாழ்ந்த காலத்தில் எம்மை வாழ்வித்த தாய் இரட்டைக்கேணி அம்பாள் ஆவார்.

தாயினும் சாலப் பரிந்தூட்டும் தாயான இரட்டைக்கேணி அம்பாளை நாளும் காலையில் உச்சரித்த வண்ணமே இன்றும் கண் விழித்தெழுகிறோம். எங்கள் இரட்டைகேணி அம்பாள் பச்சிலைப்பள்ளிப் பிரதேச மக்களின் கண்கண்ட தெய்வ மாகப் பேசும் தெய்வமாக அருள்பாலிப்பவள். பலத்த போர் அனர்த்தங்களின் பின், பளை மக்கள் ஒன்றுகூடி, வரலாற்றுச் சிறப்புமிக்க பளை இரட்டைக்கேணி அம்பாள் ஆலயத்தைப் புனருத்தாரணம் செய்து, மஹா கும்பாபிஷேகத்தைச் சிறப்பாக நிறைவுசெய்த மனத்திருப்தியில் மகிழ்வாக இருப்பது மட்டற்ற நிறைவைத்தருகிறது.

ஆலயம் அமைத்தல், ஆலயத்தைப் பரிபாலித்தல், திருத்தொண்டில் ஈடுபடுதல், அருட்பணிகள் செய்தல், நிறைவாக அம்பாள் புண்ணியம்சேர வாழ்தல் என்பது மானிடப்பிறவியின் குறிக்கோளோடு கூடிய வாழ்க்கை முறை யாகும்.

நல்லநோக்குடன் வாழும் பச்சிலைப்பள்ளி மக்கள் வாழ்வு எல்லையில்லா ஆனந்தமாக அமைய இரட்டைக்கேணி அம்பாள் பாதம் பணிந்து, மஹா கும்பாபிஷேக மலர் எல்லோருக்கும் பயன்பெற வாழ்த்தி, வணங்கிப் பிரார்த்திக் கிறேன்.

**திரு. ஸ்ரீஸ்கந்தமூர்த்தி**
*பளை மகா வித்தியாலயம்,*
*முன்னாள் ஆசிரியர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இரட்டைக்கேணி கண்ணகை அம்பாள் ஆலய செயலாளர்
அவர்களின்

## ஆலய பரிபாலனசபை அறிக்கை

ஈழமணித்திருநாட்டின் வடபால் கிளிநொச்சி மாவட்டத்தில் தென்னை, பனை, மா, பலா, வாழையுடன் நெல் விளையும் நிலமதனில் சேர; சைவமும், தமிழும் தளைத்தோங்கி பச்சைப்பசேலெனத் திகழ்ந்திடும் பச்சிலைப்பள்ளி நகரின் மத்தியிலே; இரட்டைக்கேணியம் பதிதனில் எழுந்தருளித் தன்னை நாடிவரும் அடியார்களின் இன்னல்கள் களைந்து இன்னருள் பாலித்துக்கொண்டிருக்கும் எல்லாம்வல்ல இரட்டைக்கேணி கண்ணகை அம்பாளது காணற்கரிய அரும்பெரும் கண்கொள்ளாக் காட்சியாம் மஹா கும்பாபிஷேகத்தினைக் கண்குளிரக் கண்டு பேரானந்தமடைகின்றேன்.

எல்லாம்வல்ல எம்பெருமாட்டி இரு கேணிகளைத் தன்னகத்தே கொண்டிருப்பதனால் "இரட்டைக்கேணி கண்ணகை அம்பாள்" எனும் நிகரில்லா நாமத்தைச் சூடி நிற்கின்றார். வேண்டுவோர்க்கு வேண்டும் வரமனைத்தையும் ஈய்ந்தருளுகின்ற அம்பாளை இரட்டைக்கேணி அம்மாளாச்சி; இரட்டைக்கேணித் தாயே, இரட்டைக் கேணிக் கிழவியே என அன்பு நிறைந்த செல்லமாக அனுதினமும் அடியார்கள் அழைக்கின்றார்கள்.

தன்னடியார்மீது சோதனை கொடுத்துச் சோதித்து, நல்வரம் நல்கிடும் நாயகியின் அற்புதங்கள், அதிசயங்கள், புதுமைகள் சொல்லிலோ, எண்ணிலோ அடங்காதவை.

எம்பெருமாட்டியின் முதலாவது கும்பாபிஷேகம் 1953ஆம் ஆண்டு நடைபெற்றது. ஆலய வளர்ச்சியின் நன்மை கருதியும், அம்பாளது தொண்டர்கள் ஒன்றுபட்டு ஒற்றுமையுடன் செயற்பட வேண்டுமென்ற நோக்கோடும் 1982ஆம் ஆண்டில் ஆலய அறங்காவலர்சபை ஒன்று தெரிவுசெய்யப்பட்டது. அன்று தொடக்கம் ஆலயத்தில் நடைபெறுகின்ற நித்திய, நைமித்திய பூசைகள், வருடாந்தப் பொங்கல், வருடாந்த அலங்கார உற்ஷவம் மற்றும் சிவராத்திரிப் பூஜை, நவராத்திரிப் பூஜை, திருவெம்பாவைப் பூஜை, கந்தசஷ்டிப் பூஜை என விஷேஷ அபிஷேக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆராதனைகளுடன் மகேசுரபூஜை எனப்படும் அன்னதான நிகழ்வும் நடாத்தப்பட்டு வருகின்றன.

ஆலய வளர்ச்சியில் அதீத அக்கறையும் கரிசனையும் கொண்ட பெரியோர்களால் 1983ஆம் ஆண்டு அடுத்த கும்பாபிஷேகம் நடாத்தப்பட்டது. பரிபாலனசபையின் யாப்பு விதிகளுக்கமைவாக காலத்திற்கேற்ப நிர்வாகம் மாறுகின்றபோதிலும், அன்று தொடக்கம் இன்றுவரை பரிபாலன சபையின் அயராத முயற்சியும், உள்நாட்டில், வெளிநாட்டில் வாழ்கின்ற அம்பாளது பக்தர்களின் ஒத்துழைப்பும் வளர்ச்சிப் பாதைக்கு வழிவகுத்து நிற்கின்றது.

பற்ம அமைப்பிலிருந்த மூலஸ்தான மேற்பகுதியில் வெடிப்பு ஏற்பட்டிருந் தமையால் மழைநீர் உள்வரத் தொடங்கியது. இதேபோன்று சுவர்களிலும் வெடிப்புக்கள் ஏற்பட்டிருந்தது. இவை யாவற்றையும் கருத்திற்கொண்டு ஆலயப் புனருத்தாரனப்பணி மேற்கொள்ள வேண்டுமெனப் பரிபாலனசபையினரால் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு ஆலயத்துடன் ஈடுபாடுடையவர்களும், தொடர்புடை யவர்களும் மனமகிழ்வுடன் சம்மதித்தனர், அம்பாளிடமும் பூக்கட்டிப் பார்த்துத் திருப்பணி வேலைகள் ஆரம்பிப்பதற்கு விடைகிடைத்தது.

இதன் பிரகாரம் உஷன் கந்தசுவாமி ஆலயப் பிரதமகுரு "சொல்வாக்குச் சித்தர்" சிவஸ்ரீ இ. கேதீஸ்வரக்குருக்கள் அவர்களை நாடினோம். அவரும் அம்பாளது அருளினாலே அனைத்தும் நல்லபடி நிறைவேறும் என்றதுடன், புதிதாக ஒரு மூலஸ்தானத்தை அமைக்கும்போது நிலத்தை அகழ்ந்து தண்ணீர் கண்டு அத்திவாரமிட்டு, அதிலிருந்து செப்புக்குழாய் அம்பாளது ஆசனத்திற்கு வரும்போது அம்பாளது அருளும், அற்புதமும் மூர்த்திகரமும் நிறைந்திருக்குமெனவும் கூறினார்.

அத்திவாரம் போடும்போது "ஓம் சக்தி எனும் திருநாமத்தை அடியார்கள் அனைவரும் இயன்றளவில் அதிகமாக எழுதி அதிலே போடுவது சாலச்சிறந்தது." எனக் குருக்கள் ஐயாவினால் ஏற்கனவே கூறப்பட்டதற்கிணங்க பெருந் தொகையாக எழுதிவைக்கப்பட்டு அடியார்களின் அரஹரோஹரா ஒலிமுழங்க அம்பாளது மூலஸ்தான அத்திபாரம் போடப்பட்டது. அகழப்பட்ட அக்கேணியை நிரப்புவதற்கு 35க்கும் மேற்பட்ட மெசின் லோட் பவுண்டேசன் கல் போடப்பட்டது. அம்பாள் குடியிருக்கும் ஆலயமானது நிலையாகவும், உறுதியாகவும், பெறுமதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாகவும் அமையவேண்டுமென்ற ஆவலோடு மூலஸ்தானமும், இரண்டாம் மண்டபமும் முற்றிலும் பொழிகல்லினாலே கட்டப்பட்டது.

குருக்கள் ஐயாவின் அறிவுரைக்கமைய சாவகச்சேரியூரில் வசிக்கும் திரு. செல்லத்துரை என்பவரின் அளவுத்திட்டங்களுக்கேற்ப ஏழாலை மேற்கு, சுன்னாகத்தைச் சேர்ந்த திரு. அருணகிரிநாதன் என்பவரால் பொழிகல்லு கட்டுமாணப்பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது இடப்பெயர்வு ஏற்பட்டது. இதனையடுத்து மீளவும் திரும்பி நாம் வந்தபோது பாலஸ்தாபனம் செய்யப்பட்டிருந்த மண்டபமும் சேதமடைந்திருந்தது. இதன்பின் வேறோர் இடத்தில் மண்டபத்தை நிறுவி பாலஸ்தாபனம் நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து கட்டுமாணப் பணிகள் விரைவாக நடந்தமையால் மூலஸ்தான மேல்மட்டம் வரையும் 3ஆம் 4ஆம் மண்டபக்கட்டு வேலையும், கோப்பிசவேலையும் முடிந்து; ஓடு போடப்பட்டு, நிலவேலை நிறைவேற்றப்பட்ட நிலையில் எம் தலைவிதி மீண்டும் எம்மை அகதிகளாக இடம்பெயர வைத்தது. இதனால் திருப்பணி வேலைகளும் முடங்கப்பட்டது. யுத்தப் பிரதேசத்தின் விளிம்பில் இருக்கும் குற்றமோ; அன்றி எம் தலை எழுத்தோ; முதலிலும், அடுத்தடுத்தும் அகதிகளாகிவிடும் நிர்ப்பந்த வாழ்வு பச்சிலைப்பள்ளி வாழ்மக்களுக்கே உரியது.

இருப்பினும், தன் இருப்பிடத்தின் மீதியை நிறைவேற்ற வேண்டும்; அவ்வற்றைச் சுமந்திருக்கும் அடியார்கள் தன்னகத்தே வரவேண்டுமென்றெண்ணிய அம்பாளது அருளினாலே அனைத்தையும் இழந்து ஏதிலிகளாக 2010ஆம் ஆண்டு மீள வந்தோம். பயங்கரமான யுத்தத்தின் கோரத்தினால் சுடுகாடுபோன்று காட்சியளித்த பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் அம்பாளது மகிமையினால் ஆலயத்தில் எதுவித பாரிய சேதங்களும் ஏற்படவில்லை. இது கண்டு பக்தர்கள் அகமகிழ்வடைந்தனர்.

மீண்டும் குருக்கள் ஐயாவுடன் தொடர்புகொண்டோம். இதற்கமைய **16.04.2010** அன்று பிராயச்சித்த அபிஷேகம் நடைபெற்றது. இதனையடுத்து ஆலய நித்திய அர்ச்சகர் திரு. செ. கனகசபை அவர்களினால் வழமைபோன்று நித்திய பூஜை மேற்கொள்ளப்பட்டது.

அம்பாளது அருட்கடாட்சத்தின் பயனாகப் பரிபாலன சபையினரின் முயற்சியுடனும், அடியார்கள், தொண்டர்களினது ஒத்துழைப்புடனும், மிகுந்த உடல், உளத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துன்பத்தின் மத்தியிலும் பெரும் சுமையைச் சுமந்து நிற்கும் எமது சபைத் தலைவர் திரு. செ. கந்தசாமி அவர்களினது வழிகாட்டலிலும், ஆலயப் புனருத்தாரனப்பணி ஆரம்பிக்கப்பட்டது. ஏற்கனவே கட்டுமாணப்பணியினை மேற்கொண்டிருந்த குலனையூர், அராலியைச் சேர்ந்த திரு. ச. சந்திரசண்முகநாதன் என்பவர் தொடர்ந்து இக்கட்டுமாணப் பணியினை மேற்கொண்டார். இதற்கமைய இயன்ற வரை பணிகள் துரிதமாக நடைபெற்றன.

இப்பணி நிறைவேறுவதற்குப் பரிபாலன சபையினரின் அயராத உழைப்பும், உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் வாழ்கின்ற அம்பாள் அடியார்களின் நிதிப்பங்களிப்பும் மற்றும் இந்து கலாசார அமைச்சினால் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின்மூலம் கிடைக்கப்பெற்ற (400,000/=) நான்கு லட்சம் ரூபாவும் இப்பணிகளுக்கு உந்துசக்தியாக இருந்தது.

ஆலய உபயங்கள் வரிசையில் மூலமூர்த்தியாகிய அம்பாள் உபயமாகப் பெரிய பளை, பளையைச் சேர்ந்த திரு. வீ. கந்தையா குடும்பத்தினரும், பிள்ளையார் ஆலயம் பெரியபளை, பளையைச் சேர்ந்த திரு. ம. செல்லையா குடும்பத்தினரும், முருகன் ஆலயம் பெரியபளை, பளையைச் சேர்ந்த திரு. சின்னத்தம்பி குடும்பத்தினரும், நாகதம்பிரான் ஆலயம் பெரியபளை, பளையைச் சேர்ந்த திரு. கு. ஜீவகரன் குடும்பத்தினரும், வைரவர் ஆலயத் திருத்தவேலையினைப் பெரியபளை, பளையைச் சேர்ந்த திரு.சு. நவரத்தினசிங்கம் குடும்பத்தினரும், மணிக்கோபுரம் (மணிப்பட்டடை உட்பட) திருத்த வேலையினைப் பெரியபளை, பளையைச் சேர்ந்த திரு. து. ஆனந்தன் குடும்பத்தினரும், புதிதாகச் சண்டேஸ்வரி ஆலய உபயத்தினை பெரியபளை, பளையைச் சேர்ந்த திரு. ப. அரியரத்தினம் குடும்பத்தினரும் உபயமேற்று செவ்வனே நிறைவேற்றியுள்ளார்கள். இதேவகையில் மூலஸ்தான கலசத்தினைப் பெரியபளை, பளையைச் சேர்ந்த திரு. மு. கருணாகரன் குடும்பத்தினரும் உபயமேற்றுள்ளார்கள்.

வாகனங்கள் வரிசையிற் சிங்கவாகனத்தினைப் பெரியபளை, பளையைச் சேர்ந்த திரு.ந.லகுமதன் குடும்பத்தினரும், எலிவாகனத்தினை செந்தில்நகர், பளையைச் சேர்ந்த திரு. வ. சிவசுப்பிரமணியம் குடும்பத்தினரும், உபயமேற்றுள் ளார்கள். ஆலயத்திற்குச் சொந்தமாக ஓர் ஒலிபெருக்கித் தொகுதியினைப் பெரியபளை, பளையைச் சேர்ந்த திருமதி முத்துவேல் குடும்பத்தினர் உபயமாக வழங்கியுள்ளார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதேவகையில் நீர்த்தாங்கி மற்றும் பைப் லைன் என்பவற்றை உபயமாகப் புலோப்பளை, பளையைச் சேர்ந்த திரு. ம. விநாசித்தம்பி குடும்பத்தினர் நிறைவேற்றி வழங்கியுள்ளார்கள். ஆலய தரிசனத்திற்கு வருகின்ற அடியார்கள் பாவனைக்கென மேலும் ஒரு நீர்த்தாங்கியை உபயமாக திரு. ப. அரியரட்ணம் குடும்பத்தினர் வழங்கியுள்ளார்கள்.

மேலும், எம்பெருமாட்டியினது ஆலயத்திலே மேற்கொள்ளப்பட இருக்கின்ற திருப்பணிகள் வரிசையில் வெளிமண்டபம் 10 அடிவரையில் நீட்டுதல், தெற்கு, மேற்கு, வடக்குப் பக்கமதில் கட்டுதல், உள்வீதிச் சுற்றுக் கொட்டகை அமைத்தல், மடப்பள்ளி சீர்செய்தல், அன்னதானமடம் கட்டுதல், குதிரை வாகனம், மயில் வாகனம் என்பன செய்தல், வசந்தமண்டபம் கட்டுமாணப்பணி, வெளிவீதி செப்பனிடல், வீதி உலா வருவதற்குச் சகடை ஒன்று செய்தல்.

நன்றிக்குரியவர்கள் வரிசையில் திருப்பணி வேலைகளுக்கு முதுகெலும்பாக விளங்கும் திருப்பணி நிதியினை வாரிவழங்கிய உள்ளூர், வெளிமாவட்டங்கள் மற்றும் புலம்பெயர்ந்து வாழுகின்ற மெய்யடியார்களுக்கும் எமது அன்பு வேண்டுகோளை ஏற்று அம்பாளது இப்பெரும் கைங்கரியத்தை நிறைவேற்ற முன்வந்த எமது மதிப்பிற்குரிய சிவஸ்ரீ இ. கேதீஸ்வரக்குருக்கள் அவர்களுக்கும், பாலஸ்தாபன மண்டபத்திற்கு அளவுத்திட்டங்கள் தந்தும், புதிய மூலஸ்தான அமைப்பிற்கு அளவுப் பிராமணங்கள் வழங்கியும் உதவிபுரிந்த திரு. செல்லத்துரை அவர்களுக்கும், பொழிகல்லுப் பொழிந்து கட்டுமானப் பணியினை மேற்கொண்ட திரு. அருணகிரிநாதன் அவர்களுக்கும், அவரது குழுவினருக்கும், ஏனைய மண்டப கட்டுமாணப்பணிகளை மேற்கொண்ட திரு. ச. சந்திர சண்முகநாதன், அவரது குழுவினருக்கும், வர்ணவேலை செய்த இரா்சாவின் தோட்டம், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திரு. அ. மகேந்திரன் அவரது குழுவினருக்கும், கோப்பிசவேலையைத் திறம்படச் செய்த கிளிநொச்சி "ஈழவன் படமாடம்" திரு. யோகராசா அவரது குழுவினருக்கும், தொடர்பினை ஏற்படுத்தி உதவிபுரிந்த கிளியரசன் உரிமையாளர் எஸ். பிரபாகரன் அவர்களுக்கும், பூ அலங்கார வேலையினை அழகாகவும், யாக அலங்காரத்தினைத் திறப்படவும் வழங்கியவர் கச்சார் வெளியூர் திரு. இ. ரவீந்திரன் அவர்களுக்கும், சிற்ப வேலைகளை சிறந்தமுறையில் வடித்து வழங்கிய கலைநகர், சித்தங்கேணியைச் சேர்ந்த ஸ்தபதி செந்தூர்ராஜா அவர்களுக்கும், கலசங்களை ஆக்கித்தந்த யாழ்ப்பாணம் ஸ்தபதி பாஸ்கரன் ஆச்சாரியார் அவர்களுக்கும், இந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாசார அமைச்சினால் கிடைக்கப்பெற்ற நிதியினைப் பெறுவதற்கு மண்டப அளவீட்டு உதவிகள் புரிந்த பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக தொழில்நுட்ப உத்தியோகத்தர் திரு. யோகராசா அவர்களுக்கும், பச்சிலைப்பள்ளிப் பிரதேசசபை தொழில்நுட்ப உத்தியோகத்தர்களான திரு. ப. விஜயகுமார் மற்றும் திரு.ஞா. ரவிசுந்தரம் ஆகியோருக்கும், குறுகிய நாட்களில் மின்சார இணைப்பைப் பெறு வதற்கு மிகவும் உற்சாகமாக நின்று பேருதவிபுரிந்த திரு. மனோகரன் அவர்க ளுக்கும், சிறந்தமுறையில் மின்சார வயறிங் வேலையினை நிறைவேற்றிய திரு. றஜீவ் அவரது குழுவினருக்கும், தேவைகள் ஏற்படும் நேரமெல்லாம் தமது வாகனங்கள் மூலம் உதவிபுரியும் திரு. து. ஆனந்தன், திரு. பொ. அரியரட்ணம் அவர்களுக்கும், கும்பாபிஷேக நாளிலும், மண்டலாபிஷேக நாட்களிலும், ஏனைய உற்ஷவ காலங்களிலும் எம்மோடு தோள்கொடுத்துதவுகின்ற எமது ஆலய இளம் தொண்டர்களுக்கும், கட்டுமாணப் பணிக்காக ஆலயம் இடிக்கப்பட்டபோது நடை பெற்ற சிரமதானப் பணியில் தனது மாணவர்களையும் அழைத்துவந்து தானும் மிகவும் உற்சாகமாக நின்று உதவிபுரிந்த ஸ்ரீ சக்தி கல்வி நிலைய இயக்குநர் திரு.சு.தவரட் ணசிங்கம் அவர்களுக்கும், அவரது மாணவர்களுக்கும் முழுமூச்சுடன் நின்று எமக்கு ஒத்துழைப்பு நல்கிய பரிபாலன சபையின் முன்னைநாள் பொருளாளர் திரு. கு. ரவீந்திரன் அவர்களுக்கும், எவ்வேளையும் ஆலய வளவினைச் சுத்தமா கவும், ஏனைய சரீரத் தொண்டுகளையும் அற்பணிப்புடனும், புரிந்துகொண்டிருக்கும் திரு. க. நாகராசா, திரு. ச. பவானந்தன் அவர்களுக்கும், கும்பாபிஷேகத்தன்றும், மண்டலாபிஷேக நாட்களிலும் மிகவும் இனிமையாக மங்களஇசை வழங்கிய சாவகச்சேரியூர் K.S. கலையமூர்த்தி குழுவினருக்கும், எம்பெருமாட்டியினது கும்பாபிஷேகம் திறம்பட நடைபெற வேண்டுமென்ற நன்நோக்கோடு கும்பாபிஷேக நிதிவழங்கிய திருவிழா உபயகாரர்களுக்கும், கும்பாபிஷேகத்தின் பின் இற்றைவரை நடைபெற்ற மண்டலாபிஷேகம் திறம்படத் திருப்திகரமாக நடைபெறுவதற்கு உபயமேற்றது மட்டுமன்றி; அத்தனை நாட்களும் அம்பாளது சந்நிதானத்தில் அன்னதானம் நடைபெறுவதற்கு ஒத்துழைத்த உபயகாரர்களுக்கும், அன்னதா னத்தைச் சமைப்பதற்கு உதவிபுரிந்த இளைஞர் குழாத்திற்கும், கும்பாபிஷேகத் தினை உரியநேரத்தில் பக்திபூர்வமாக நிறைவேற்றுவதற்கு அர்ப்பணிப்புடன் செயற் பட்ட கும்பாபிஷேகக் குழுவினருக்கும், தொண்டர்களுக்கும், கடமையே கண்ணெ னத் தன் பணியினை அவ்வவ் வேளைகளில் பக்தி சிரத்தையுடனும், விசுவாசத்து டனும் நடாத்துவது மட்டுமன்றி பரிபாலன சபையினருக்கும் ஒத்து ழைப்பு வழங்கிக் கொண்டிருக்கின்ற நித்திய அர்ச்சகர் திரு. செ. கனகசபை அவர்களுக்கும், தனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பாலும், பண்பாலும் சீரியமுறையில் எம்மை வழிப்படுத்தும் பரிபாலன சபைத்தலைவர் திரு. செ. கந்தசாமி அவர்களுக்கும், என்னோடு தோளோடு தோள் கொடுத்து உதவுகின்ற பரிபாலனசபைப் பொருளாளர் திரு. து. ஆனந்தன் அவர்களுக்கும், சபையின் ஏனைய உறுப்பினர்களுக்கும் இம்மலரை வெளியிடுவற்கு ஆசியுரைகள், வாழ்த்துரைகள் வழங்கிய பெருந்தகை களுக்கும், பல சிரமங்கள் மத்தியில் ஒத்துழைப்பு நல்கிய மலர் வெளியீட்டுக் குழுவினருக்கும், இம்மலரை சிறந்தமுறையில் அச்சிட்டு வெளியிட உதவிய கரிகணன் அச்சகத்தினருக்கும், வெள்ளை அலங்காரம் செய்த திரு. துரைசிங்கம் (துரை) அவர்களுக்கும், இதுவரை நாளும் இரண்டு ஒலிபெருக்கியினை பாவிப்ப தற்கு வழங்கிய திரு. கந்தசாமி அவர்களுக்கும் எமக்குத் தேவைகள் ஏற்படும் வேளையில் எல்லாம் அவர்களை நாடும்போது இயன்றவரை உதவிபுரியும் அன்பிற் கும் மதிப்பிற்குமுரிய பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலர் திரு. க. முகுந்தன் அவர்களுக்கும், உத்தியோகத்தர்களுக்கும், இதேவகையில் அம்பாளின் அருகே இருக்கின்ற பச்சிலைப்பள்ளிப் பிரதேசசபை நாம் கேட்கும் உதவிகள் அத்தனை யையும் மனம் கோணாமல் வழங்கிடும் அம்பாள் பக்தன், பிரதேசசபைச் செயலாளர் அன்பிற்கும், மதிப்பிற்குமுரிய திரு. சி. சிவப்பிரகாசம் அவர்களுக்கும், உத்தியோகத் தர்களுக்கும், அம்பாள் அடியார்கள் அனைவர்க்கும் எமது பரிபாலன சபையின் சார்பாக மனம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மேலும், மஹா கும்பாபிஷேக நிகழ்வானது எம்பெருமாட்டியின் அருட் கடாட் சத்தினால் சிறப்புற நடைபெற உதவிய பிரதமகுரு சிவஸ்ரீ இ. கேதீஸ்வரக்குருக்கள் மற்றும் அனைத்து அந்தணப் பெருமக்களுக்கும் மனநிறைவான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

எல்லாவற்றிற்கும் எமக்குப் பலமாக அம்பாளது ஆலய வளர்ச்சியிலும், பரிபா லன சபையின் நிர்வாகத்திலும் அதீத அக்கறை கொண்டு அம்பாளின் நாமத்தை அனுதினமும் உச்சரித்துக்கொண்டிருக்கும் சபையின் காப்பாளரும், முன்னைநாள் செயலாளரும், வடமாகாண மேலதிக கல்விப் பணிப்பாளருமான எமது பேரன்பிற்கும், பெருமதிப்பிற்குமுரிய திரு. ப. அரியரட்ணம் அவர்கள் சபையில் வருகின்ற சரிபிழை களை உடனுக்குடன் தீர்த்து, எமக்கு அறிவுரைகள் கூறி எம்மை அன்பினால் வழிப்படுத்துகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும், எமது சபையின், சிறப்பாக அம்பாளது ஆலய வளர்ச்சியே எனது வளர்ச்சியும் நிறைவுமென அம்பாளைத் துதித்திடும் அம்பாளது தொண்டனும், கிளிநொச்சி மாவட்ட உதவித்திட்டமிடல் பணிப்பாளரும், பரிபாலனசபையின் போஷகருமான அன்பிற்கும், மதிப்பிற்குமுரிய திரு. அ. கேதீஸ்வரன் அவர்கள் ஆலயப் பணிகளின் போதும், மற்றும் எமது சபைக்கும், கிளிநொச்சி மாவட்ட செயலகத்திற்குமிடையிலும் ஏற்படுகின்ற தேவைகளை இலகுவான முறையில் துரிதமாகச் செய்து தருகின்றார்.

இவர்களுடன் எந்நாளும் உன்நாமம் எந்நாவால் துதிப்பதேயன்றி வேறொன்று மில்லையம்மாவென தினமும் அம்பாளின் வாசல் வருபவரும், அம்பாளிடத்தில் மிகுந்த அன்பும், நம்பிக்கையும் கொண்டவரும்; முன்னைநாள் கரைச்சி கோட்டக் கல்விப் பணிப்பாளருமான திருமதி இ. அரியரட்ணம் அவர்கள் இந்துக்களாகிய நாம் எவ்வாறு ஒழுகவேண்டும், ஆலயவழிபாடு பற்றிய சமய ரீதியிலான பல அறிவுரைகள் என்பனவற்றை வழங்கி வருகின்றார்.

இவர்கள் அனைவரினதும் அக்கறையும், வழிகாட்டலும் எமது சபையைச் சிறப்பிக்கின்றது. அனைத்துப் பணிகளையும் அற்பணிப்புடன் நிறைவேற்றிய அனைவர்க்கும் மீண்டும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு; அம்பாளது அருளாட்சி கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

கடமையின் நிமித்தம் தொலைவில் இருந்தாலும் சபையின் காப்பாளரில் ஒருவரும் வெங்கலச் செட்டிகுளப் பிரதேச செயலக உதவித்திட்டமிடல் பணிப்பாளரு மான திரு. சி. சண்முகானந்தன் அவர்களும் ஆலய வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாக இருந்து எமக்குப் பல ஆலோசனைகளை வழங்கி வருகின்றார்.

எல்லாவற்றுக்கும் மேலாக யாவும் இனிதே நிறைவெய்த இன்அருள் பாலித் தருளிய எல்லாம்வல்ல இரட்டைக்கேணி கண்ணகை அம்பாளின் பாதாரவிந்தங் களை வேண்டுகின்றேன்.

**திரு. து. திரவியரத்தினம்**
*செயலாளர்,*
*ஆலய பரிபாலன சபை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இரட்டைக்கேணி கண்ணகி அம்பாள் ஆலய பொருளாளர் அவர்களின்

# நிதி அறிக்கை

நீர்வளமும் நில வளமும் பொலிந்து இயங்கும் கிளிநொச்சி மாவட்டத்தில் வடபுலத்தே அமைந்திருக்கும் பச்சிலைப்பள்ளிப் பிரதேசமானது நீண்ட புராண வரலாறு கொண்ட பகுதியாகும். இலங்கைத் தீவின் வரலாற்றில் மூத்த குடிகளாகக் கருதப்படும் இயக்கர்கள், நாகர்கள் காலத்தில் இயக்கர்கள் அதிகம் வாழ்ந்த இடமாக இருந்ததனால் இயக்கச்சி என்ற காரண இடுகுறிப் பெயர்கொண்ட பகுதிகள் இப்பிரதேசத்தின் தொன்மை குறித்து சொல்லப்படும் வரலாறுகளின் தொடக்கமாகும். ஒல்லாந்தர் காலத்தின் நிர்வாகப் பிரிவுகளில் ஒன்றாக இருந்த இப்பிரதேசமானது அக்காலத்தில் முள்ளிப்பற்று இறையாகவும், பச்சிலைப்பள்ளிப் பிரதேசமாகவும் இருந்து வந்திருக்கிறது. பின்னர் யாழ்ப்பாண மாவட்டத்தின் நிர்வாகப் பிரிவுகளில் ஒன்றாக இருந்து கிளிநொச்சி மாவட்டம் தனித்து நிர்வாக அலகாகப் பிரிக்கப்பட்டபோது எமது மாவட்டத்தின் ஒரு நிர்வாகப் பிரதேசசெயலர் பிரிவாகச் செயற்பட்டுவருகிறது. இப்பிரதேசத்தின் தொன்மை வரலாற்றில் மக்களின் பக்தி மார்க்கத்துக்கும் உள அமைதிக்கும் வழிகாட்டுவதில் இந்து ஆலயங்களின் பங்கு காத்திரமானதாகும். இவ்வகையில் மல்வில் கிருஸ்ணர் ஆலயம், இரட்டைக்கேணி கண்ணகை அம்மன் ஆலயம், நெறியாய் அம்மன் கோவில், அறத்தி அம்மன் ஆலயம், இத்தாவில் முருகன் கோவில், நவனிவெளி அம்மன் கோவில், கச்சார் வெளிப் பிள்ளையார் கோவில், செருக்கன் சாட்டி அம்மன் கோவில், மாசார் பிள்ளையார் ஆலயம், இயக்கச்சிப் புன்னையடி வைரவர், தர்மக்கேணி பூதவராயர் ஆலயம், பளை நகர வைரவர் ஆலயம், முல்லையடி திராய்க்கரை அம்மன் ஆலயம், மொண்டுவான்வைரவர் ஆலயம் போன்ற ஆலயங்கள் இப்பிரதேச மக்களின் பிரதான வழிபடு தலங்களாக இருந்து வருகின்றன. இதில் பளை நகரின் மத்தியில் அமைந்த மூர்த்தி, தலம், தீர்த்தம், விருட்சம் என்பன ஒருங்கே அமையப்பெற்ற இரட்டைக்கேணி அம்மன் ஆலயத்தின் 3ஆவது புனராவர்த்தன மஹா கும்பாபிஷேக மலருக்கு இவ்வாலயத்தின் பொருளாளர் என்ற வகையில் என் கருத்துக்களைப் பகிரக் கிடைத்த வாய்ப்பை நான் உவகையுடன் பகிர்ந்து கொண்டு பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் மீள் குடியமர்வின் பின் நாம் எமது பகுதியில் உள்ள அனைவரிடத்திலும் விடுத்த வேண்டுகோளை ஏற்று பல அன்பர்கள் தமக்கென வேலைகளைப் பொறுப்பேற்று நிறைவேற்றினார்கள். இதில் பரிவாரங்களாக அமைந்த விநாயகர் ஆலயத்தை திரு.ம.செல்லையா குடும்பமும், முருகன் ஆலயத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி மங்கயற்கரசி குடும்பமும், வைரவர் ஆலயத்தை திரு. சு. தவரட்ணசிங்கம் குடும்பமும், நாகதம்பிரான் ஆலயத்தை திரு. குலசிங்கம் குடும்பமும், மணிக்கோபுரவேலைகளை திரு. து. ஆனந்தன் குடும்பமும், சண்டேஸ்வரியைத் திரு. அரியரட்ணம் குடும்பமும் நிறைவேற்றி உதவியது.

பிரதான மூலமூர்த்திகளின் மண்டபத்தை எமது நிர்வாகம் பொறுப்பேற்றுப் புனரமைத்துள்ளது. அம் மண்டப வேலைகளிலும் குறிப்பாகத் திருமதி. மி. மகேஸ்வரி, திரு. மனோகரன், திரு. நிமலமோகன், த. சண்முகராசா, திருமதி மகேஸ்வரி வீரசிங்க முதலியார், திரு. வினாயகமூர்த்தி, வீ.சுப்புறுமணியம் குடும்பம் போன்றவர்களின் பங்களிப்பும் பிரதானமானதாகும். அதனைவிட அழிந்துபோன பல வாகனங்களை மீளவும் புதிதாக அமைப்பதற்கென நிதிவழங்கியவர்களின் பங்களிப்பும் மறக்கமுடியாததாகும். அதிலே குறிப்பாக ந. லகுமதன் செந்தில்நகர், சிவசுப்பிரமணியம் து. ஆனந்தன் ஆகியவர்கள் பாராட்டுக்குரியவர்கள் இதனைவிடவும் அரசுசார்பாலும் இந்து கலாச்சாரத் திணைக்களம் எமக்கு நான்கு லட்சம் ரூபாவை வழங்கியுதவியது. அவர்களுக்கும் எம் பாராட்டுக்கள் உரித்தாகட்டும். மேலும் அவ்வப்போது பொருட்களாக உதவியளித்த திருமதி. மு. மகேஸ்வரி, புலோப்பளை வினாசித்தம்பி, திருமதி. நவமணி ஆகியோருக்கும் எங்கள் பாராட்டுக்கள். இதனைவிடப் பல்வேறு உதவிகளை நேரமறிந்து உதவிசெய்த பலரும் பாராட்டுக்குரியவர்கள். இவர்கள் எல்லோருக்கும் அம்பாளின் ஆசி கிடைக்க வேண்டி எனது அறிக்கையை நிறைவுசெய்கிறேன்.

எமது வேலைகளை நிறைவேற்ற உதவியளித்த சிற்பக்கலைஞர்கள், வர்ண வேலையாளர்கள், ஆசாரியர்கள், மின்னிணைப்புச் செய்தவர்கள், குறித்த தினத்தில் வேலைகளை நிறைவேற்றி உதவியமைக்கும் எனது பாராட்டுக்கள், மற்றும் இவ் ஆலயத்தினைப் பரிபாலிப்பதில் எமது பூசகர் திரு. செ. கனகசபை அவர்களுக்கும், பிரதம சிவாசாரியார் திரு. கேதீஸ்வரக்குருக்கள் அவர்களுக்கும், ஆலயத் தலைவர், செயலாளர், நிர்வாக உறுப்பினர்களுக்கும், வெளிவேலைகளில் உதவியளித்தோர் அனைவருக்கும் எனது பாராட்டுக்கள்.

**திரு. து. ஆனந்தன்**
*பொருளாளர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மலராசிரியர் இதயத்திலிருந்து

அருள்மிகு இரட்டைக்கேணி பதியுறையும் எம் அம்பிகையின் குடமுழுக்குக் குறித்து வெளியாகும் இம்மலரின் ஆசிரியர் என்றவகையில் இவ் ஆலயத்தின் வரலாற்றை முழுமையாகப் பதிவுசெய்து ஆவணமாக்கும் வாய்ப்பை நான் முழுமையாகப் பயன்படுத்தியுள்ளேன். அத்துடன் சைவசமயப் பண்பாட்டில் கற்றுக்கொள்ள வேண்டிய அரிய பல கருத்துக்களை உள்ளடக்கிப் பல அறிஞர்கள் படைத்துள்ள ஆக்கங்களையும் இணைத்துக் கொண்டது மகிழ்ச்சி தருகின்றது. இச்சிறப்புமலர் வெளிவர ஊக்கமளித்த மலர்க்குழுவினருக்கும், குறிப்பாக மலர்க்குழுவின் தலைவருக்கும் ஆலய பரிபாலன சபையினருக்கும்; எனது நன்றிகளும் சிறப்புறப் பதிவுசெய்த கரிகணன் பிறிண்டேர்ஸ் குழுமத்துக்கும் என் மனம் கனிந்த நன்றிகளைப் பகிர்ந்துகொள்கின்றேன்.

**கந்தையா விஸ்ணுகாந்தன்**
*மலராசிரியர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலய நிர்மாணக் காட்சிகள்










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விக்கிரகங்கள் பிரதிஷ்டையின் போது...









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மஹா கும்பாபிஷேகக் காட்சிகள் சில...










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மஹா கும்பாபிஷேகக் காட்சிகள் சில...









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மஹா கும்பாபிஷேகக் காட்சிகள் சில...









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மஹா கும்பாபிஷேகக் காட்சிகள் சில...









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரட்டைக்கேணி கண்ணகை அம்பாள் ஆலய வரலாறும் வழிபாடுகளும்

**திரு. சிவஞானம் கோகுலதர்சன்**
*சமூக வலுவூட்டாளர், மீன் எழுச்சிக் கருத்திட்டம்,*
*பச்சிலைப்பள்ளி.*

ஈழத்தின் வடபுலத்தில் தொன்மையும் செழிப்பும் ஒருங்கே அமைந்த பழம்பெரும் தகவல்களைத் தன்னகத்தேயுடைய பச்சிலைப் பள்ளியில், நடுமத்தியிலே கருணை மழை மொழியும் அன்னையாய்க் காட்சி தருபவளே பளை இரட்டைக்கேணி கண்ணகை அம்பாள்.

இவ்வாலயம் செல்லையா மணியகாரனின் முயற்சியினால் தனது சொந்தக் காணியில் இரண்டு கேணிக்கு அருகாமையில் இருந்த வேப்பமரத்தடியில் தோற்றம் பெற்றதே கண்ணகி அம்பாள் வழிபாடு. அவரின் மறைவின்பின் சுப்பர் வேலுப்பிள்ளையின் பராமரிப்பிற் கரதீவான் தோட்டம், பரவைக்குளத் தாழ்வயல் நிலப்பரப்பு, பெரியபளை தென்னந்தோட்டம் எனப் பல நிலப்பரப்புகளுடன் இவ்வாலயம் அமைந்து சிறப்பாக மக்களுக்கு அருள்பாலித்து வந்தது. ஆலயத் தேவைகளை இவ்வருமானம் பூர்த்தி செய்தது. அவரின் மறைவின்பின் செல்லத்துரை என்ற நிர்வாகத்திற் பூத்த புத்திரர் கந்தசாமி வழிபாட்டுடன் ஆலயம் மிளிர்ந்தது.

வேப்பமரத்தடியில் ஓலைக்குடிசையில் வைத்து விளக்குவைத்து வழிபாடாற்றப்பட்ட கண்ணகி வழிபாடு பின்னர் சுப்பர் வேலுப்பிள்ளையினால் புனரமைக்கப்பட்டு 1953ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது. கண்ணகித்தாய் அடியவர்க்கு அருட்காட்சி கொடுத்துவந்தார். அதாவது சுப்பர் வேலுப்பிள்ளை தலைமையிலே கிராம மக்களும் இணைந்து ஆலயத்திற்கான மூலஸ்தானம், ஏனைய மண்டபங்கள், மணிக்கோபுரம் அமைக்கப்பட்டது. அதற்கான காவற் தெய்வமான வைரவரைச் சுப்பர் வேலுப்பிள்ளையின் மனைவியான வேலுப்பிள்ளை சின்னம்மா அமைத்துக்கொடுத்தார். அனைத்தும் அமைக்கப்பட்டதன் பின் 1953ஆம் ஆண்டு மூலமூர்த்தியாகத் தற்போது எழுந்தருளியாக இருக்கின்ற கண்ணகியம்மை சிலை மூலவிக்கிரகமாக வைக்கப்பட்டு வழிபாடாற்றப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

இதன்பின்னர் ஆலயம் மீண்டும் புனரமைக்கப்பட்டு 1983ஆம் ஆண்டு அம்பிகைக்கு அப்போது இருந்த அறங்காவலர் சபையின் தலைவர் செ. கந்தசாமி தலைமையிலே கிராம அடியவர்களும் இணைந்து குடமுழுக்கு விழா நடைபெற்று வழிபாடற்றப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. 1983ஆம் ஆண்டுவரையும் ஆலயத்தில் அலங்கார உற்சவமும், அம்பிகைக்கான பொங்கல் விழாவும் ஒன்றாக இணைந்தே நடைபெற்றது. இது 1984ஆம் ஆண்டு ஆலய உரிமைக்காரருக்கு ஏற்பட்ட அசௌகரியம் காரணமாக கிராம மக்களின் வேண்டுகையின் பிரகாரமும் 1983ஆம் ஆண்டு சுவாதி நட்சத்திரத்திலே நடைபெற்ற கும்பாபிஷேகத் திதியிலே அலங்கார உற்சவமும்; ஆனி அனுசம் திதியிலே பொங்கல் விழாவும் எனப் பிரிக்கப்பட்டு இன்றுவரையும் வழிபாடாற்றப்பட்டு ஆலயம் மிளிர்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதாவது, 1992ஆம் ஆண்டு அடியவர்களின் விருப்பத்திற்கு அமைவாகவும், இரண்டு அடியவர்களும் முன்வந்த காரணத்தினாற் பரிவாரத் தெய்வங்களான பிள்ளையார், முருகன் தனியாகப் பிரிக்கப்பட்டுத் தனித்தனி இடங்களிலே பரிவார மூர்த்திகளாக அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. அதாவது, பிள்ளையாரர் ஆலயத்தினைச் செல்லையா அவர்கள் குடும்பமும், முருகன் ஆலயத்தினைக் க. சின்னத்தம்பி குடும்பத்தினருமே அமைத்து, அத்துடன் நாகதம்பிரான் ஆலயத்தினைப் பேரம்பலப்பா எனும் சிவ அடியவரினால் உருவாக்கப்பட்டு 1993ஆம் ஆண்டு சுவாதி நட்சத்திரத்திலே கும்பாபிஷேகம் நடைபெற்றது. இதன்பின்னர் 1995ஆம் ஆண்டு யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து மக்கள் வன்னிப்பகுதிக்குச் சென்றனர். அப்போது இங்கு இருப்பவர்களினாற் பூஜைகள் நடை பெற்று வழிபாடு நடைபெற்றமை சிறப்பம்சமாகும். இவ்வாலயம் மீண்டும் 1999ஆம் ஆண்டு பரிபாலனசபையினரும், கிராம மக்களும் இணைந்து மீளப் புதுப்பொலிவுடன் கட்டுவதற்காக பாலஸ்தானம் செய்து வைக்கப்பட்டு அவ்வாண்டிலே அனைவரும் இணைந்து கருவறை அமையும் இடத்தில் நீர்நிலை கண்டு அம்பிகைக்கான நாட்கல்லு வைக்கப்பட்டது. நீர் நிலையிலிருந்து செப்புக் கம்பி வைக்கப்பட்டு அம்பிகையின் இருப்பிடத்திலே செப்புக்கம்பி இணைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்க சிறப்பம்சமாகும். அதன்பின்னர் 2000ஆம் ஆண்டு சித்திரை மாதம் ஏற்பட்ட யுத்த சூழ்நிலை காரணமாக இடம்பெயர்ந்து மக்கள் அனைவரும் யாழ்ப்பாணம் சென்றனர். அப்போது ஆலயத்திற்கு இரண்டு ஆண்டுகள் பூஜை வழிபாடுகள் நடைபெறவில்லை. மீளவும் 2002ஆம் ஆண்டு சித்திரை மாதம் மீளவும் மக்கள் குடியமர்ந்து ஆலயப் புனரமைப்பு வேலைகள் நடைபெற்றதுடன்; வழிபாடுகளும் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. மீண்டும் 2006ஆம் ஆண்டு யுத்த சூழ்நிலை காரணமாக இடப்பெயர்வு ஏற்பட்டு மக்கள் வன்னிப்பகுதிக்குச் சென்றதும் ஆலய வழிபாடு, பூஜை, புனரமைப்பு அனைத்துமே 2010ஆம் ஆண்டுவரை முடங்கிக் கிடந்தன. மீண்டும் 2010இல் மீள்குடியேற்றத்தின் பின்னர் யுத்தத்திலே அம்பிகையின் மூலவிக்கிரகம் பாதிக்கப்பட்டது. 1953இல் வழிபாடற்றப்பட்ட அம்பிகையின் எழுந்தருளி விக்கிரகத்தினை வைத்து வழிபாடு சிறப்புற நடைபெற்றது. மீண்டும் ஆலயப் புனரமைப்பு வேலைகள் அனைத்தும் அடியவர்கள் அனைவரும் இணைந்து புனரமைப்பு வேலைகள் நடைபெற்றன. இதிலும் அம்பிகையின் கருவறை 2ஆம் மண்டபம் பொழி கல்லினாலே கட்டப்பட்டமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

அதாவது 2010ஆம் ஆண்டு மீள் குடியேற்றத்தின் பின் அம்பிகையின் கருவறையினை அனைத்து அடியவர் பெருமக்களும் இணந்து செய்தனர். பிள்ளையார் ஆலயத்துக்கான பகுதி வேலைகளை ம.செல்லையா குடும்பத்தினரும், முருகன் ஆலய வேலையை க. சின்னத்தம்பி குடும்பத்தினரும், வைரவர் ஆலயத்தின் பகுதி வேலைகளைச் சு. தவரத்தினசிங்கம் குடும்பத்தினரும், மணிக்கோபுரப் பகுதி வேலையினை து. ஆனந்தன் குடும்பத்தினரும் செய்தனர். இக்காலப் பகுதியிலே சண்டேஸ்வரிக்காகத் தனியான ஆலயத்தினை ப. அரியரத்தினம் குடும்பத்தினர் அமைத்து, அதற்கான விக்கிரகத்தையும் தருவித்துத் தந்தனர். நாகதம்பிரான் ஆலயத்திற்கான கட்டுமாண வேலையை திரு. குலசிங்கம் குடும்பத்தினர் அமைத்தனர். புனரமைப்பு வேலைகள் அனைத்தும் நிறைவுபெற்றது. 2011ஆம் ஆண்டு ஆவணி மாதம் அம்பிகைக்கான குடமுழுக்குப் பெருவிழா சீரும் சிறப்பு மாக நடைபெற்று 42 நாட்கள் மண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாபிஷேகத்துடன் நிறைவுபெற்று அம்பிகை புத்தொளியோடு அடியவர்களுக்கு அருள் பாலித்துக்கொண்டிருக்கின்றார்.

அத்தோடு ஆலயத்தின் பொங்கல் விழா வினை நோக்கினால் ஆனி அனுசத்திலே பொங்கல் விழா நடைபெறும். இதற்கு முதல் நாள் கச்சாய் வெளியில் உள்ள விநாயகர் ஆலயத்திலே வளந்து வைத்துப் பொங்கல் நடைபெறும். அதனைத் தொடர்ந்து பெரிய பளை தென்னந்தோட்ட வளவிலிருந்து பண்டமெடுக்கப்பட்டு ஆலயத்திலே வைக்கப் பட்டு சி. சண்முகம் அவர்களினாலே ஆனி அனுஷத் திருநாளிலே அதிகாலை வளந்து நேரப்பட்டு பொங்கல் விழா வெகுசிறப்பாக நடைபெறுவது ஆலயத்தின் சிறப்பம்சமாகும். இவ்வாறாக ஆலயத்தின் வரலாறு குறிப்பிடப் படுகின்றது. இன்று ஆலயம் பரிபாலனசபை யினரின் நிர்வாகத்தில்கீழ் பூசகர் கனகசபை யின் பூஜை வழிபாடுகளுடன் வெள்ளி மலையாகப் பரிணமித்து மிளிர்கின்றது.

வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி
மீளாமே ஆளென்னைக் கொண்டாய் போற்றி
ஊற்றாகி உள்ளே ஒளித்தாய் போற்றி
ஓவாத சத்தத் தொலியே போற்றி
ஆற்றாகி அங்கே அமர்ந்தாய் போற்றி
அளங்கம் நூல் வேதனமாய் போற்றி
காற்றாகி யெங்குங் கலந்தாய்
கயிலை மலையானே போற்றி போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராமியத் தெய்வ வழிபாடு

செ. சிவஞானம்,
(B. A. (Hons, Special ஆசிரியர்,)
*கிளி / கிளிநொச்சி மகா வித்தியாலயம்.*

**அறிமுகம்**

இந்துக்களின் சைவமரபு இரண்டு நெறிகளுக்கு உட்பட்டதாகும். அவை ஆகமநெறி சார்ந்தது என்றும்; ஆகம நெறிசாராதது என்றும் கொள்ளப்படும். ஈழத்துச் சைவ மரபில் நாட்டார் தெய்வ வழிபாடுகள் நீண்ட கால வரலாற்றினைக்கொண்டு விளங்குகின்றன. இவ்வழிபாட்டு முறையை:

1. கிராமிய வழிபாடு
2. நாட்டார் வழிபாடு
3. ஊர்த் தெய்வ வழிபாடு
4. நாட்டுப்புற வழிபாடு
5. சிறுதெய்வ வழிபாடு
6. எல்லைப்புற வழிபாடு
7. குலதெய்வ வழிபாடு
8. மலைத்தெய்வ வழிபாடு

என வேறுபெயர்களினாலும் அழைப்பதுண்டு. கிராமியமக்களின் சமய நம்பிக்கையின் வெளிப்பாடாகவும், கலை உணர்வுகளின் வெளிப்பாடாகவும் இவ்வழிபாட்டு முறைகள் அமைகின்றன. ஆகம வழிபாட்டில் எவ்வாறு கிரியைகள் பிரதான இடம்பெறுகின்றனவோ, அவ்வாறே நாட்டார் வழிபாட்டிற் சடங்குகள் முக்கியம் பெறுகின்றன.

எமது நாட்டில் நாட்டார் வழிபாடு: வன்னி, யாழ்ப்பாணம், மலைநாடு, மட்டக்களப்பு எனத் தமிழ்மக்கள் செறிந்து வாழும் பிரதேசங்களிற் காணப்படுகின்றன. பிரதேசத்திற்குப் பிரதேசம் இவ்வழிபாட்டு முறைகளில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. பிரதேச மக்களின் சமூக அமைப்பு, வழக்காறு என்பவற்றின் அடிப்படையில் இவ்வழிபாடு மேற்கொள்ளப்படுகின்றது. பயம், நம்பிக்கை, மரபு என்பவற்றின்மூலம் குறிக்கப்பட்ட தெய்வங்களுக்கு நேர்த்திவைத்து வழிபடுவது முக்கியமாகும்.

நாட்டார் தெய்வவழிபாடு: ஆண் தெய்வ வழிபாடு, பெண் தெய்வ வழிபாடு என இருநிலைகளில் வழிபடப்படுகின்றது. சிறிய கட்டிடங்கள் அல்லது பந்தல் அமைப்பான இடங்களில் இத் தெய்வங்கள் வழிபடப்படுகின்றன. வயல்வெளிகள், காடுகள், ஆற்றங்கரை, கிராம எல்லைகள், நெடுஞ்சாலை ஓரங்கள் ஆகிய இடங்களில் இத் தெய்வங்களுக்குரிய ஆலயங்கள் பெரும்பாலும் காணப்படுகின்றன. நாட்டார் தெய்வ வழிபாடுகள் பிரதேசத்திற்குப் பிரதேசம் வேறுபட்டாலும், அவை மேல்வரும் இயல்புகளைக் கொண்டிருக்கும்.

1. நித்திய வழிபாடு அற்றவை.
2. உயிர்ப் பலியைப் பெரிதும் ஏற்பவை
3. பிராமணர் அல்லாதோராற் பூசை செய்யப்படுபவை.
4. ஒரு பிரகாரத்தை மட்டும் உடையவை.
5. ஆசாரங்கள் பெரிதும் அற்றவை.
6. ஒரு குடும்பம், சாதி என்பவற்றுக்கு மட்டும் உடையவை.
7. பகைமையை அழிக்கும் தன்மை கொண்டவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. சடங்குகள் உத்தரவு பெற்றே நிகழ்பவை.
9. பெரிதும் மந்திரங்களால் உச்சாடனம் செய்யப்படுபவை.

**ஆண் தெய்வங்கள்**

1. ஐயனார்
2. வைரவர்
3. வீரபத்திரர்
4. பெரிய தம்பிரான்
5. விறுமர்
6. வதனமார்
7. காத்தவராயன்
8. முனியப்பர்
9. சங்கிலிக் கறுப்பன்
10. கறுப்பன் சாமி
11. அண்ணமார்
12. மதுரை வீரன்

**பெண் தெய்வங்கள்**

1. கண்ணகி
2. மாரியம்மன்
3. நாச்சிமார்
4. கடலாத்தை
5. கொத்தியாத்தை
6. முத்துமாரி
7. திரௌபதை
8. பேச்சியம்மன்
9. நாச்சியம்மன்
10. பிடாரி அம்மன்
11. சாவித்திரி அம்மன்
12. சீதையம்மன்

**வழிபாட்டுமுறை:**

நாட்டுப்புற வழிபாட்டில் ஆகம வழக்குகள் பின்பற்றப்படாமையினால் மிகவும் எளிமையான சமயச் சடங்குகள் முக்கியம் பெறுகின்றன. இதில் ஆண்டுதோறும் நடைபெறும் ஆண்டுப் பொங்கல் பிரதான மானது. இப்பொங்கல் வருடத்தில் மாசி, பங்குனி, வைகாசி ஆகிய மாதங்களுக்கிடையில் வரும் இவ்வழிபாட்டின்போது:

1. பண்டமெடுத்தல்
2. மடை பரவல்
3. பலியிடுதல்
4. நூல் முடிதல்
5. பிணி தீர்த்தல்
6. தண்ணீர் ஓதிக் கொடுத்தல்

முதலிய அம்சங்கள் முக்கியம் பெறுகின்றன. இதன்போது பாற்செம்பு எடுத்தல், காவடி எடுத்தல், தீச்சட்டி ஏந்தல் முதலிய நேர்த்தியும் இடம்பெறுகிறது.

கிராமிய வழிபாட்டினை அடிப்படையாகக் கொண்டு கிராமியக் கலைகளும் வளர்ச்சிபெற்றன. குறிப்பாக; மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் போன்ற பிரதேசங்களில் நாட்டுப்புற மரபில் வந்த கிராமியக் கலைகள் வளர்ச்சிபெற்றன. இவற்றிற் கரகாட்டம், காவடி, கோலாட்டம், கும்மி என்பனவும் வந்தன. கூத்து, காத்தவராயன், சிந்துநடைக் கூத்து முதலிய கலைகளும் முக்கியம் பெற்றன. கண்ணகி வழிபாட்டில்: சிலம்புக்கூறல், கோவலன் காவியம், ஊர்சுற்றுக் காவியம் முதலிய கலைகளும் முக்கியம் பெறுகின்றன. சைவத் தமிழ் மக்கள் வாழ்வியலுடன் நாட்டார் வழிபாடு பெரிதும் இணைந்துவிட்டது. இதனால்; இவ்வழிபாடும், அதனோடு இணைந்துள்ள தெய்வங்களும் முக்கியத்துவம் பெற்றுவிட்டன. நாட்டார் தெய்வ வழிபாட்டால்:

1. பயநீக்கம்
2. குடும்ப ஒற்றுமை
3. காவிய விருத்தி
4. கலை ஒற்றுமை

ஆகிய துறைகளும் எழுச்சிபெற்றன. நாட்டுப்புற வழிபாடுகளை ஆற்றுவோர் "பூசாரி" என அழைக்கப்படுவர். இவர்கள் பெரும்பாலும் மரபுவழியாக இவ் வழிபாடுகளை மேற்கொள்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டுப்புறத் தெய்வங்கள் பெரும் பாலும் குலதெய்வமாகவும், காவற் தெய்வ மாகவும் போற்றப்படுகின்றன. ஐயனார், கண்ணகி, முனியப்பர் முதலிய தெய்வங்கள் முக்கியம் பெறுகின்றன.

நினைத்த நேரத்தில் வழிபடக்கூடிய சிறப்பு இவ்வழிபாட்டில் உண்டு. இங்கு வழிபாடு செய்ய வருவோருக்கு அருள் கொடுக்கக் காத்திருப்பதுபோல, ஆலயக் கதவுகள் எந்நேரமும் திறந்தபடியே இருக்கும்.

**ஐயனார் வழிபாடு**

சைவசமயத்தில் ஐயனார் வழிபாடு மிகுந்த செல்வாக்குச் செலுத்துகின்றது. இவ் வழிபாடு கிராமிய வழிபாட்டில் மட்டுமன்றி பெருந்தெய்வ வழிபாட்டு முறையிலும் செல்வாக்குச் செலுத்தியது.

1. அரிகர வழிபாடு
2. ஐயப்ப வழிபாடு
3. ஐயப்பசாமி வழிபாடு

போன்ற பெயர்களாலும் இவ் வழிபாடு சிறப்பிக்கப்பட்டுள்ளது. சிவனுக்கும், திருமாலுக்கும் பிறந்த குழந்தை ஆனதால் ஐயனார் சைவசமய மரபிலும், வைணவ சமய மரபிலும் செல்வாக்குப் பெற்றுள்ளார். எனவே, சைவ சமயத்தையும், வைணவ சமயத்தையும் இணைக்கின்ற ஒரு வழிபாட்டு முறையாக ஐயனார் வழிபாடு உள்ளது.

**ஐயனார் வழிபாட்டின் தோற்றம்**

வைதிக சமய மரபுகளில் இன்றுவரை நிலைத்துவிட்ட கிராமிய வழிபாட்டு முறையாக ஐயனார் வழிபாடு உள்ளது. இவ்வழிபாட்டுத் தோற்றம் பற்றிக் கந்தபுராணம் கூறுகின்றது. முன்னொரு காலத்தில் தேவலோகத்தில் மகிழ்ச்சியாக வாழ்ந்த தேவர்களுக்கு அசுரர்கள் பெருந்துன்பங்கள் செய்தார்கள். காலாதிகாலமாக அசுரர்களினால் உருவான துன்பங்களைத் தாங்கிவந்த தேவர்கள்; காக்கும் கடவுளான திருமாலிடம் தமது குறைகளை இரந்தனர். கருணை வடிவான கடவுள் அசுரரை அழித்துத் தேவர்களைக் காக்கத் திருவுளம் கொண்டார்.

அதனை நிறைவேற்ற திருமால் சூழ்ச்சி செய்தார். தேவலோகப் பெண்கள்மீது மிகுந்த ஆசைகொண்ட அசுரர்முன் திருமால் அழகிய மோகினி வடிவமெடுத்துத் தோன்றினார். மோகினித் தேவதையின் அழகில் மயங்கிய அசுரர்கள் அவளை அடைய விரும்பினர். மோகினி அவர்களிடம் ஒரு வேண்டுதலை விடுத்தார். "அசுரப் பெருந்தகைகளே! உங்களிலே வீரமுடையவராக விளங்குபவர் எவரோ, அவரையே நான் மணக்க விரும்புகிறேன். எனவே, என்னுடன் நீங்கள் போர்புரிந்து அந்தப் போரிலே என்னை வெல்லவேண்டும்" எனக் கேட்டுக் கொண்டார். இதனை ஏற்றுக் கொண்ட அசுரர்கள் மோகினியுடன் போர் புரிவதற்காகத் தயாராகினர்.

எல்லாப் பாக்கியமும் வாய்ந்த கடவுளை வெல்வது என்பது முடியாத காரியமே. எனவே, ஒவ்வொரு அசுரர்களும் மோகினியுடன் போர்செய்து இறந்துவிட்டனர். மோகினியின் அழகையும், ஆற்றலையும் மறைவில் இருந்து கண்ணுற்ற சிவன்; மோகினிமுன் தோன்றி "நான் உன்னுடன் போர்புரியச் சித்தமாக உள்ளேன்" என்று கூறினார்.

அசுரர் வடிவில் தோன்றிய சிவனின் வேண்டுதலை ஏற்று மோகினியான அழகிய திருமால், சிவனுடன் போர்செய்து தோற்றுப் போனார். எனவே, மோகினியின் கோரிக்கையின்படி சிவனுடன் கூடவேண்டியதாயிற்று. அதன்காரணமாக ஐயனார், சிவனுக்குக் குழந்தையாகப் பிறந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐயனார் கோயில்கள்

ஐயனார் வழிபாடு சைவமக்களிடம் மிக நீண்டகாலமாகச் செல்வாக்குச் செலுத்தி வந்துள்ளது. இவ் வழிபாட்டு முறை ஆரம்பத்திற் கிராமியமரபு சார்ந்திருந்தாலும், காலப் போக்கில் இவ்வழிபாட்டில் ஆகம மரபு இணைந்திருந்தன. இந்நிலையில் ஐயனாருக்குக் கோயில் அமைத்து வழிபடும் வழக்கம் பிரபல்யமானது.

ஐயனார் வழிபாடு சைவ வழிபாட்டு மரபுகளுடன் பாகவதசமய வழிபாட்டு மரபுகளுடனும் தொடர்புபட்டிருந்ததால் சிவன் கோயில்களிலும்; ஐயனார் கடவுளுக்குச் சிறு கோயில்கள் அமைத்து வழிபடும் வழக்கம் உண்டு. இலங்கையிலும், தமிழ்நாட்டிலும் ஐயனாருக்குப் பிரசித்திபெற்ற தனிக்கோயில் உண்டு. தமிழகத்திற் சபரிமலை எனும் இடத்திலுள்ள ஐயனார் கோயில் மிகப்பிரசித்தி பெற்றது. ஐயனாருக்குரிய ஆலயங்கள் பெரும்பாலும்:

1. வயல்வெளிகள்
2. ஆற்றங்கரைகள்
3. அடர்ந்த காடுகள்
4. தெருவோரங்கள்
5. நெடுஞ்சாலைகள்

ஆகிய இடங்களிலேயே அமைந்து விளங்குகிறது. ஐயனார் காவற் தெய்வமாகவும், வீரத்தெய்வமாகவும் விளங்குவதால், கிராம மக்கள் சிறு கொட்டகை அமைத்து ஐயனாருடைய அம்சங்களை வைத்து வழிபடுகின்றனர். இலங்கையினைப் பொறுத்தவரையில் ஐயனாருக்குரிய பெருங்கோயில்கள்:

1. மாதம்பை
2. சுன்னாகம்
3. அனலைதீவு
4. பாண்டிருப்பு
5. குருநாகல்
6. அம்பலவன் பொக்கணை

ஆகிய இடங்களிற் சிறப்பாக அமைந்த கோயில்கள் உண்டு. கிழக்கு மாகாணத்தில் திருமலை ஐயனார்கோயில், செங்கொடி நாயனார், மணீர்கோயில் என்பனவும் முக்கியமான கோயிலாகும். தமிழ் நாட்டினைப் பொறுத்தவரையில் :

1. தஞ்சாவூர்
2. தாமிரபரணி
3. சபரிமலை
4. திருநெல்வேலி

ஆகிய இடங்களில் ஐயனாருக்குரிய பெரிய கோயில்கள் உண்டு. இவற்றுட் சபரிமலைக் கோயில் சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்ததாகும். யாழ்ப்பாணத்தில் அனலைதீவு ஐயனார்கோயில் முற்றிலும் ஆகம மரபு சார்ந்ததாகக் காணப்படுகின்றது. சிலாபம் மாதம்பையில் உள்ள ஐயனார் கோயில் சைவசமயத்தவர் மட்டுமன்றி, ஏனைய சமயத்தவரும் வழிபடும் சிறப்பினையுடையது.

## வழிபாட்டு முறைகள் :

ஐயனாருக்குரிய வழிபாட்டு முறை பெரும்பாலும் ஆகம முறைசாராத வழிபாடாக நிலவி வந்தது. ஆயினும், தமிழ் நாட்டிலுள்ள சில ஐயனார் ஆலயங்கள் ஆகம முறைக்குட்பட்டவை. ஈழத்தில் உள்ள ஐயனார் ஆலயங்கள் நாட்டுப்புற வழிபாடாகவே உள்ளது. கிராமிய மக்களின் சமய வாழ்வில் ஐயனார் வழிபாடு பெரும் செல்வாக்கைச் செலுத்திவந்துள்ளது.

ஐயனார் ஆலயங்களில் நித்திய பூசைகள் நடைபெற்றுள்ளன. ஆகம மரபு சார்ந்த ஆலயங்களில் விசேட வழிபாடு இடம்பெறுகின்றன. இங்கு பொங்கல்விழா மிகச் சிறப்பானது. இவ் வழிபாட்டின்போது:

நூல்பிடித்தல்
தூளிபிடித்தல்
கட்டுச்சொல்லல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டம் எடுத்தல்

மடை பரவல்

தண்ணீர் ஓதிக்கொடுத்தல்

ஆகிய வழிபாடுகள் சிறப்பாக நடைபெறுகின்றன. இவற்றுடன் கரகம், காவடி முதலிய கலைநிகழ்வுகளும்; ஐயனார் வழிபாட்டில் முக்கியம் பெறுகின்றன. இவற்றுடன் சந்தனக்காப்பிடலும் இடம்பெறுகின்றன.

இவற்றுடன் குருநாகல் ஐயனார் ஆலயத்தில் "முட்டி மங்களம்" என்ற ஒரு நிகழ்வும் நடைபெறுகின்றது. மாதம்பை ஐயனார் கோவிலிலும் நடைபெறும்.

**அமைப்பு முறை :**

ஐயனார் வழிபாடு ஆகம விதிகளைப் பின்னணியாகக் கொண்டு விளங்காத காரணத்தினால், இத்தெய்வத்தை அமைக்கும் முறை பற்றி ஆகமங்களிற் காணப்படவில்லை. ஆயினும், புராணங்களிலும், சிற்ப சாஸ்திரங்களிலும் ஐயனார் அமைப்புமுறை பற்றி கூறப்பட்டுள்ளது. கந்தபுராணம்: ஐயனாரை அமைக்கும் முறைபற்றி விரிவாகக் கூறுகிறது.

ஐயனார் பெரும்பாலும் காவற் தெய்வமாக அமைவதால், உக்கிரத் தோற்றம் கொண்டவராக அமைக்கப்படுகின்றார். இந்த நிலை அமைக்கப்படும் ஐயனார் யோகநிலையில் இருந்து கால்களை மடித்து இரு கால்களும் முகத்தை நோக்கியவாறு அமைக்கப்பட்டு இருக்கும்.

ஐயனாரின் பிரதிமாலட்சணம் பற்றிச் சாஸ்திர நூல்களில் வேறுபட்ட கருத்துக்களும் உள்ளது. ஐயனாருடைய விக்கிரகங்கள் பெரும்பாலும் கருங்கல்லால் அமைந்த சிவ விக்கிரகமாகக் காணப்படுகின்றன. சோழர் காலத்தில் இராஜேந்திரனால் அமைக்கப்பட்ட ஆலயங்களில் ஐயனார் பரிவாரத் தெய்வமாக, பஞ்சலோகத்தில் வார்ப்பு விக்கிரகமாக அமைக்கப்பட்டுள்ளார்.

மண்டூர்

மாதம்பை

அனலைதீவு

ஆகிய இடங்களில் கருங்கல்லினால் அமைக்கப்பட்டுள்ளது.

**சமுதாயச் செல்வாக்கு**

இவ்வழிபாடு இலங்கையிலும், தமிழ் நாட்டிலுள்ள சைவமக்களால் ஆதரிக்கப்பட்டு வருவதைக்கொண்டு இவ்வழிபாட்டின் முக்கியத்துவத்தினை உணர்த்துகின்றது. ஐயனார் வீரம் செறிந்த கடவுளாக விளங்குவதால்; தமிழ் மக்கள் வீரத்தை வேண்டியும், ஐயனாரை வழிபடுகின்றனர். இக்கடவுள் அந்த வகையிற் காவல் தெய்வமாகவும், குல தெய்வமாகவும் இருந்து வருவதைக் காணலாம். புராண மரபுகளின் படி ஐயனார் சிறந்த கலைத்தெய்வமாகவும், ஆன்மிகக் குருவாகவும் விளங்குகிறார்.

கரகமாடுதல்

காவடியாடல்

கும்மி

கோலாட்டம்

ஆகிய கலைகளின் வளர்ச்சியிலும் சந்தனக் காப்பிடல், முட்டி மங்களம் ஆகிய நிகழ்வுகளின் பின்னணியிலும் ஐயனார் வழிபாடு சைவமரபில் முக்கியம் பெறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விரதங்களும் அனுட்டான நியமங்களும்

**திருமதி நந்தகுமார் சுகந்தினி**
ஆசிரியர்,
கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை

எமக்கு எல்லா நலன்களையும் எப்பொழுதும் தந்துகொண்டிருக்கின்ற இறைவனை மறவாது நினைந்து வாழ்த்தியும், வணங்கியும் இருத்தலே எமது கடமையாகும். பகுத்தறிவற்ற பிற உயிரினத்திற்கு அது இயலாதாயினும் பகுத்தறிவு படைத்த மனித இனத்திற்கு அஃது இன்றியமையாதது.



எனினும் உலகியல் சூழல்களால் அக்கடமையை இயற்ற இயலாத நிலையில் இருப்பதால், குறிப்பிட்ட சில நாட்களிலேனும் மக்கள் அக்கட்டுப்பாட்டில் நிற்றல் வேண்டும். அந்நாட்களே விரத நாட்களாகும்.

விரதம் - தவம் - நோன்பு என்பன ஒரு பொருட்சொற்கள்.

**"மனம் பொறிவழி போகாது நிற்றற் பொருட்டு உணவை விடுத்தேனுஞ், சுருக்கியேனும் மனம், வாக்கு, காயம் என்னும் மூன்றினாலும் கடவுளை விதிப்படி மெய்யன்போடு வழிபடுதல் விரதமாகும்."**

- நாவலர்பெருமான்.

இஃது ஆன்ம ஈடேற்றங் கருதிச் செய்யுஞ் சாதனை ஆகும். விரதம் "நோன்பு" என்றுங் கூறப்படும். பெரியோர் கூறும் புண்ணியம் ஏழினுள் ஒன்று தவம். விரதம் அனுஷ்டித்தல், விரதம் அனுஷ்டிப்பதனால். மனம், புத்தி முதலிய உட்கருவிகள் தூய்மை அடையும். இதனால் ஞானம் - நல்லறிவு கைகூடும்.

**விரதங்களும் அனுட்டான நியமங்களும்**

விரதம் என்றால் ஐம்புலனடக்கம் என்பது பொருள். அதாவது சித்தத்தை ஒருமுகப்படுத்துதல். மனமானது பொறிவழிச் செல்லாது நிற்றற் பொருட்டு உணவை விடுத்தேனும், சுருக்கியேனும் திரிகரண சுத்தியுடன் இறைவனைச் சிறப்பாக வழிபடுதல்.

விரதம் அனுஷ்டிப்பவர் விரதகாலங்களில் தாம்பூலந்தரித்தல், புகைபிடித்தல், பகலில் நித்திரை செய்தல், சிற்றின்பம் துய்த்தல் முதலியன செய்தலால் பிராயச்சித்தமற்ற பாவ தண்டனைகளுக்குள்ளாக்கப்படுவர்.

விரதங்கள் மனிதனுடைய வாழ்வை மேன்மையுறச் செய்து நன்மை நோக்கி இட்டுச்செல்கின்றன. விரதங்கள் உணவு உட்கொள்வதில் பலவகையாக உள்ளன. அவையாவன,

1. **யாசிதம் :**
   இருபகல் உணவு உண்டிருத்தல்.

2. **பாதக்கிரிச்சனம் :**
   நல் உணவு உண்டிருத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. பஞ்சகக்கிரிச்சனம் :
அரசு, அத்திரி, வில்வம் இவைகளின் தளிர்களில் ஒன்றை நீரில் தோய்த்து உட்கொண்டிருத்தல்.

4. சௌமியக்கிரிச்சனம் :
ஒருபகல் பால், மோர், நீர், பொரிமா ஆகியவற்றில் ஒன்றை உட்கொண்டிருத்தல்.

5. அதிகரிச்சனம் :
மூன்று நாள் ஒவ்வொரு பிடி அன்னம் உண்டும் அது இல்லாமலும் இருத்தல்.

6. கிரிச்சனாதி கிரிச்சனம் :
இருபத்தியொரு நாள் பால் மட்டும் உண்டிருத்தல்.

7. பிரசாபத்திய கிரிச்சனம் :
மூன்று நாளில் காலை மூன்று நாள் மாலை மூன்று நாள் இடைவேளை மூன்று நாள் உணவின்றியும் இருத்தல்.

8. பார்க்ககிரிச்சனம் :
பன்னிரண்டு நாள் உணவின்றி இருத்தல்.

9. சாந்தாபன கிரிச்சனம் :
ஒரு நாள் கோசலம், ஒருநாள் கோமயம், ஒரு நாள் பால், ஒரு நாள் தருப்பை நீர், ஒரு நாள் உணவு உட்கொண்டிருத்தல்.

10. மகாசாந்தாபன கிரிச்சனம் :
மேற்கூறப்பட்டவைகளில் ஒன்றைக் கடைப்பிடித்தல்.

11. சாந்திராயணம் :
வளர்பிறை முதலாக ஒவ்வொரு பிடி உணவு கூட்டித்தேய்பிறை முதலாக ஒவ்வொரு பிடி உணவு குறைத்து உட்கொண்டு மூன்றுவேளையும் ஸ்நானம் செய்தல்.

12. வால சாந்திராயணம் :
சாந்திராயணத்தின் இரவு வேளையில் மட்டும் நான்கு பிடி உணவு உட்கொள்ளுதல் என்பனவாக உள்ளன.

## சித்திரை

### சித்திரா பூரணை :

வருடம் பிறந்து முதலாவதாக வரும் பூரணை என்பதோடு எமது தலைவிதியை நிர்ணயிக்கும் எமது வாழ்நாள் கணக்குகளை எழுதிப்பேணும் யமதர்மராஜனின் கணக்குப் பிள்ளையாகிய சித்திரகுப்தர் திருவவதாரம் செய்த நாளுமாகும்.

தமது தாயை இழந்தவர்கள் இத்தினத்தில் தாயை நினைத்து விரதமனுஷ்டித்துப் பிரார்த்தனை செய்வதால் அன்னாரின் ஆன்மா சாந்தி பெறுகின்றது. அன்று உப்பைத் தவிர்த்து பசும்பால், தயிர் உண்ணாமல் இருத்தல் சிறப்பு. இதனால் பாவச்சுமை குறையும்.

### சித்திரைத் திருவோணம் :

ஸ்ரீ நடராஜப்பெருமானுக்கும் வருடத்தில் செய்யப்படும் ஆறு அபிஷேகங்களில் வருடம் பிறந்து முதல் வருகின்ற அபிஷேகம் சித்திரைத் திருவோணத்தில் நிகழ்கின்றபடியால் இத்தினம் வழிபாட்டிற்குரிய முக்கிய தினமாகும்.

## வைகாசி

### வைகாசி விசாகம் :

அசுரர்களை அழித்தொழித்துத் தேவர்களைக் காத்தருளியதன் மூலம் அதர்மத்தை ஒழித்துத் தர்மத்தை நிலைநாட்டியது மட்டுமன்றி; முழு உலகமுமே உய்வடையும் பொருட்டுச் சரவணப் பொய்கையில் முருகப் பெருமான் திருவவதாரம் செய்த தினமாகையால் முருக வழிபாட்டிற்குச் சிறந்த தினமாகும்.

## ஆனி

### ஆனி உத்தரம் :

எமது இறைவனாகிய சிவபெருமான் நடராஜர் என்ற நாமத்தில் தனது அடியார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்காகத் தில்லையில் திருநடனம் புரிந்தது இத்தினத்திலாகும். தனது திருநடனத்தின் மூலம் எம்பெருமான் பஞ்சகிருத்தியங் களையும் புரிகிறார். இத்திரம் நடராஜர் தரிசனத்திற்குச் சிறந்த நாளாகும்.

## ஆடி

### ஆடிச்செவ்வாய் :

இத்தினம் அம்பாள் தரிசனத்திற்குச் சிறந்த நாளாகும். விவாகமாகாத கன்னிப் பெண்கள் இத்தினத்தில் விரதமிருந்து அம்பாள் தரிசனத்தில் ஈடுபடுவதன் மூலம் மாங்கலியப் பாக்கியம் கிடைக்கப்பெறுவர். செவ்வாய் தோஷமுள்ளவர்களும் ஏனை யோரும் செவ்வாய்க்கிழமை விரதத்தை ஆடிச் செவ்வாயன்று கோவிலில் சங்கற்பம் செய்து ஆரம்பிப்பது உத்தமமானது. ஒருபொழுது அன்னமோ பால், பழமோ உண்டு இவ்விர தத்தைக் கைக்கொள்ளலாம்.

### ஆடி அமாவாசை :

இத்தினம் பிதிர்க்கடன் செய்வதற்குச் சிறந்த நாளாகும். தந்தையை இழந்தவர்கள் இத்தினத்தில் விரதமிருந்து வழிபாட்டி லீடுபட்டுத் தானங்கள் செய்வதால் பிரிந்த ஆன்மாக்கள் ஈடேற்றம் அடைகின்றன.

### ஆடிப்பூரம் :

உலக மாதாவாகிய உமாதேவியார் ருதுவாகிய தினமான இத்தினம் அம்பாள் விரதத்திற்கும் தரிசனத் திற்கும் உகந்த நாளாகும். அம்பாளின் எட்டுவகைச் சித்திகளையும் பெற இந் நாள் வழிபாடு உன்னத மானது.

## ஆவணி :

**ஆவணிச் சதுர்த்தி (ஆவணி மாதம் வளர்பிறை 4ஆம் நாள்)**



ஆவணிமாதத்துப் பூர்வ பக்கச் சதுர்த்தி விநாய கப்பெருமான் திருவவதாரம் செய்த தினமாகையால் விநாயக விரதத்திற்கும் வழி பாட்டிற்கும் சிறந்த நாளா கும்.

### விநாயக சதுர்த்தி விரதம் :

மாதந்தோறும் வரும் வளர்பிறைச் சதுர்த்தித் திதி விநாயகர் விரதத்திற்குச் சிறந்த நாளாகும். ஆவணி மாத வளர்பிறைச் சதுர்த் தியில் அனுஷ்டிக்கப்படும் விநாயகசதுர்தி விரதம். மற்றும் விரத பலனிலும் பார்க்கக் கூடுதலான பலனை நல்கும் எனச் சமயநூல்கள் சாற்றுகின்றன. அந்நாளில் இளம்பிறைச் சந்திரனைப் பார்த்தலாகாது. பகலில் உபவாசம் இருந்து ஆலய தரிசனம் செய்தபின் இரவில் கொழுக்கட்டை, மோதகம் முதலியன விநாயகருக்கு நிவேதித்து உண்ணலாம். அந்நோன்பு நோற்பவர் விநாயகரை அறுகம் புல்லால் அர்ச்சிப்பது அளவிறந்த பலனைக் கொடுக்கும். இத்தினத்தில் விரதம் அனுஷ்டித்து உள்ளன்போடு வழிபடு வோர்க்கு விநாயகர் திருவருள் கடாட்சம் கிடைக்கும் என்பது உறுதி. அதுபோல் தேய்பிறையில் வரும் சதுர்த்தியைச் சங்கடகர சதுர்த்தி என அழைத்து விரதமிருப்பர்.

### ஆவணிச் சதுர்த்தசி :

ஸ்ரீ நடராஜப் பெருமானின் ஆறு அபிஷேகங்களில் இத்தினத்தில் நடைபெறும் அபிஷேகமும் ஒன்றாகையால் இத்தினம் நடேசர் தரிசனத்திற்குச் சிறந்ததாகும்.

### ஆவணி மூலம் :

மாணிக்கவாசக சுவாமிகளுக்காக சுந்த ரேஸ்வரப் பெருமான் மதுரை மாநகருக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுந்தருளி அருள்பாலித்த தினம் இதுவாகும். அதாவது மாணிக்கவாசக சுவாமிகளைப் பாண்டிய மன்னன் சிறையிலிட்டுத் தண்டனை விதித்த சமயம் சுவாமியவர்களை விடுவிப்பதற்காகச் சிறையினின்றும் மீட்டது. ஆவணி மாத மூல நட்சத்திரத் தினமாகும். இதன் காரணமாக இத்தினம் பிட்டுக்கு மண் சுமந்த விழாவாகக் கொண்டாடப்படுகின்றது.

ஆவணி ஞாயிறு :

எல்லா மாதங்களிலும் ஞாயிறு வருகின்ற போதிலும் ஆவணி மாதத்தில் வரும் ஞாயிற்றுக்கிழமை சூரிய விரதத்திற்கும் வழிபாட்டிற்கும் சிறந்ததாகும். இம்மாதத்தில் சூரிய பகவான் சிங்கராசியில் பிரவேசிப்பதால் ஞாயிற்றுக்கிழமை முக்கியத்துவம் பெறுகின்றது.

## புரட்டாதி :

நவராத்திரி விரதம் :

புரட்டாதி மாதம் வளர்பிறைப் பிரதமை முதல் நவமி முடியவரும் ஒன்பது நாளும் கும்பத்திலே பூசைசெய்து தேவியை அனுட்டிக்கும் விரதமாம். இதில் வரும் அட்டமிக்கு மகா அட்டமி என்றும் நவமிக்கு மகா நவமி என்றும் பெயர். இதனால் இதை மகாநோன்பு அல்லது மகர் நோன்பு என்று சொல்லிக் கொண்டாடுவர். இது தேவி உபாசகர்களால்



சிறப்பாகக் கொண்டாடப்படும் விரதமாகும். இந்த ஒன்பது இரவுகளிலும் முதல் மூன்று நாட்களிலும் வீரத்தை வேண்டித் துர்க்கையையும், அடுத்த மூன்று நாட்களிலும் செல்வத்தை வேண்டித் திருமகளையும் இறுதி மூன்று நாட்களும் கல்வியை வேண்டிக் கலைமகளையும் நினைந்து பூசித்து விரதம் அனுட்டிப்பர். நோன்பு நோற்பவர்கள் பிரதமையில் எண்ணெய் முழுக்காடி நோன்பைத் தொடங்க வேண்டும். இவ்விரதம் அனுட்டிபோர் முதல் எட்டுநாளும் ஒருபோது உணவு உட்கொண்டு ஒன்பதாவது நாளான மகாநவமியில் உபவாசம் இருத்தல் உத்தமம். இந்நோன்பு நாட்களில் அபிராமி அந்தாதி குமரகுருபரரின் சகலகலாவல்லிமாலை போன்ற பாடல்கள் பாராயணம் செய்யத் தக்கன.

| நாள் | இராகம் | பிரசாதம் | பழம் | புஷ்பம் | பத்திரம் |
|---|---|---|---|---|---|
| 1ஆவது | தோடி | வெண்பொங்கல் சுண்டல் | வாழை | மல்லிகை | வில்வம் |
| 2ஆவது | கல்யாணி | புளியோதரை | மா | முல்லை | துளசி |
| 3ஆவது | காம்போதி | சக்கரைப்பொங்கல் | பலா | சம்பங்கி | மரு |
| 4ஆவது | பைரவி | கறிச்சாதம், பொரியல் | கொய்யா | ஜாதிமல்லிகை | கதிர்ப்பச்சை |
| 5ஆவது | பந்துவராளி | தயிர்ச்சாதம் | மாதுளை | பவளமல்லி | விபூதிப்பச்சை |
| 6ஆவது | நீலாம்பரி | தேங்காய்ச்சாதம் | நாரத்தை | செம்பருத்தி | சந்தன இலை |
| 7ஆவது | பிலகரி | எலுமிச்சம்பழம் | பேரீந்து | தாழம்பூ | தும்பை இலை |
| 8ஆவது | புன்னாகவராளி | பாயாசம், முறுக்கு | திராட்சை | ரோஜா | பன்னீர் இலை |
| 9ஆவது | வசந்தா | திரட்டுப் பால் | நாவல் | தாமரை | மருக்கொழுந்து |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**புரட்டாதிச் சனி :**

பொதுவாகச் சனிக்கிழமை சனீஸ்வர வழிபாட்டிற்கான நாளாக இருந்தபோதிலும் புரட்டாதி மாதத்தில் வரும் சனிக்கிழமைகளில் அனுஷ்டிக்கப்படும் விரதமும் வழிபாடும் மேலான பலனைத் தரவல்லன வாகையால் இத்தினம் சனீஸ்வர வழிபாட்டிற்குச் சிறப்பான நாளாகும். இத்தினத்தில் கறுப்பு எள் பொட்டளமாகக் கட்டி மண் சிட்டியில் வைத்து நல்லெண்ணெய் விட்டு எரித்து வழிபடுவார்கள்.

**கேதார கௌரி விரதம் :**

இவ்விரதம் புரட்டாதி மாத வளர்பிறை அட்டமி அல்லது நவமி அல்லது தசமித் திதியில் ஆரம்பமாகி ஐப்பசி மாதத் தேய்பிறை சதுர்த்தசியில் இருபத்தொரு (14ஆம் நாள்) முடிவுறுகின்றது. இருபத்தொரு நாட்களைக் கொண்ட மஹோன்னத விரதம் இதுவாகும். உமாதேவியார் சிவபெருமானை நோக்கி சிவபூசை செய்து அர்த்தநாரீஸ்வரப் போற்றி வழிபடப் பெற்ற விரதமாகையால் இது கேதார கௌரி விரதம் என்று சொல்லப்படுகின்றது. மணமாகிய பெண்கள் தங்கள் மாங்கல்யம் தொடர்ந்தும் மங்கலமாக இருக்க வேண்டும் என்றும், மணமாகாத கன்னிப் பெண்கள் நல்ல மாங்கல்ய வாழ்வை வேண்டியும் இதனை அனுஷ்டிப்பர்.

மங்கலகரமான வாழ்க்கையை வேண்டி ஆண்களும் இந்த விரதத்தை அனுஷ்டிப்பதுண்டு. விரதம் ஆரம்பமான நாளிலிருந்து இருபத்தொரு இழைகளைக் கொண்ட நூலில் நாள்தோறும் ஒவ்வொரு முடிச்சுகளாக இடப்பட்டு இறுதி நாளன்று அந்த நூலைக் கோயில் குருக்களைக் கொண்டு ஆண்கள் தமது வலது கையிலும், பெண்கள் தமது இடதுகையிலும் அணிந்து கொள்வர்.

**மகாளயம் :**

மகாளய பட்சம் புரட்டாதி அமாவாசையன்று முடிவடையும். அதற்கு முந்திய பதினைந்து நாட்களாகும். இது பிதிர்களை நினைத்து அவர்களுக்குச் செய்யப்படும் தானமாகும். பிதிர்களை நினைத்து மாதந்தோறும் தானம் செய்ய முடியாதவர்கள் இந்தக் காலத்தில் தானங்களைச் செய்வதால் பன்னிரண்டு மாதங்களிலும் செய்த பலனைக் கொடுப்பதாகும். மகா + ளயம் - பிதிர்கள் பூமிக்கு வரும் நாள் இதுவாகும்.

**புரட்டாதி பூர்வபக்க சதுர்த்தசி (புரட்டாதி மாதம் வளர்பிறை 14ஆம் நாள்)**

நடராஜப் பெருமானின் ஆறு அபிஷேகங்களில் இத்தினத்தில் நடைபெறும் அபிஷேகமும் ஒன்றாகும். இத்தினம் நடேசர் தரிசனத்திற்குச் சிறந்த நாளாகும்.

## ஐப்பசி

**வெள்ளிக்கிழமை விரதம் :**

சுக்கிரவாரம் என்றால் வெள்ளிக்கிழமை என்பது பொருள். வெள்ளிக்கிழமை விரதமாவது ஐப்பசி மாதத்து முதலாவது வெள்ளிக்கிழமை தொடங்கி வெள்ளிக்கிழமை தோறுஞ் சுப்பிரமணியக் கடவுளைக் குறித்து அனுஷ்டிக்கும் விரதமாகும். இவ்விரத நாளில் உபவாசமிருத்தல் உத்தமம். அதற்கு இயலாதவர்கள் இரவிலே பழம் முதலியன உட்கொள்ளலாம். இதற்கும் இயலாதோர் ஒருபொழுது பகலில் உணவு கொள்ளலாம். இவ்விரதம் மூன்று ஆண்டுகளுக்கேனும் அனுஷ்டித்தல் வேண்டும். இவ்விரதத்தை நிறைவுசெய்யும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது விரதமிருக்குஞ் சாந்திக் கிரியை களுடன் முடித்தல் வேண்டும். இக்கிரியை "உத்தியாபனம்" எனக் கூறப்படும். விரத பலனை அடையும் பொருட்டுஞ் செய்யும் கிரியை இதுவாகும். ஐப்பசி மாதத்துக் கடைசி வெள்ளிக்கிழமை உத்தியாபனஞ் செய்து கொள்ளுதற்கு உகந்த நாள் ஆகும். மேலும் அம்பிகைக்கும், விநாயகருக்கும் உரிய நாளா கவும் கொள்ளப்படுகிறது.

கந்தசட்டி விரதம் :

ஐப்பசி மாதம் அமாவாசைக்கு அடுத்த பிரதமை முதற் ஷஷ்டி ஈறாகிய ஆறு நாளும் அனுஷ்டிக்கும் விரதம் இதுவாகும். ஒவ்வொரு நாளும் காலையில் நீராடி முருகப்பெருமானை வழிபட்டு, சிறிதளவு நீர்மட்டும் அருந்தி உபவாசம் ஆறு நாளும் இருந்து, ஏழாம் நாள் சிவனடியார்களுடன் பாரணை செய்வது இவ் விரதத்திற்கு நியமமாகும். இதற்கு இயலாதவர் முதலைந்து நாளும் ஒரு பொழுது உண்டு, ஷஷ்டியில் உபவாசஞ் செய்யக் கடவர். இவ்விரதம் ஆறு ஆண்டுகள் அனுஷ்டித்தல் வேண்டும்.

பிரதமையில் சிவபெருமானது நெற்றியிலி ருந்து தெறித்த பொறிகள் ஆறும் சரவணப் பொய்கையில் ஆறுருவாக, அதனை உமாதே வியார் எடுக்க ஆறுதிருமுகமும், பன்னிரண்டு திருக்கையுமுடைய ஒருருவாய் எழுந்தருளிய நாள் இந்தக் கந்தஷஷ்டி நாளாகும். சூரபது மனை முருகன் சங்காரஞ் செய்த நாளும் இதுவேயாம். கந்தபுராண உபதேச காண் டத்தில் இவ்விரதம் பற்றிய செய்திகள் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. தேவர்கள் இவ்விரதத்தை நோற்றுப் பயன்பெற்றதாகவும் இந்நூல் கூறும்.

மறைகளின் முடிவால் வாக்கால் மனத்தினால் அளக்கொணாமல்
நிறைவுடன் யாண்டுமாகி நின்றிடும் நிமல மூர்த்தி
அறுமுக உருவாய்த் தோன்றி அருளொடு சரவணத்தில்
வெறிகமலப் போதில் வீற்றிருந் தருளி னானே.

## கார்த்திகை

திருக்கார்த்திகை விளக்கீடு :

முன்னொரு காலத்தில் தேவர்கள் சிவ பிரானை வேண்டித் தவம் செய்து பலவகை யான வரங்களைப் பெற்றனர். பின் ஆணவமல மமதையால் இறைவனை மதியாது மயக் குற்றனர். அப்பொழுது சிவபிரான் அவர்கள் முன் ஒரு கிழவனாகக் காட்சியளித்து ஒரு தும்பை ஓர் இடத்தில் நட்டுவிட்டு இதை யாராவது பிடுங்குங்கள் என்று கூறினார். ஒருவராலும் அதைப்பிடுங்க முடியவில்லை. ஆணவ மமதை அடங்கிக் கிழவனைப் பார்த்தனர். அப்பொழுது அவர் சோதி வடிவாய் நின்றனர். அன்றைய தினம் கார்த்திகை மாதத்துக் கார்த்திகை நட்சத்திரம் கூடிய பௌர்ணமி நாளாகும். இத்தினமே விளக்கீடு எனக் கொண்டாடப்படுகின்றது.

விநாயக ஷஷ்டி விரதம் :

இவ்விரதம் கார்த்திகை மாதக் கார்த்திகை நட்சத்திரம் கழிந்த மறுநாள் ஆரம்பித்து 21ஆவது நாளாகிய சதய நட்சத்திரமும் ஷஷ்டித்திதியும் கூடிய நாளில் நிறைவு பெறுவதாகும். இது விநாயக விரதங்களில் மிகச் சிறப்பான விரதமாகும். இந்நாள் தான் விநாயப்பெருமான் கஜமுகாசுரனைச் சம்காரம் செய்த நாளுமாகும். இதில் காப்புக் கட்டுதல் முக்கிய நிகழ்வாகும். இவ்விரதத்தில் விநாயகர் அகவல், விநாயக புராணம் என்பன படிக்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கார்த்திகை விரதம் :**

கார்த்திகை மாதத்துக் கார்த்திகை நட்சத் திரம் முதலாகத் தொடங்கி, மாதந்தோறும் வரும் கார்த்திகை நட்சத்திரத்தில் சுப்பிர மணியக் கடவுளைக் குறித்து நோற்கும் விரதம் கார்த்திகை விரதமாகும். கிருத்திகை எனவும் இது கூறப்படும்.

கார்த்திகை நட்சத்திரத்திற்கு முதல் நாளா கிய பரணியில் ஆசாரமாக இருந்து. ஒருபோது உண்டு மறுநாள் ( கார்த்திகை நாள்) முருகனை முறைப்படி பூசைசெய்து வழிபாடாற்றி உபவாசமிருந்து, அடுத்த நாளாகிய ரோகிணி யில் பாரணை செய்தல் உத்தம். இது கைகூடாதவர் பழம் முதலியன இரவில் உட்கொள்ள வேண்டும். இவ்விரதம் பன்னி ரண்டு வருடங்கள் அனுஷ்டித்தல் வேண்டும். அரிச்சந்திரன், அந்திமான், சந்திமான் ஆகி யோர் இவ்விரதத்தை அனுஷ்டித்துச் சித்திகள் அடைந்ததாக வரலாறு கூறுகின்றது. (அந்தி மான் சந்திமான இடையேழு வள்ளல்கள்)

**சோமவாரம் :**

சிவ விரதங்களுள் சோமவார விரதமும் மிக மேலானதாகும். சந்திரனுக்குரிய தினம் திங்கள். எனவே திங்கட்கிழமை சோமவாரம் என அழைக்கப்படுகிறது. கிருதயுகம் தோன்றி யதும் சந்திரன் சிவபெருமானின் முடியில் அமரும் பேற்றினைப் பெற்றதும் கார்த்திகை சோமவாரத்திலே தான். எனவே இம்மாதத்து திங்கட்கிழமை முக்கியத்துவம் பெறுகின்றது. கார்த்திகை மாதத்தில் திங்கட்கிழமைகளில் பகல் முழுவதும் உபவாசமிருந்து சிவபெரு மானைச் சிந்தித்து வழிபாட்டில் ஈடுபட்டு இரவு மட்டும் ஒரு வேளை உணவு உண்ணல் வேண்டும்.

## மார்கழி

**திருவெம்பாவை :**

மாதங்களில் சிறந்தது மார்கழி மாதமாகும். மாதங்களில் நான் மார்கழி என்று கிருஷ்ண பகவான் கீதோபதேசத்தில் கூறுவதிலிருந்து இதன் மகிமையை அறியலாம். மேலும் மார்கழி தேவர்களுக்கு விடியற்காலம். எனவே இறைவனை நினைத்துத் திருப்பள்ளியெழுச்சி, திருவெம்பாவை ஆகியன பாடுவதற்கு மார்கழி உகந்த மாதமாகும்.

மார்கழி திருவாதிரை நட்சத்திரத்திற்கு முந்திய ஒன்பது தினங்களும் திருவெம்பாவை உற்சவ காலங்களாகும். திருவாதிரை நட்சத்திர தினத்தன்று திருவெம்பாவை நிறைவு பெறுகின் றது. திருவெம்பாவை நடராஜப் பெருமானுக்கு உரித்தான உற்சவம்.

மேலும் மார்கழியில் நிகழும் விழா இறைவனின் ஐந்தொழில்களில் அனுக்கிர கத்தைக் குறிப்பதாகையால் இவ்விழா எல்லா விழாக்களிலும் சிறப்புடையதாகும். மார்கழி திருவாதிரையில் நடைபெறும் நடேசர் அபி ஷேகமும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் ஆருத்திரா தரிசனமும் ஆன்ம ஈடேற்றத்துக்கு இன்றியமையாதனவாகும்.

**திருவாதிரை விரதம் :**

மார்கழியில் வரும் திருவாதிரை நட்சத்தி ரத்தோடு கூடிய நன்நாளில் அனுஷ்டிப்பது திருவாதிரை விரதம். இந்த விரதம் சிவபெரு மானுக்கு மிகவும் உகந்தது. இதனையொட்டியே சிவ பெருமானை ஆதிரையின் முதல்வன் என்றும் ஆதிரை யான் என்றும் கூறுவர். மார்கழித்திங்கள் திருவா திரை நாளன்று நடராச ருக்குச் சிறப்புக்கள் நடை பெறும். அவற்றுள் சிதம்பரத்தில் நடப்பது மிகுந்த சிறப்புடையது. இவ்விரதம் சிதம்பரத் திலிருந்து அனுஷ்டிப்பது உத்தமோத்தமம். அங்கு ஆருத்ராதரிசனம் செய்வதற்காக





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநேகர் செல்வர். ஆருத்ரா என்பது ஆதிரையைக் குறிக்கும் சொல். இவ்விரதத்தில் உபவாசம் இருத்தல் மேலாம்.

சங்சரசங்கிதை என்னும் வடமொழி நூலின் உபதேச காண்டத்தில் இவ்விரத மகிமை கூறப்பட்டுள்ளது. கச்சியப்பசிவாச்சாரியாருடைய மாணாக்கராகிய கோனேரியப்ப முதலியார் தமிழில் இதனை மொழி பெயர்த்துள்ளார்.

### தை

**தைப்பூசம் :**

தை மாதம் பூரணையுடன் சேர்ந்து வரும் நட்சத்திர தினம் முருக வழிபாட்டிற்குச் சிறந்த நாளாகும். இத்தினத்தில் பலர் பாற்குடம், காவடி முதலியன எடுத்து முருகனை வழிபடுவார்கள்.

**தை அமாவாசை :**

இத்தினத்தில் தான் அபிராமிப்பட்டரின் பிரார்த்தனையின் நிமித்தம் அம்பிகையின் அருளால் பூரணை தினமாகக் காட்சியளித்தது. இந்நாலில் அபிராமி அந்தாதி படித்துத் தேவியை வழிபடுவார்கள்.

### மாசி

**மாசி மகம் :**

மாசி மாதத்தில் மக நட்சத்திரம் கூடிய நாளான இத்தினம் நடராஜப்பெருமானின் ஆறு அபிஷேகத் தினங்களில் ஒன்றாகையால் நடேசர் தரிசனத் திற்குச் சிறந்த நாளாகும். அம்பிகை தாட்சாயணியாகத் தாமரை மலரில் அவதரித்த நாள் இதுவாகும்.

**மகா சிவராத்திரி :**

இராத்திரி என்பது இருட்காலம் என்பதை யாவரும் அறிந்தது. எனினும் உண்மையான இருட்காலம். இறைவன் உலகம் முழுவதையும் ஒடுக்கி நிற்கும் காலம். இதனை "சர்வசங்கார காலம்", "பிரளயகாலம்", "ஊழி முடிவு" என்று பலவாறாகக் கூறுவர். இரவில் ஒளியின்றி உயிர்களின் நடமாட்டமில்லாது எங்கும் அமைதி நிலவுவது போல், இந்த ஊழி ஒடுக்க காலத்தில் பஞ்ச பூதங்களும், தநு, கரண, புவனபோகங்களும் ஒன்றுமேயில் லாது உயிர்கள் செயலற்றுக் கிடப்பனவாம். ஆகவே அப்பொழுது அமைதியே நிலவும்.



இந்தப் பேரிருளில் தனித்து நிற்பவன் சிவபெருமான் ஒருவனேயாம். நாம் நாள் தோறும் காண்கின்ற இரவு அனைத்துயிர்க்கும் உரிய சாதாரண இராக்காலம். ஆயின் உலக ஒடுக்கநிலையாகிய இரவு சிவனுக்கே உரிய சாதாரண இராக்காலமாகும். இதனாற்றான் இவ்விரவு "சிவராத்திரி" எனப்பெயர் பெற்றுள்ளது.

ஒடுங்கிய உலகத்தை மீளத் தோற்றுவித்தற்காக இறைவன் சோதி வடிவான இலிங்கமாய் நின்று "இலளிதாதேவி" என்னும் பெயரோடு சத்தியைத் தோற்றுவிக்க, அத்தேவி இலிங்கப்பிரானை வணங்க, அவர் இலிங்கோற்பவராகத் தோன்றி உலகின் மறு தோற்றத்தின் பொருட்டுப் பிரம்மா முதலியோரைப் படைத்துச் சிருட்டித் தொழிலை ஆரம்பிப்பார். இதனையே மாசிமாதத்துச் சதுர்த்தசித் திதியில்வரும் இரவும் அன்று இரவு மூன்றாம் சாமம் நடைபெறும் இலிங்கோற்பவ பூசையும் எடுத்துக்காட்டுகின்றன. சிவனிடத்தில் அன்பு பூண்டொழுகுவோர்க்கு அன்றைய நாள் சிறந்த நோன்பு நாளாகும்.

**விரதமுறை :**

சைவசமயிகள் யாவராலும் அனுஷ்டிக்கப்பட வேண்டிய விரதம் சிவராத்திரி விரதமாகும். மாசிமாதத்துத் தேய்பிறை சதுர்த்தசித் திதியில் சிவபெருமானைக் குறித்து அனுஷ்டிப்பது சிவராத்திரி விரதம். இந் நாளில் உபவாசம் இருப்பதோடு, இரவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுவதையும் நித்திரையின்றிச் சிவபூசையிலும், சிவ வழிபாட்டிலிலும் செலவு செய்தல் வேண்டும். இரவில் நான்கு சாமப் பூசைகளும் அவ்வக்காலங்களில் செய்தல் உத்தமம். இன்றேல் ஒரு காலத்திற் சேர்த்தேனும் சேய்தல் வேண்டும். இது மத்திமம் ஆகும். நான்கு சாமமும் பூசை செய்வோர் முதற் சாமத்தில் பாலாலும் இரண்டாம் சாமத்தில் தயிராலும். மூன்றாம் சாமத்தில் நெய்யாலும். நான்காம் சாமத்தில் தேனாலும் பெருமானுக்கு அபிஷேகம் செய்யக் கடவர். நான்கு சாமப் பூசைகளிலும் வில்வத்தால் அர்ச்சிப்பது மேலான பலனைக் கொடுக்கும். இக்காலங்களில் விநாயகருக்கும், சண்டேசுவரருக்கும் பூசை செய்தல் வேண்டும். சிவபூசை இல்லாதோர் நான்கு சாமமும் சிவாலய தரிசனம் செய்வதோடு, பஞ்சாட்சர செபம், சிவபுராணம் படித்தல், கேட்டல் முதலியவற்றில் இரவைக் கழித்தல் வேண்டும். உபவாசம் இருக்க இயலாதோர் நீரேனும் பாலேனும் உண்டு கொள்ளலாம். இரவு முழுவதும் இந்நாளில் நித்திரை விழிக்க முடியாதவர் பதினாலாவது நாழிகையில் வரும் இலிங்கோற்பவ காலம் வரையிலாயினும் நித்திரை ஒழித்தல் வேண்டும். இலிங்கோற்பவ காலத்தில் செய்யும் தரிசனமும் பூசையும் பெரும்பலன் நிறைந்தன. இறைவனின் திருவுளம் பற்றிய காலம் இதுவாகும்.

உபவாசம் மேற்கொண்டோர் அடுத்த நாட்காலையில் நித்திய கருமங்களை முடித்துக்கொண்டு சூரியோதயத்தின் முன் ஆறு நாழிகைக்குள்ளே சிவனடியாரோடு பாரணம் பண்ணல் வேண்டும். பாரணம் பண்ணியபின் பகலிலே நித்திரை செய்யக் கூடாது. (பாரணம் - உபவாசத்திற்குப் பின் உட்கொள்ளும் உணவு)

சிவராத்திரி விரதபலன் பாவநீக்கமும், உலகம் எல்லா நலன்களும் பெற்றுச் செழித்தலுமே.

**சிவராத்திரியின் வகைகள்**

1. மகா சிவராத்திரி
2. யோக சிவராத்திரி
3. நித்திய சிவராத்திரி
4. மாத சிவராத்திரி
5. பட்ச சிவராத்திரி என ஐந்து வகைப்படும்

## பங்குனி :

**பங்குனி உத்தரம் (கல்யாணசுந்தர விரதம்)**

உலக மாதாவாகிய உமாதேவியார் மலையரசன் மகளாகத் திருஅவதாரம் செய்து சிவபெருமானைத் திருமணம் செய்தது இத்தினமாகும். இத்தினம் விழா எடுப்பதற்கும் தரிசனத்துக்கும் சிறந்தநாளாகும். இவ்விரதத்திற்கு இரவில் பழமும் பாயாசமும் உண்பது நியதி. இயலாதவர்கள் நண்பகல் ஒரு பொழுது உணவு உண்ணலாம்.

**பங்குனித் திங்கள் :**

பங்குனி மாதத்தில் வரும் திங்கள் ஏனைய மாதங்களில் வரும் திங்களைவிட விஷேசமான திங்களாகும். அதாவது பங்குனியிலே வரும் திங்கள் அம்பிகைக்கு உரித்தான, சிறப்பான நாளாகும். இந்நாளில் விரதம் இருந்து வழிபாடாற்றுவது சாலச் சிறந்ததாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து மத வழிபாட்டு முறைகளும் ஆலய நடைமுறைகளும்

**திரு. குமாரசாமி இரவீந்திரன்**
*அதிபர், போக்கட்டி அரசினர் தமிழ்கலவன் பாடசாலை, கொடிகாமம்.*

முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானை வழிபடுஞ் சமயம் சைவசமயம் எனப்படும். சிவபெருமானை வழிபடுபவர்கள் சைவ சமயிகள் எனப்படுவர். சைவசமயிகளுக்கு ஆலய வழிபாடு மிகவும் இன்றியமையாதது. சிவபெருமான் எழுந்தருளி அருள்புரியும் இடம் கோயில் எனப்படும்.

இத்தகைய கோயில்களுக்கு நாள்தோறுஞ் சென்று முறைப்படி வழிபாடு செய்தல் வேண்டும். நாள்தோறுஞ் செல்ல முடியாதவர்கள் வெள்ளிக்கிழமைகளில், வேறு விரத நாட்களிலுமாவது தவறாது சென்று தரிசனஞ் செய்தல் வேண்டும். திங்கட்கிழமை, செவ்வாய்க்கிழமை, வெள்ளிக்கிழமை, பிரதோஷம், பூரணை அமாவாசை, திருவாதிரை, கார்த்திகை மாதப்பிறப்பு, சூரிய கிரகணம், சந்திர கிரகணம், சிவராத்திரி, நவராத்திரி விநாயகர் சதுர்த்தி, கந்தசஷ்டி என்பன சிவாலயதரிசனத்திற்குரிய சிறப்பான புண்ணிய காலங்களாகும்.

**கோயில் பரிசுத்தமான இடம்** : ஆதலால் அங்கு செல்வோர் தம் உடலையும் உள்ளத்தையும் தூய்மையாக வைத்திருத்தல் வேண்டும். உடலிலுள்ள அழுக்கு உள்ளத்தையும் அழுக்காக்குவதோடு ஆலயத்தின் புனிதத்தையுங் கெடுக்கும். ஆசௌசம் உடையவரும், அசுத்தமான பொருளைத் தீண்டியவரும், நீராடாதவரும், ஆசாரமில்லாதவர்களாவர். ஆகையால் இவர்கள் கோயிலுக்குள்ளே செல்லுதல் ஆகாது.

**திருக்கோயில் வழிபாட்டுமுறை** : கோயிலுக்குச் செல்வோர் உணவு கொள்ளுமுன்னரே நீராடி, தோய்த்துலர்ந்த ஆடைகளைத் தரித்து, விபூதியும் உருத்திராக்கமும் அணிந்து, சந்தியாவந்தனம் முதலியன முடித்துச் சிவ நாமங்களை உச்சரித்துக்கொண்டு மெல்லமெல்ல நடந்து செல்ல வேண்டும்.

திருக்கோயிலைச் சமீபித்ததும் கை, கால் கழுவி, ஆசமனம் பண்ணி தூலலிங்கமாகிய கோபுரத்தைத் தரிசித்து வணங்கி, சிவநாமங்களை உச்சரித்துக் கொண்டு உள்ளே செல்லுதல் வேண்டும். அங்கே கொடித்தம்பத்தையும் பலிபீடத்தையும் நந்திதேவரையும் வணங்கிக் கொடித்தம்பத்திற்கு இப்பால் ஆண்கள் அட்டாங்க வணக்கமும், பெண்கள் பஞ்சாங்க வணக்கமும் செய்தல் வேண்டும். அட்டாங்க வணக்கமாவது தலை, கையிரண்டு. செவியிரண்டு. மேவாய், புயங்களிரண்டு என்னும் எட்டு உறுப்புக்களும் நிலத்திலே பொருந்தும்படி வணங்குதலாகும். இங்ஙனம் வணங்கும்போது பூமியிலே சிரசை வைத்து மார்பு பூமியிற் படும்படி வலக்கையை முன்னும், இடக்கையைப் பின்னும் நேரே நீட்டிபின் அம்முறையே மடக்கி, வலப்புயமும் இடப்புயமும் மண்ணிலே பொருந்தும்படி கைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரையை நோக்கி நீட்டி, வலக்காதை முன்னும் இடக்காதைப் பின்னும் பொருந்தச் செய்தல் வேண்டும். பஞ்ஞாங்க வணக்க மாவது தலை, கையிரண்டு. முழந்தாள் இரண்டு என்னும் ஐந்து உறுப்புக்களும் நிலத்திலே பொருந்தும்படி வணங்குதலாகும். இவை தவிர. திரியாங்க வணக்கமும் செய்யப் படுதல் உண்டு. திரியாங்க வணக்கமாவது சிரசிலே இரண்டு கைகளையும் குவித்து வணங்குதலாம். இது ஆண், பெண் இருபா லாருக்கும் உரியது. இவ்வணக்கங்களும், வீதிவலம் வருதலும் ஒரு தரமேனும், இரு தரமேனும் செய்தல் குற்றமாகும். மூன்று தரமாயினும் ஐந்து தரமாயினும் ஏழு தரமா யினும் ஒன்பது தரமாயினும் பன்னிரண்டு தரமாயினும் செய்தல் வேண்டும்.

கொடித்தம்பத்திற்கு இப்பால் வணங்கிய பின் இரண்டு கைகளையும் குவித்துத் திருவைந் தெழுத்தை உச்சரித்துக் கொண்டு, கால்களை மெல்ல மெல்ல வைத்துக் குறைந்தது மூன்று தரமாயினும், கூடியது இருபத்தொரு தரமா யினும் வீதிவலம் வருதல் வேண்டும். அங்ஙனம் வந்து மீண்டும் சந்நிதியிலே வணங்குதல் வேண்டும். ஆலயத்திலுள்ள மூர்த்திகளை வணங்குங்கால் முன்பு துவார பாலகரை வணங்கிப் பின்பு திருநந்தி தேவரை வணங்கி, "பகவானே உம்முடைய திருவடி களை அடைந்து அடியேன் உள்ளே புகுந்து சிவபெருமா னைத் தரிசித்துப் பயன்பெறும் பொருட்டு அனுமதி தந்தருளும்" என்று பிரார்த்தித்துக் கொண்டு உள்ளே போய், முன் விக்கினேஸ்வரரைத் தரிசித்தல் வேண்டும். பின் சிவலிங்கப்பெருமான் சந்நிதியையும் உமாதேவியார் சந்நிதியையும் அடைந்து அர்ச்சனை செய்வித்து விபூதி வாங்கித் தரித்துக்கொள்ள வேண்டும். அதன்பின் முறையே சபாபதி (நடராசர்), தட்சணா மூர்த்தி, சோமாஸ்கந்தர், சந்திரசேகரர், சுப்பிரமணியர் முதலியோரையும் சமயகுரவர் நால்வரையும் வணங்குதல் வேண்டும். வ்ணங் கும் போது இரண்டு கைகளையும் மார்பி லேனும், சிரசிலேனும் குவித்துக்கொண்டு தேவார திருவாசகம் போன்ற திருமுறைகளை மனங்கசிந்துருகி ஓதுதல் வேண்டும். விக்கினேசுவரரைத் தரிசிக்கும் போது முட்டி யாகப் பிடித்த இரண்டு கைகளினாலும் நெற்றியிலே மூன்றுமுறை குட்டி, வலக்காதை இடக்கையினாலும், இடக்காதை வலக்கையி னாலும் பிடித்துக் கொண்டு மூன்று முறை தாழ்ந்து எழுந்து கும்பிடுதல் வேண்டும். இப்படிக் குட்டுவதனால் அவ்விடங்களி லுள்ள நரம்புகளில் அமிர்தம் சுரப்பதாகவும், தாழ்ந்தெழுவதினால் அவ்வமிர்தம் உடல் முழுதும் செல்வதாகவும் பெரியோர் கூறுவர். இவ்வணக்கம் தோப்புக்கர்ணம் அல்லது தோப்புக் கரணம் என வழங்கும்.

இறுதியாகச் சண்டேசுரரைத் தரிசித்துக் கும்பிட்டுத் தோத்திரஞ் செய்து மூன்றுமுறை கைகொட்டிச் சிவதரிசன பலனைத் தந்தரு ளுமாறு பிரார்த்தித்து, வலப்பக்கமாக வந்து சிவசந்நிதியை அடைந்து, இடப தேவருடைய கொம்பின் நடுவாகச் சிவலிங்கப் பெரு மானைத் தரிசித்துப் பலிபீடத்திற்கு இப்பால் மும்முறை வணக்கஞ் செய்து எழுந்து, அமைதியான ஓரிடத்தில் இருந்து திருவைந் தெழுத்தை இயன்றமட்டும் உருச்செபித்துக் கொண்டு சிவ சிந்தனையோடு அமைதியாக வீட்டிற்குச் செல்லுதல் வேண்டும்.

**வணக்க முறைகள் :**

வணங்குதல் வடமொழியில் நமஸ்காரம் என்று அழைக்கப்படும். ஒருவருக்கு மரியாதை செலுத்துவதற்கு, பணிவைக் காட்டுவதற்கு வணங்குதல் மிக முக்கியமாகும். இறைவன் சந்நிதானத்தில் கொடித் தம்பத்திற்கு முன்பாக விழுந்து வணங்குதல் வேண்டும். இது ஐந்து வகைப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏகாங்கம் :

தலையை மட்டும் தாழ்ந்து பணிந்து வணங்குதல், பெரியவர்களைக் கண்டால் இவ் ஏகாங்க வணக்கமே செய்யவேண்டும்.

துவியாங்கம்:

சிரசில் (தலையில்) வலக்கையை மட்டும் வைத்து வணங்குதல் (இது காவல்துறையின் சலூட் அடிப்பதைக் குறிக்கும்.)

திரியாங்கம்:

சிரசில் இருகைகளையும் குவித்து வணங்குதல், கோபுரத்தைக் கண்டதும் இவ் வணக்கம் செய்ய வேண்டும். (இம் மூன்றும் இருபாலரும் செய்யலாம்)

பஞ்சாங்கம் :

தலை, இருகை, இரு முழந்தாள் எனும் ஐந்து உறுப்புகள் நிலத்தில் பொருந்த வணங்குதல் (இது பெண்கள் மட்டும் செய்ய வேண்டும்)



அஷ்டாங்கம் :

தலை, இருகை, இருசெவி, இருபுயம், மோவாய் எனும் எட்டு அங்கங்கள் பொருந்த வணங்குதல். (இது ஆண்களுக்கு மட்டும் உரியது) இவற்றில் பஞ்சாங்க வணக்கமும், அஷ்டாங்க வணக்கமும் விரும்பத்தக்கது.



வணங்கும்போது மேற்கு அல்லது தெற்கில் கால்களை நீட்டவேண்டும். சங்கிராந்தி, பிற்பகல், சூரிய கிரகண நாளில் மேற்கில் கால்களை நீட்டுதல் கூடாது. கொடிமரத்தைக் கடந்து உள்ளே சென்றதும் எந்த இடத்திலும் விழுந்து வணங்குதல் கூடாது. மும்மூர்த்திகளுக்குச் சிரசின் மேல் 12 அங்குலம் உயர்த்தியும், ஏனைய தெய்வங்களுக்கு சிரசின்மேல் கூப்பியும் வணங்குதல் வேண்டும்.

நண்பகல் 12.00 மணிக்கு மேல் சூரியன் மறைவதற்கு முன் அஷ்டாங்க நமஸ்காரம் செய்யலாகாது.

பிரதட்சணபலன் :

பிரதஷிணம் இறைவனை வலம்வருதல் எனப்பொருள்படும். கர்ப்பக்கிரகம் திறந்துள்ளபோதே பிரதட்சணம் செய்யப்படல் வேண்டும். உட்பிரகாரப் பிரதட்சணத்தைவிட, வெளிப்பிரகாரப் பிரதட்சணம் மும்மடங்கு நன்மையைத் தரும்.

பிரதட்சணமும் எண்ணிக்கையும் :

| | |
|---|---|
| விநாயகருக்கு | - ஒரு முறை |
| சிவனுக்கு | - மூன்று முறை |
| அம்மாள் | - நான்கு முறை |
| ஏனைய தெய்வங்களுக்கு | - மூன்று முறை |

ஆலயத்தை வலம் வருவதால் ஏற்படும் பலன்கள்

| | |
|---|---|
| மூன்றுமுறை | - விரும்பிய காரியம் நடைபெறும். |
| ஐந்து முறை | - காரிய வெற்றி |
| ஏழு முறை | - நல்லகுணம், எண்ணம், அமைதி |
| ஒன்பது முறை | - ஆயுள் விருத்தி உண்டாகும் |
| பன்னிரண்டு முறை | - உடல் வலிமை |

ஆண்கள் அங்கப்பிரதட்சணம் செய்யலாம். பெண்கள் அடிமேல் அடிவைத்து அடிப்பிரதட்சணம் செய்யலாம். பெண்கள் அங்கப்பிரதட்சணம் செய்யக்கூடாது. ஆண்கள் முட்டுக்காலில் நின்று வணங்குதல் கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காலையில் வலம் வருதல் :**

நோய் நீக்கம் (முற்பிறவியில் செய்த பாவம் நீங்கும்.)

**பகல் :**

வேண்டிய வரம், தனம் பெருகும் (இரு பிறவி களில் செய்த பாவம் நீங்கும்.)

**மாலை :**

பாவ நீக்கம் (இப்பிறவியில் செய்த பாவம்)

**அர்த்த சாமம் :**

மோட்சம், வீடுபேறு என்பவற்றைத் தரும்

**ஆறுகாலப் பூசைகளும் பலன்களும்**

**உஷத்காலம் (அதிகாலை) :**

ஆண், பெண், பிள்ளை கள் இவர்களுக்கு நன்மை

**பிராதக்காலம் (காலை) :**

சுப, ஹோமாதி விருத்தி

**மாத்யான்னிகம் (உச்சி) :**

அரசன், நாடு வளர்ச்சி

**சாயங்காலம் (மாலை) :**

பயிர்த்தொழிலின் அபிவிருத்தி

**பிற்பகல் :**

அரக்கர்கள் அழிவு

**அர்த்த சாமம் (இரவு) :**

கால்நடைகளின் அபிவிருத்தி

**அபிஷேக பலன்**

| | |
|---|---|
| தைலாபிஷேகம் (எண்ணை) | - சுகம் கொடுக்கும். |
| மாப்பொடி | - கடனைப் போக்கும். |
| நெல்லி | - முள்ளிப்பொடி வியாதியைப் போக்கும். |
| மஞ்சள் பொடி | - வசீகரணம் உண்டாகும். |
| ஜலதிரவியம் | - சௌபாக்கியம் தரும். |
| பஞ்சகவ்யம் | - தூய்மை உண்டாக்கும். |
| பஞ்சாமிர்தம் | - புஷ்டி அளிக்கும். |
| நெய் | - வெற்றியைத் தரும். மோட்சம் கிடைக்கும். |
| பால் | - ஆயுள் பெருகும். |
| தயிர் | - மக்கட் பேறு அளிக்கும். |
| தேன் | - சுகமளிக்கும். |
| கரும்புச்சாறு | - பிணி நீங்கும். |
| சர்க்கரை | - பகையை அழிக்கும். |
| வாழைப்பழம் | - பயிரை வளர்க்கும். |
| மாம்பழம் | - சந்தானைத்தைஅளிக்கும். |
| மாதுளை | - கோபத்தை நீக்கும். |
| நாரத்தை | - நேர்மை அளிக்கும். |
| எலுமிச்சை | - யமபயத்தை அழிக்கும். |
| அன்னம் | - சாம்ராஜ்யம் தரும். |
| இளநீர் | - போகம் அளிக்கும். |
| அன்னாபிஷேகம் | - சாம்ராஜ்ய மளிக்கும். |
| சந்தனம் | - செல்வத்தை அளிக்கும். |
| கும்பம் | - மோட்சம். |
| பதரோதகம் | - பயத்தை நீக்கும். |
| சங்குஜலம் | - வெற்றி. |
| சஹஸ்ரதாரை | - செழிப்பு. |

**ஷோடசோபசாரம் பலன்கள்**

| | |
|---|---|
| ஆவாஹனம் | - இறைவனை அழைத்தல். |
| ஆசனம் | - இருக்கை கொடுத்தல். |
| பாத்யம் | - திருவடிகளைக் கழுவ நீர் கொடுத்தல். |
| அர்க்யம் | - மரியாதையைக் காட்ட நீர் கொடுத்தல். |
| ஆசமனம் | - அருந்த நீர் கொடுத்தல். |
| மதுவர்க்கம் | - பால், பழம் கொடுத்தல். |
| ஸ்நானம் | - நீராடல் (அபிஷேகம்.) |
| வஸ்திரம் | - உடைகொடுத்தல். |
| யஞ்ஞோபவீதம் | - பூனூல் போடுதல் |
| கந்தம் | - வாசனைத் திரவியமளித்தல். |
| புஷ்பம் | - மலர் தூர்த்துதல். |
| தூபம் | - சாம்பராணி காட்டுதல். |
| தீபம் | - விளக்கு ஒளி காட்டுதல். |
| நைவேத்யம் | - நிவேதனம். |
| தாம்பூலம் | - வெற்றிலை பாக்குத் தருதல். |
| நீராஞ்சனம் | - கற்பூரம் காட்டுதல். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நைவேத்தியங்களும் பலன்களும்**

| | | |
|---|---|---|
| சர்க்கரைப் பொங்கல் | - | செல்வம் பெருகும் |
| பருப்புப் பொங்கல் | - | காரியசித்தி |
| புளி அன்னம் | - | வியாதி நிவர்த்தி |
| தேங்காய் அன்னம் | - | லஷ்மிகரம் (செல்வம் பெருகும்) |
| எலுமிச்சம் பழம் அன்னம் | - | ரோக நாசம் (துன்பம் போகும்) |
| மிளகுச் சம்பா | - | வியாதி நிவர்த்தி (நோய் நீக்கம்) |
| கற்கண்டு அன்னம் | - | மங்களம் உண்டாகும் |
| பாயாசம் | - | தான்ய விருத்தி (பயிர் செழிப்பு) |
| வடை | - | ஆரோக்யம், சரீர பலம் |
| தயிர் அன்னம் | - | வியாதி நீக்கம் |
| பஷணங்கள் | - | துன்பம் போகும் |
| பானகம் | - | காரியசித்தி |
| பால் அன்னம் | - | ராஜபோகம் |

**தீபஷோடசோபசாரமும் பலன்களும்**

| | | |
|---|---|---|
| தூபம் | - | உற்சாகத்தைத் தரும். |
| ஏகதீபம் | - | விழிப்பைத் தரும். |
| அலங்கார தீபம் | - | சாம்ராஜ்யத்தைத் தரும். |
| நாகதீபம் | - | லோகாதிபத்யம் தரும். |
| விருஷபதீபம் | - | அரசை அளிக்கும். |
| புருஷாமிருக | - | தீபம்-அரச சித்திகள். |
| சூலதீபம் | - | வயிற்றுவலி நீங்கும். |
| ஆமைதீபம் | - | நீர்க்கண்டத்தைத் தடுக்கும். |
| கஜதீபம் | - | ஐஸ்வர்யத்தைக் கொடுக்கும். |
| சிம்மதீபம் | - | ஆயுளைக் கொடுக்கும். |
| வியாக்ரதீபம் (புலி) | - | விலங்குகளிடத்தில் பயத்தைப் போக்கும். |
| கொடித்தீபம் | - | மங்கலத்தைத் தரும். |
| மயூரதீபம் (மயில்) | - | புத்திரப்பேறு அளிக்கும். பஞ்சதட்டுடன் |
| பூர்ணகும்பம் | - | சாம்ராஜ்யமளிக்கும். |
| நஷத்திர தீபம் | - | பாதுகாப்பு ஆதிபத்தியம் அளிக்கும். |
| மேருதீபம் | - | எல்லா நாட்டிலும் செல்வாக்களிக்கும். |

தீபாராதனை இறைவனின் திருவடி முதல் நெற்றிவரை, திருக்கண்வரை, நாடிவரை, என வலமாக மூன்று முறை காட்டப்பட வேண்டும்.

**முதலாவது சுற்று :**

உலக நன்மைக்காகவும்

**இரண்டாவது சுற்று :**

கிராம நன்மைக்காகவும்

**மூன்றாவது சுற்று :**

வீட்டு நன்மைக்காகவும் காட்டப்படும்.

இவற்றைத் தரிசிப்பதால் மனிதர்களுக்கு ஆயுள், செல்வம், மக்கட்பேறு உண்டாகின்றன.

**ஹோமப் பொருட்களும் பலன்களும்**

| | | |
|---|---|---|
| பலாசு | - | மக்கள் விருத்தி |
| கருங்காலி | - | வெற்றி |
| அரசு | - | செல்வம் |
| அத்தி | - | இன்பம் |
| சந்தனக்கட்டை | - | அமைதி |
| எள் | - | முத்தி |
| உழுந்து | - | பசுவிருத்தி |
| நெற்பொரி | - | சௌபாக்கியம் |
| பயறு | - | ஆயுள் விருத்தி |
| நெல் | - | ராஜவசியம் |
| வன்னி | - | வசியம் |
| ஆல் | - | ஆரோக்கியம் |
| வில்வம் | - | ஆரோக்கியம் |
| நாயுருவி | - | வீரலட்சுமி |
| தர்ப்பை | - | மோட்சம் |
| வெள்ளெருக்கு | - | துன்பம் போகும் |
| தேங்காய் | - | சர்வசித்தி |
| மா | - | ஐஸ்வர்யம் |
| நெய் | - | துன்பம் போகும் |
| எருக்கு | - | சௌபாக்கியம் |
| அறுகு | - | வீரம் |
| முருக்கு | - | கடாட்சம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| நவக்கிரகங்கள் | | நிவேதனம் | | தானியம் | | நிறம் |
|---|---|---|---|---|---|---|
| சூரியன் | - | சர்க்கரைப்பொங்கல் | - | கோதுமை | - | சிவப்பு |
| சந்திரன் | - | பால்பாயசம் | - | நெல் | - | வெள்ளை |
| செவ்வாய் | - | பொங்கல் | - | துவரை | - | சிவப்பு |
| புதன் | - | புளியோதரை | - | பயறு | - | பச்சை |
| வியாழன் | - | தயிர்சாதம் | - | கடலை | - | மஞ்சள் |
| வெள்ளி | - | நெய்ப்பொங்கல் | - | மொச்சை | - | வெள்ளை |
| சனி | - | எள்ளுச்சாதம் | - | எள் | - | கறுப்பு |
| ராகு | - | உழுந்துச்சாதம் | - | உழுந்து | - | நீலம் |
| கேது | - | சித்ரான்னம் | - | கொள்ளு | - | பலவர்ணம் |

**கடவுள்** **பூசைக்குரிய பூக்கள்**

விநாயகர் - அறுகு, சண்பகம், பாதிரி, சூரியகாந்தி, வன்னி

சிவன் - கொன்றை, வில்வம், தும்பை, சங்குப்பூ, செம்பருத்தி

விஷ்ணு - துளசி, மாதவி, குருந்து, வாகை, மத்யாணி, கருங்கால், கொன்றை, முருக்கு, அலரி, செம்பரத்தை, செந்திலகம், மருக் கொழுந்து

பிரமன் - அலரி

முருகன் - வெட்சி, கடம்பு, முல்லை, குறிஞ்சி, மல்லிகை, காந்தள்

சூரியன் - தாமரை

உமா - நீலோத்பலம், தாமரை, சூரிய காந்தி, செம்பவளமல்லி, நந்தியாவர்த்தை

இலக்குமி - நெய்தல், செந்தாமரை

சரஸ்வதி - வெண்தாமரை

வரலட்சுமி - ஐந்துமடல் கொண்ட தாழம் பூ

துர்க்கை - செவ்வெருக்கு சிவப்பு, அரலி, கொன்றைமலர்

அக்னி - வன்னி

**நவக்கிரகங்கள் பூசைக்குரிய பூக்கள்**

சூரியன் - செந்தாமரை

செவ்வாய் - செண்பகம்

வியாழன் - முல்லை

சனி - கருங்குவளை

கேது - செவ்வல்லி

சந்திரன் - வெள்ளரலி

புதன் - வெண்காந்தள்

வெள்ளி - வெண்தாமரை

ராகு - மந்தாரை

**கடவுளுக்கு ஆகாத பூக்கள்**

விநாயகர் - துளசி

சிவன் - தாழம்பூ

விஷ்ணு - அட்சதை (எருகம்பூ, ஊமத்தம் பூ)

வைரவர் - நந்தியாவர்த்தம், மல்லிகை

சூரியன் - வில்வம்

உமா - நெல்லி

துர்க்கை - அறுகு

இலட்சுமி - தும்பைப்பூ

சரஸ்வதி - பவளம்

எல்லாத் தெய்வங்களுக்கும் மல்லிகை, முல்லை, கருங்குவளை முதலிய பூக்களையும், உக்கிரமான தெய்வங்களுக்கு செந்நிறப் பூக்களையும் வழிபாட்டில் பயன்படுத்தலாம்.

**கடவுள் வழிபாடும் பலன்களும்**

விநாயகர்

தடைகள் நீங்க

மகா இலட்சுமி, வர இலட்சுமி

செல்வம் சேர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தட்சணாமூர்த்தி
நோய் தீர
சுப்பிரமணியர், செவ்வாய்க்கிரகம்
வீடு, நிலம் பெற
உருத்திரன்
ஆயுள், ஆரோக்கியம் பெற
ஸ்ரீ ராஜராஜேஸ்வரி
மனவலிமை, உடல் வலிமை பெற
சந்தான இலட்சுமி
சந்தான கிருஸ்ணர்
புத்திர பாக்கியம் பெற
ஸ்ரீ சரஸ்வதி தேவி
கல்வி சிறக்க
ஸ்ரீ கஜஇலட்சுமி
புதிய தொழில் தொடங்க
தான்யஇலட்சுமி
விவசாயம் தழைக்க
ஸ்ரீ அன்னபூரணி
உணவு கஷ்டம் நீங்க
திருச்செந்தூர்
முருகன் பகைவர் தொல்லை நீங்க
ஸ்ரீ முத்துமாரி
திருஷ்டி விலக

**கும்ப தத்துவம்**

| | |
|---|---|
| குடம் | - தசை |
| அதனுள் உள்ள நீர் | - குருதி |
| அதனுள் உள்ள இரத்தினங்கள் | - எலும்புகள் |
| குடத்தை சுற்றியுள்ளநூல் | - நாடிகள் |
| செபிக்கப்படும் மந்திரம் | - உயிர் |
| கூர்ச்சம் | - தலைமுடி |
| மாவிலை | - சடை |
| தேங்காய் | - தலை |
| வஸ்திரம் | - தோல் என்பவற்றைக் குறிக்கும். |

**கற்பூர ஆராத்தியின் தத்துவம்**

பூஜை முடிவில் கற்பூரதீபம் காட்டுவது வழக்கம். இறைவனுக்குக் கற்பூர ஆராத்தி எடுக்கும் போது கற்பூரம் எரிந்த பின்பு சாம்பலோ, தூசியோ வேறு எதுவுமே மிச்சம் இருப்பதில்லை. கற்பூரம் தன் வாசனையை ஞானத்தீயில் இட்டு எதுவும் மீதம் இல்லாத நிலையில் தெய்வத்தை அடைகின்றது. கற்பூரதீபம் ஏற்றிக் காட்டுகையில் இறையருள் உலகத்தில் இருக்கும். அது எரிந்து சாம்பலாவது போல ஆண்டவனுடைய ஜோதியில் ஆன்மா கரைந்து ஒன்றுபட வேண்டும் என்பதை உணர்த்துகின்றது.



**மணி அடிப்பதன் தத்துவம்**

ஆலயத்தில் பூஜையின்போது வெளிப் பிரகாரத்தில் பெரிய மணி (கண்டா மணி) ஒலிக்கும். பூஜை நடைபெறும் போதும் சிவாச்சார்யாரின் இடது கையில் உள்ள மணி ஒலிக்கும். இவை அசுரர்களை நீக்கி தேவர்களை அழைப்பதற்காகவே அடிக்கப்படுகின்றன.



கைமணியின்

| | |
|---|---|
| மேற் பகுதியில் | - இடபம் |
| நாக்கு | - சரஸ்வதி |
| தண்டு | - சூரியன் |
| நாதம் | - ஈஸ்வரன் மணியின் |
| அதிதேவதை | - வாசுதேவன் |
| நான்கு கால்கள் (பக்கங்கள்) | - இருக்கு. யசூர், சாமம், அதர்வம். |

**நைவேத்திய தத்துவம்**

இறைவன் அருளால் கிடைத்த உணவுப் பொருட்களை இறைவனுக்குப் படைத்து பின் பிரசாதமாக அனைவருக்கும் வழங்குவதே வழமை. "நிவேதயாமி" என்றால் அறிவிக்கின்றேன் என்று பொருள். "உன்கருணையால் இந்த உணவு கிடைத்திருக்கிறது" என்று நன்றியை அறிவித்து உண்பதுதான் இதன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள். அதாவது நாம் உண்ணும் உணவு நம் உழைப்பால் கிடைத்தாலும் அதற்கு வேண்டியதை அளிப்பவன் இறைவனே. அவனுக்கு அதை வைத்து அவன் அனுமதியுடன் உண்பது தான் நைவேத்தியமாகும்.

**அங்கப்பிரதட்சிண தத்துவம்**

அங்கப்பிரதட்சிணம் ஆண்கள் மட்டுமே செய்யவேண்டும். ஆலயங்களிலே பெரிய பெரிய மகான்கள், யோகிகள், தேவர்கள் வந்து வழிபட்ட இடம் கோயிலாகும். பல தேவர்கள் கோயிலுக்கு வந்து வழிபட்டுச் சாபவிமோசனம் பெற்றுள்ளனர். எனவே. இவர்களின் திருவடிபட்ட அந்த இடத்தில் நம்முடைய



தலை முதல் கால் வரை உள்ள அங்கங்கள் படும்படியாக அங்கப் பிரதட்சணம் செய்யும் போது அவர்களுடைய பாதம்பட்ட இடத்தின் புனிதத் தன்மையால் பாவங்கள் அகலுகின்றன. இதனால் நற்பயன் கிடைக்கின்றது.

**சக்தி வழிபாடு**

உலக நாயகியான சக்தி பல திருவுருவங்களாகக் காட்சி தருகிறாள். ஐந்தொழில் இயக்கத்தை ஏற்படுத்துவது நடராஜப்பெருமானின் திருநடனம் எம்பெருமான் அம்பிகையின் பக்கம் நோக்கி ஆடுகிறார்.



"மாதொரு பாகம் நோக்கி மன்னு சிற்றம்பலத்தே ஆதியும் முடிவும் இல்லா அற்புதத் தனிக் கூத்தாடும் நாதனார்" எனச் சேக்கிழார் சுவாமிகள் போற்றுகிறார்.

தாய்மைக்கே தனியுரிமை கொடுத்துப் பேணும் சமயம் இந்துமதம். "தாயினும் சிறந்ததொரு கோயிலும் இல்லை", "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்", "மாதா, பிதா, குரு, தெய்வம்" எனத் தாயை எல்லாவற்றுக்கும் மேலாக எண்ணிப் போற்றினார். சக்தியை ஐந்து வகையாகப் பிரித்து நோக்கலாம்.

| | | |
|---|---|---|
| போகசக்தி | - | பராசக்தி |
| வீரசக்தி | - | துர்க்கை |
| கோரசக்தி | - | காளி |
| அதிகாரசக்தி | - | நாராயணி |
| அருட்சக்தி | - | மனோன்மணி |

**சக்தி வழிபாட்டில் ஸ்ரீ சக்கரம்**

ஸ்ரீ சக்கரத்தில் 3 ரேகைகள், 3 வளையங்கள், 43 முக்கோணங்கள் உள்ளன. இதில்

| | | |
|---|---|---|
| சிவகோணம் | - | 3 |
| சக்திகோணம் | - | 5 |

அஷ்டதளம் (8), சோடசதளம் (16), மூன்று வளையங்கள், நான்கு சக்கரங்கள், பிந்து, நாதம், கலை, இவைகளுமாகச் சேர்ந்து அமைவதாகும். அம்பிகைக்கு உரிய விரதங்கள் இயல் நான்கில் குறிப்பிடப் பட்டுள்ளது. சக்தியானவள்

| | | |
|---|---|---|
| மதுரையில் | - | மீனாட்சியாகவும் |
| காஞ்சியில் | - | காமாட்சியாகவும் |
| காசியில் | - | விசாலாட்சியாகவும் |
| திருக்கடவூரில் | - | அபிராமியாகவும் |
| திருநெல்வேலியில் | - | காந்திமதியாகவும் விளங்குகிறாள். |

**தனம்தரும் கல்விதரும் ஒருநாளும் தளர்வறியா**
**மனம்தரும் தெய்வவடிவும் தரும்நெஞ்சில் வஞ்சம் இல்லா**
**இனம்தரும் நல்லன எல்லாம் தரும் அன்பர் என்பவர்க்கே**
**கனம்தரும் பூங்குழலாள் அபிராமி கடைக் கண்களே**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**முருக வழிபாடு**

"முருகு" என்ற சொல் இளமை, மணம், அழகு, தெய்வம் என்றெல்லாம் பொருள் படும். சங்ககால மக்கள் மலையும் மலை சார்ந்த பகுதிக்குரிய கடவுளாக முருகனை வழிபட்டனர். குமரக்கடவுளை வழிபடப்படும் சமயம் கௌமாரம் எனப்படும்.



**முருகனின் பெயர்களும் பொருள்களும்**

| | |
|---|---|
| முருகன் | - அழகுடையவன். |
| குமரன் | - இறைவனாய் எழுந்தருளியிருப்பவன். |
| குகன் | - அன்பர்களின் இதயமாகிய குகையில் எழுந்தருளியிருப்பவன். |
| காங்கேயன் | - கங்கையால் தாங்கப்பட்டவன். |
| சரவணபவன் | - சரவணப் பொய்கையில் உதித்தவன். |
| சேனாதிபதி | - சேனைகளின் தலைவன். |
| சுவாமிநாதன் | - தந்தைக்கு உபதேசித்தவன். |
| வேலன் | - வேலினை ஏந்தியவன். |
| கந்தன் | - ஒன்று சேர்க்கப்பட்டவன். |
| கார்த்திகேயன் | - கார்த்திகைப் பெண்களால் வளர்க்கப்பட்டவன் |
| சண்முகன் | - ஆறுமுகங்களையுடையவன். |
| தண்டாயுபாணி | - தண்டாயிதத்தைக் கரத்தில் ஏந்தியவன். |
| வடிவேலன் | - அழகுடைய வேலை ஏந்தியவன். |
| குருநாதன் | - தந்தைக்குக் குருவாக இருந்து உபதேசித்தவன். |
| சுப்பிரமணியன் | - மேலான பிரம்மத்தின் பொருளாக இருப்பவன் |

**முருகனின் ஆறுமுகங்களும் தொழில்களும்**

உலகிற்கு ஒளிதருவது.
வேள்வி காப்பது.
அடியார் குறைநீக்கி வரம் அருள்வது.
வேத ஆகமப் பொருளை விளக்குவது.
பகைவரை, தீயோரை அழித்து நன்மை செய்வது.
வள்ளிக்கு மகிழ்வைத் தருவது.

**ஆறுபடை வீடுகளும் மகத்துவங்களும்**

**திருப்பரங்குன்றம்**
தேவேந்திரன் மகளான தெய்வயானையை முருகன் மணந்த தலம். (மதுரைக்கு அருகில்)
**திருச்சீரலைவாய்**
சூரனை வதைத்தது (திருச்செந்தூர்)
**திருவாவினன்குடி**
மாங்கனி கிடைக்காது பாலகப் பருவத்தில் துறவியாய் இருந்த தலம் (பழனி)
**திருஏரகம்**
தந்தைக்குப் பிரணவப் பொருள் உணர்த்தியது (சுவாமிமலை)
**குன்றுதோறாடல்**
வள்ளியை மணந்தது (திருத்தணிகை)
**பழமுதிர்ச்சோலை**
தேவியர் இருவருடன் ஏகாந்தமாய் இருக்கும் தலம் (மதுரைக்கு அருகில்)

முருகனின் சக்திகளாக இச்சாசக்தி வள்ளியாகவும், கிரியாசக்தி தெய்வயானையாகவும், ஞானசக்தி வேலாகவும் கூறப்படுகின்றது. சேவலைக் கொடியாகவும், மயிலை வாகனமாகவும் கொண்ட முருகப்பெருமானின் அருள் பெற்றோர் பலர். திருப்புகழில் அருணகிரிநாதர் முருகனின் சிறப்பைப் பாடி மகிழ்கின்றார். கச்சியப்ப சிவாச்சாரியார் தனது கந்தபுராணத்தில் முருகனின் தத்துவங்களை மிக அழகாக எடுத்துக் காட்டுகிறார்.

**சூரசம்ஹாரத்தின் தத்துவம்**

ஆணவமலம் நிறைந்த உயிரே சூரன். ஆணவம் முதிர்ந்தபோது உயிர் இறைவனை ஒரு போதும் காணாது. ஆணவத்தை ஒழித்தால் தான் அது இறைவனோடு சேரமுடியும். ஆணவத்தைப் போக்க வல்லவரான இறைவன் உயிர்களின் மீது கொண்ட கருணையால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர்களின் ஆணவமாகிய சூரனின் ஸ்தூல உடம்பைப்போக்கி (ஆணவ மலம் நீங்கிய அச்சூரனின்) ஆத்மாவைத் தன்னுடன் சேர்த்துக் கொள்கிறார் என்பதே சூரசம்ஹார தத்துவ மாகும்.

**காவடியின் தத்துவம்**

முருக வழிபாட்டில் தங்கள் வாழ்வில் ஏற்பட்ட இன்ப துன்பங்கள் அனைத்தையும் காவடியாகக் காட்டி ஆண்டவனின் அடிக ளில் வைத்து வழிபடக் காவடி எடுப்பார்கள். சூரனின் குருவான இடும்பன் அகத்தியரின் ஆணைப்படி திருக்கயிலாயத்தில் இருந்து சிவமலை, சக்தி மலை எனும் இருமலைகளைத் தன் இரு தோள்களிலும் சுமந்து வந்ததே இக்காவடியின் ஆரம்ப வழிபாடாகும். இன்று பலர் தங்கள் குறைகளையும் நோய்களையும் நீக்கும் பொருட்டு பல்வேறுபட்ட காவடி களை எடுத்து முருகனை வழிபட்டு வருகின்றார்கள்.

"அருவமும் உருவமாகி அநாதியாய்ப்
பலவாய் ஒன்றாய்ப்
பிரமமாய் நின்றசோதிப் பிழம்பதோர்
மேனியாகிக்
கருணைகூர் முகங்களாறுங் கரங்கள்
பன்னிரண்டுங் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங்கு உதித்தனன்
உலகம்உய்ய"

கந்தபுராணம்

**சண்டேசுவரர் வழிபாடு**

சிவதரிசனப் பலன் சண்டேஸ்ரவரரைத் தரிசித்தால் தான் பூர்த்தியாகும். எப்போதும் தியானத்தில் இருக்கும் அவரை வழிபடும் போது மூன்று முறை கையால் மெதுவாகத் தட்டி வழிபட வேண்டும். சண்டேசுவரரை முழுவலமாக சுற்றக்கூடாது. மூன்று முறை கைதட்டுவது ஆதியாத்மிகம். ஆதிபௌதிகம். ஆதிதை விகம் எனும் முக்குற்றங்களால் வரும் தீங்கு விலகும். அதாவது தன்னால் வரும் துன்பம், சூழலால் வரும் துன்பம், இயற்கை யால் வரும் துன்பம் எனும் முத்துன்பங்கள் விலகும் பொருட்டு கைதட்டப்படும். சண் டேஸ்வரர் சந்நிதியில் வேட்டி நூலையோ, சேலை நூலையோ எடுத்துப் போடக்கூடாது.

**மூர்த்திகளும் சண்டேசுவரர் பெயர்களும்**

விநாயகரின்

| | | |
|---|---|---|
| சண்டேசுவரர் பெயர் | - | கும்பசண்டேசுவரர் |
| சிவன் | - | தொணிச்சண்டேசுவரர் |
| முருகன் | - | சுமித்ர சண்டேசுவரர் |
| அம்பாள் | - | யமுனா சண்டேசுவரர் |
| சூரியன் | - | தேஜஸ் சண்டேசுவரர் |

**திருக்கோயிலில் செய்யத்தகாதவைகள்**

- ஆடையால் உடம்பை மூடிக்கொண்டு இறைவனை வணங்குதல். இதனால் மூன்று பிறப்பில் ஊமையாகவும், பின் ஏழு பிறப்புகளில் தரித்திரனாகவும் வாழ்வான் என நூல்கள் கூறுகின்றன.
- ஆசாரமில்லாது நடமாடுதல், விபூதி மற்றும் பிரசாதங்களைக் கீழே சிந்துதல்.
- ஒரேமுறை பிரகாரத்தில் வலம் வருதல்.
- எச்சில் உமிழ்தல். மலசலம் கழித்தல்.
- நித்திரை செய்தல், கால்களை நீட்டி கொண்டிருத்தல்.
- மயிர் கோதி முடிதல், சூதாடுதல்.
- பாதரட்சை இட்டுக் கொள்ளுதல்.
- வீண்வார்த்தை பேசுதல். பொய் பேசுதல் இரைந்து சிரித்தல்.
- பிறரைத் துன்புறுத்தல், விளையாடுதல்.
- சுவாமிக்கும் பலிபீடத்திற்குமிடையே வணங்குதல்.
- அபிஷேக காலத்திலும், நிவேதன காலத்தி லும் வணங்குதல், வலம்வருதல்.
- திருவிளக்கு அணையக் கண்டும் தூண்டா திருத்தல். காம எண்ணங் கொள்ளல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கம்பளி ஆடை அணிதல்.
- இறைவனுக்கு நிவேதியாததை உண்ணுதல், தாம்பூலம் தரித்தல், புகைத்தல்.
- விக்கிரகத்தைத் தொடுதல்.
- தூபி, துவஜஸ்தம்பம் (கொடிமரம்) பலிபீடம், இடபம், விக்கிரகம் முதலியவற்றின் நிழலை மிதித்தல்.
- உற்சவம் கொண்டருளும்போது அவ்விடத்தை விட்டு உள்ளே போய் வணங்குதல்.
- வழிபடுவோருக்கு இடையூறு கொடுக்கும் வகையில் நடந்து கொள்ளுதல்.

மெய்தான் அரும்பி விதிர் விதித்து
உன் விரை யார் கழள் கென்
கைதான் தலை வைத்துக் கண்ணீர்
ததும்பி வெதும்பி யுள்ளோம்
பொய் தான் தவிர்ந் துன்னைப் போற்றி
சய சய போற்றி யென்னுங்
கைதான் நெகிழ விடே னுடைய
யாயென்னைக் கண்டு கொள்ளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவுசார் சமூக அமைப்பில் சமயப்பண்பாடு, சைவமதம் சார்பான சிந்தனை

**திரு. அமரசிங்கம் கேதீஸ்வரன்**
B.A; (Hons) M. Phil (Econ)
*உதவி திட்டமிடல் பணிப்பாளர்,*
*மாவட்டச் செயலகம், கிளிநொச்சி.*

**"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாக தமிழ் செய்யுமாறே"**

சமயநெறி முறைகளினை அடியொற்றியெழும் சமய பண்பாடு என்பது சமூகத்தை நெறிப்படுத்தும் ஒரு சமூகப் பண்பாடாக வலுப்பெறும்போது அதனால் சமூக அசைவியக்கத்தில் ஏற்படுத்தப்படும் மாற்றங்களும் அதிர்வுகளும் என்றுமே இல்லாத வலுவுடைய மாற்றங்களாக அமைந்து விடுகின்றன. சமூக மாற்றங்கள் நிர்ணயம் செய்யும் மாற்ற முகவர்களாக அல்லது கட்டுப்பாட்டு முகவர்களாக சமூகவியலாளர்களால் முன்வைக்கப்படும் சகபாடிகள், ஆசிரியர்கள். சமயம், அரசியல், கல்வி போன்ற முகவர்களில் சமய நெறிமுறைகள் வலுவுடையதாக இருக்கிறது என்பது சமூகவியலாளர்களின் நிரூபிப்பாகும். பண்பாடு என்பது பண்பும் அதனைப் பண்படுத்துவதுமான செயற்பாட்டையும் கொண்ட ஒரு சொல்லாகும். உழவுத்தொழில் எவ்வாறு நிலத்தைப் பண்படுத்துகிறதோ அவ்வாறே மனத்தையும் மக்களையும் பண்படுத்தும் ஒரு இணைவுச் செயற்பாட்டையே பண்டைய தமிழ் இலக்கியங்கள் பயன்படுத்தியுள்ளன. கலித்தொகையிலே "பண்பெனப்படுவது பாடறிந் தொழுகல்" எனவும்; வள்ளுவத்தில் "பண்புடையார் பட்டுண்டு உலகு" எனவும் சுட்டுவது. பண்பாடு என்பது தானாக உருவாகும் ஒரு செயற்பாடாகவன்றி ஒழுங்குபடுத்தலுக்கூடாகவே உருவாகும் தன்மையை வெளிப்படுத்துகிறது. இவ்வகையில் தமிழ் காறும் நல்லுலகில் தனக்கென தனி அடையாளம் இட்டுள்ள இலங்கைத் தமிழர்களின் வாழ்வியல் செழிமைப்படுத்தலில் சைவசமயத்தின் பங்கு காத்திரமானதாகும். சைவமும் தமிழும் ஒருங்கிசைந்து செயற்படும் கந்தபுராண கலாசாரம் என்பதே வடபுலத்தின் கலாசார அடையாளமாக நிறுவப்பட்டுள்ளது. இந்துசமயத்தின் ஆறு உப பிரிவுகளான சைவம், வைணவம், சாக்தம், கௌமாரம், காணாபத்தியம், சௌரம் ஆகிய இந்து சமய கொத்தணியிலே சைவசமயமே தமிழர்களின் வழிபாட்டுச் சமயமாக இருப்பதும் அதுவே. தமிழர் பண்பாட்டுப் பேணலுக்கான பல்வேறு நெறிமுறைகள் குறித்ததுமாகக் காணப்படுகிறது சைவமும் தமிழும் வலுவாக வளர உழைத்த அறிஞர்களில் பலர் வடபுல இலங்கையின் மைந்தர்கள் தான் என்பது வரலாறு நிரூபித்துள்ள உண்மையாகும். சிவனை முழுமுதல் கடவுளாகக் கொண்ட வழிபாட்டு மரபு காரணமாகத் தமிழும் தன் தொன்மைத் தன்மையை நிரூபித்துள்ளது. அவ்வாறான தொன்மைமிக்க பண்பாடானது தொடர்ந்து நிலைத்திருக்க வேண்டுமாயின் அது காலமாறுதல்களுக்கேற்ப தன்னையும் மாற்றிக்கொள்ள வேண்டிய தார்மிக நெறியைப் புறந்தள்ள முடியாததாகும். வல்லன வாழும் அல்லன இறக்கும் என்ற தக்கன பிழைத்தல் விஞ்ஞானக் கோட்பாட்டுக்கமைய காலமாற்றங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்வாங்க முடியாதுவிடின் அம் மதம் சமூக ஏற்புணர்வைப் படிப்படியாக இழந்து விடுவதும் தவிர்க்க முடியாததாகும். இலங்கையில் சைவசமய வளர்ச்சியிலே நாயன்மார்கள், ஆழ்வார்களால் இயற்றப்பட்டுள்ள பல்வேறு ஆக்கங்களும் இசையுடன் கலந்த இறையுணர்வையும் பொருளுடன் கலந்த பக்தி மார்க்கத்தையும் வழிப்படுத்திவருவதற்குப் பிரதான காரணமாக அமைவது அவைகள் யாவுமே தாய்மொழி மூலம் இயற்றப்பட்டு இலகுவான புரிதலுக்கு உட்படுவதாகும். மதக்கலப்பு ஏற்படும் வாய்ப்பான சூழலில் நவீன பிரச்சாரமார்க்கங்களுடன் உள்நுழையும் அன்னிய மதங்கள். தாய் மொழிவழியிலான சிந்தனை சலவையையே வழங்குகிறது. உளவியல் ரீதியில் அழுத்தங்கள் ஏற்படும் ஒவ்வொரு மனதுமே தனது இளைப்பாறலுக்கான பரிவை நோக்கியே நடந்து செல்கிறது. இப்பரிவும் அனுசரணையும் நவீன போதனைகளின் சிந்தனையுடனும் நன்கு திட்டமிடப்பட்ட பலவீனங்களைக் கையாளுவதனூடாகவும் மாற்றுமதங்களின் பரம்பல் தொடர்ந்து அதிகரித்தே வருகின்றன. சமூக ரீதியில் பலவீனப்படுத்தப்பட்டுள்ள இலகுவில் பாதிப்புறும் குழுக்களான சாதியில் புறக்கணிக்கப்பட்டோர், பொருளாதார ரீதியில் ஓரப்படுத்தப்பட்டோர்,- வறுமை மற்றும் வருமானக் குறைவுடையோர் மத்தியில் மாற்றுமதங்கள் தம் இலக்கு பிரிவினராகத் தேர்வுசெய்து நகருவதால் மதமாற்றங்களில் அவை வெற்றியடைந்து வருகின்றன. உலகில் பல்வேறு பெயர்களில் போசிக்கப்பட்டு வரும் அனைத்து மதக் குழுக்களும் வளர்முக நாடுகளிலுள்ள பாரம்பரிய மதங்களின் பலத்தை இல்லாது செய்வதற்காகச் செயற்படும் சர்வதேச முன் நிகழ்ச்சித் திட்டத்தின் அடிப்படையானவை என்பதனை எமது பலவீனங்கள் காரணமாக எதிர்க்க முடியாதுள்ளோம். இவ்வகையில் சைவசமயப் பண்பாட்டின் நிலைத் திருப்புக்கும் தொன்மைசார் இன அடையாளத்தைப் பேணுவதற்குமாக சைவமத வழிபாட்டு மரபுகளின் மீது புதிய சிந்தனைகள் புகுத்தப்பட வேண்டியது மறுக்கமுடியாததாகும். இறைமார்க்கத்துக்கூடான சமூகக் கட்டுப்பாட்டு நிர்வகிப்பில் இந்த மாற்றங்கள் சிந்திக்கப்படாதுவிடின் தூர நோக்கில் சைவமும் தமிழும் சிதைந்து போதல் தவிர்க்க முடியாததேயாகும். 21ஆம் நூற்றாண்டின் அறிவியல் பொருளாதாரத்தில் (Knowledge Economy) அறிவின் முதன்மை காரணமாகவே அனைத்தும் நிகழ்ந்து செல்வதால் அறிவுசார் வழிபாட்டுமுறை தோற்றுவிக்கப்படல் வேண்டும் என்ற அவசியமே என் கட்டுரையின் நோக்கமுமாகும். அறிவுசார் வழிபாட்டு முறையின் அறிமுகத்தை ஆலயங்கள் தங்களின் பிரதான நிகழ்ச்சிநிரலாக மாற்றிக் கொள்வதன் மூலம் மத மாற்றம் மற்றும் மதம் பின்பற்றாமை என்பதனை விலக்கிக் கொள்ள முடியும். அறிவுசார் வழிபாட்டு முறை (Knowledge based Praying System) உலகில் உள்ள முதன்மை சமயங்களான இஸ்லாம், கிறிஸ்தவம், பௌத்தம் போன்றன முறையாக கடைப்பிடிப்பதனைக் கவனத்திற்கொள்ளல் வேண்டும். இவ்வகையில் அறிவுசார் வழிபாட்டு முறையில் பின்வரும் பரப்புகளில் மீளசிந்தனைத் தேவை எழுவது தவிர்க்க முடியாததாகும்.

1. பயம் மற்றும் அச்சமற்ற தோழமைசார் வழிபாட்டு முறைமைகளின் அபிவிருத்தி
2. மத வழிகாட்டிகள் அனைவருமே மதக் கல்வித் திட்டத்தின் கீழ் இணைத்து பயிற்சியளித்தலும் தராதர நிர்ணயம் செய்தலும்.
3. சைவசமயத்தைப் பேணும் இலங்கை மட்டத்திலான தேசிய உயர் சபை உருவாக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. ஆலய சபைகளின் நிர்வாகப் பொறி முறைகளை தேசிய கட்டுப்பாட்டுப் பொறி முறைக்கு உட்படுத்துதலும் தெளிவான நிதிமுகாமைப் பொறி முறைகளை அறிமுகம் செய்தலும்.
5. மனித சமுதாய முன்னேற்றத்துக்கான மீள்முதலீட்டுத் திட்டமும் சமூக மயப் படுத்திய கருத்திட்டங்களை ஆலயங்கள் பொறுப்பேற்றலும்.

மதவழிபாடு தொடர்பில் நம்மிடையே காணப்படும் வழிபாட்டு முறைகளில் இருநிலைகள் காணப்படுவது தொன்று தொட்டு இருந்துவரும் நிலையாகும். அவை யாவன.

1. அச்சம் மற்றும் பய உணர்வு காரணமாக எழும் சுய அடக்க நிலை.
2. தோழமை மற்றும் புரிந்துணர்வு காரண மாக எழும் சுயகட்டுப்பாட்டு நிலை.

இவ்விரு நிலைகளில் முதலாவதாக மனித வரலாற்றின் தொடக்கம் முதல் பகுத்தறிவு வாதக் கருத்துக்கள் உச்சம்பெறத் தொடங்கிய காலம் வரை மதவழிபாடு என்பது அச்சம் மற்றும் பயஉணர்வு காரணமாக எழும் சுய அடக்க வழிபாடாகவே இருந்து வந்துள்ளது. இயற்கை பற்றிய போதிய புரிதலின்மை நிலவிய தொன்மைக் காலத்தில் அனைத்து இயற்கைக் கோலங்களுமே வழிபாடுக்குரி யனவாகியிருந்தன. அதேபோல விஞ்ஞான பூர்வமாகச் சிந்தித்தல், துணிதல், நிறுவுதல் என்றவகையில் இறையன்பைத் தனதாக்கும் பொறிமுறையே தோழமை மற்றும் புரிந்து ணர்வு காரணமான சுயகட்டுப்பாட்டு நிலை யாகும். கடவுளைப் பயம்காட்டுவதன் மூலமே பல மூடநம்பிக்கைகள் எமது சமயத்துக்குள் வருகின்றன. உயிர்பலியிடும் மரபும், பேய், செய்வினை, சூனியம் என சமூகம் ஏமாற்றப்படுவதும் இம்மரபு காரணமாகவே என்பதால் தோழமைசார் வழிபாட்டு மரபே இறைவனின் தூய்மையை வெளிப்படுத்தும் செயற்பாடாக அமைய முடியும். சைவமசயத்தின் பிரதான போதனை யாளர்களாக விளங்கும் குருமார்கள் நவீன அறிவுசார் சமூகத்தை வழிகாட்டும் தலை மைப் பொறுப்புக்குரியவர்களாகத் தம்மை நிலைப்படுத்த அவர்கள் தமக்கென, பல்கலை கழகங்களை அமைத்துக்கொண்டு பட்டங் களைப் பெற்றுக் கொள்வதும் அவ்வாறான அடிப்படைத்தேவை பூர்த்தி செய்யாத விடத்து அவர்கள் இப்பணியுள் புகமுடியாத வாறும் கட்டுப்பாடுகளைக் கொண்டு வருவத னூடாக ஏனைய மதங்களின் தகைமையாளர்கள் தரத்துக்குத் தம்மை உயர்த்திக் கொள்ள முடியும். பிறப்புக் காரணமாக அவர்கள் முதன்மைபெறும் நிலை எமது சமயம் குறித்து நீடிக்குமாயின் புறமதக் கலப்புக்களைத் தடுத்துவிட முடியாது போய்விடலாம். அத்துடன் வழிகாட்டுநர்களின் வியாபார சிந்தனையற்ற எண்ண வெளிப்பாடுகளையும் கூட நிலைநிறுத்திக் கொள்ளமுடியும். வியாபார ரீதியான வழிபாட்டு முறை நீடித்து நிலைத்திருக்கும் ஒரு பொறிமுறையாகப் பகுத்தறிவுச் சமூகத்திடம் எடுபடமுடியாது என்பதால் கற்றறிந்த வழிகாட்டிகளாக நாம் மாறிக்கொள்ள வேண்டியுள்ளது. மத பீடங் கள் சில இலங்கையில் செயற்பட ஆரம்பித் துள்ள போதும் அவை ஒரு முழுமையான மதக் கட்டளைப் பீடமாகத் தம்மைத் தரமுயர்த்திக் கொள்வதும் அவசியமாகும். காணும் இடமெல்லாம் ஆலயங்களை உருவாக்கிக் கொள்ளும் அதிகூடிய மத சுதந்திரம் மீது கட்டுப்பாட்டைப் பிரேரிக்கும் ஒருவனாக அன்றி ஆலயங்களை உருவாக்குதல், பேணு தல், பராமரித்தல், கைவிடலை அப்புறப் படுத்தல் போன்ற கருமங்களைத் தீர்மானிக் கும் தேசியமட்டப் பொறிமுறை ஒன்றின் தேவை தற்போதய நிலையில் நிறையவே தேவையாகவுள்ளது. அதுபோல சட்டத்தின் முன் பதிவுபெறும் பொது ஆலயங்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனிநபர் சொத்தாகவுள்ள தனியார் ஆலயங்கள் என்ற இருபெரும் கூறுகளின்மீதும் செல்வாக்குச் செலுத்தக்கூடிய நிர்வாக ஏற்பாடுகள் அமையப் பெறுமாயின் அதுவும் ஒரு பொருத்தமான இறைவழிபாட்டுச் சூழலை உருவாக்கி வழங்கும்.

நிதியியல் நியமத்துக்கு உட்படாத செல்வம் கையாளப்படும் இடமாகவே ஆலயங்கள் காணப்படுவதால் முறைகேடுகளும் வீண்விரயங்களும் இடம்பெறும் ஒரு மையமாக ஆலயங்களை மாற்றவிடாது வெளிப்படைத்தன்மை, நாணயத்தன்மை அடிப்படையில் வகைகூறும் பொறுப்புடைய சபைகளாக ஆலய நிர்வாக சபைகளைச் செயற்படக்கூடிய கட்டுப்பாடுடனான பொறிமுறையின் தேவை அவசியமானதாகும். அறிவுசார் சமூகத்தின் வளர்ச்சியில் உலகம் ஒரு கிராமமாக்கப்பட்டுள்ள நிலையில் சர்வதேச மட்டத்திலான தராதரங்களை உள்வாங்கி உளவியலின் புதிய கண்டுபிடிப்புகள் உளம் சார் சிந்தனைகளை நன்கு அனுசரித்துச் செல்லும் நவீன மயப்படுத்திய பயணப் பாதையில் பயணிக்க வேண்டிய ஒரு சூழலில் எமது சமயம் சார்பான செயற்பாடுகள் அமைந்துள்ளன. இது நவீன அறிவியல் சமூகத்தின் ஏற்புக்கும் நின்று நிலைக்க வேண்டுமென்பதே எமது அவாவாகும்.

பாரொடு விண்ணாய்ப் பரந்த எம்பரனே
பற்று நான் மற்றிலேன் கண்டாய்
சீரோடு பொலிவாய் சிவபுரத்தரசே
திருப்பெருந் துறை யுறை சிவனே
யாரொடு நோகேன் ஆர்க்கெடுத் துரைக்கேன்
ஆண்ட நீ அருளிலை யானால்
வார் கடல் உலகில் வாழ்விலேன் கண்டாய்
வருக வென்றருள் புரிவாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணவு உயிருக்கு ஆதாரம்

**சிவ. சண்முகவடிவேல்**
ஏழாலை

இவ்வுலக வாழ்விற்குப் பொருள் இன்றிய மையாதது. வான்புகழ் கொண்ட வள்ளுவரும் அருள் இல்லாதவர்க்கு அவ்வுலகம் இல்லாதது போலப் பொருளிலார்க்கு இவ்வுலகம்இல்லை என்பார்.

**அருளில்லார்க் கவ்வுலகம் இல்லை**
**பொருளில் லார்க்**
**கிவ்வுலகம் இல்லாகி யாங்கு.** (247)

அதுபோல உணவு இல்லாதவர்க்கு உயிர் வாழ்க்கை இல்லை எனலாம். உடம்பில் தரித்திருக்கும் உயிருக்கு உணவு வேண்டப் படும். ஏற்பது இகழ்ச்சி என்று பாடும் ஔவையாரே ஐயம் இட்டு உண் என்பார். ஏற்கும் இகழ்ச்சியையும் கடந்து மேலோங்கி நிற்பது பசியின் கொடூரம்.

"மிடி என்று ஒரு பாவி வெளிப்படின் வடிவும் தனமும் மனமும் குணமும் குடியும் குலமம் குடிபோலாகியவா" என்று அருள் வேல் அரசனிடம் முறையிடுவார் அருணகிரி நாதர். கந்தரநுபூதியில் வறுமையைப் "பாவி" என்று வர்ணிக்கின்றமை கவனிக்கத்தக்கது.

மனித வாழ்க்கை உணவில் கிடந்து உழல்வது ஓர் உண்மை. ஒரு குழந்தை பிறந்து விட்டால் முப்பத்தோராம் நாளில் உள்ளூர் உறவினர் கூடி உண்டாட்டில் மகிழ்வர். அதே போலப் பெண்பிள்ளையானால் பூப்புனித நீராட்டு விழாக் கொண்டாட்டம், திருமண நிகழ்ச்சி பிறந்தநாள் விழா, மறைந்தநாள் சம்பந்தமான அபரக்கிரியை நிகழ்ச்சிகள் முதலாய நிகழ்ச்சிகளில் முக்கிய இடம்பெறு வது உணவு உண்ணுதல். மேலும் புதுமனைப் புகுவிழா, பொதுக் கொண்டாட்ட விழாக்கள் எங்கும் உணவு உண்ணல் செழிப்பு.

கோவில் விழாக்கள் போன்ற வைபவங்க ளிலும் உணவு வழங்கல் முக்கிய இடம் பெறுவதைக் கண்ணாரக் காண்கின்றோம். கண்ணப்பநாயனாருடைய "வில்பிடிப்பு விழாவில்" வேடுவர்களுடைய உணவுக் கொண்டாட்டத்தைப் பெரியபுராண வாயி லாக நன்கு அறியலாம்.

**"ஐவன அடிசில் வெவ்வே றமைந்தன.....**
**மொய்வரைத் தினைமென் சோறு மூங்கில்வன்**
**பதங்கள் மற்றும்**
**கைவினை எயின ராக்கிக் கலந்தஊண் கிழங்கு**
**துன்றச்**
**செய்வரை உயர்ப்ப எங்கும் கலந்தனர் சினவில்**
**வேடர்."**

**செந்திணை இடியும் தேனும் அருந்துவர்**
**தேனில் தோய்ந்து**
**வெந்த ஊண் அயில்வார் வேரி விளங்கனிக்**
**கவளம் கொற்வார்**
**நந்திய ஈயல் உண்டி நசையாடு மிசைவர்**
**வெவ்வே**
**றந்தமில் உணவின் மேலோர் ஆயினர்**
**அளவிலார்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேடுவகுலத்திலேயே உணவிற்கு இத்துணை முன்னுரிமை என்றால் நாகரிக குலத்தின் உணவுச் சிறப்பை உரைக்கவும் வேண்டுமோ?

மண்ணுலகில் வாழ்வார்க்கு உணவு உதவுவார்கள் உயிர் உதவியவராவார்கள் என்று புறநானூறு போற்றும். பாரதப் போரில் துரியோதனனாகியோர் உயிர் துரப்ப உதியற் சேரலாதன் என்ற அரசன் சோறு வழங்கியமையைப் புறநானூறு வியந்து போற்றிநிற்கும்.

"ஈரைம் பதின்மரும் பொருதுகளத்து ஒழியப்
பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்"

என்று இன்றும் சங்கத் தமிழ் உதியஞ் சேரலாதனை வாழ்த்துகின்றது. பெருஞ்சோறு வழங்கியமையால் "பெருஞ்சோற்று உதியஞ் சேரலாதன்" என்னும் புகழ் படைத்தான் புரவலன்.

பாடுவார் பசிதீர்க்கும் பரமனார் பல காலங்களில் தம்மடியார் பசிகளையப் பொதிச் சோறும் தண்ணீர்ப் பந்தரும் அமைத்த கதையைப் பெரியபுராணத்தில் பரக்கக் காணலாம். பரமன் அடியார் பசி போக்கிப் பரகதி அடைந்த சான்றுகளும் சைவநூல்களில் நிறைய உண்டு.

திருவீழிமிழலை போன்ற திருத்தலங்களில் பஞ்ச காலத்தில் அடியார் பசிபோக்கச் சிவபெருமானே படிக்காசு அருளி நாயன்மாரை ஊக்குவித்தமையைப் பன்னிரண்டாந் திருமுறை பாடிப்பாடிப் போற்றும். பசி பெரும்பிணி அப்பிணி போக்க நாமும் முயல வேண்டும். முயல இயலாமையானால் முயல்வோனை ஊக்குவிக்கவாவது முயல்வது சால நன்று.

மன்னுக தில்லை வளர் கநம் பக்தர்கள்
வஞ்சகர் போயகலப்
பொன்னின்சேய் மண்டபத்துள்ளே புகுந்து நின்று
புவனியெல்லாம் விளங்க
அன்ன நடை மடவாள் உமைக் கோன்
அடியோமுக் கருள் சுரந்து
பின்னைப் பிறவி அறுத் தெறிந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவசித்தாந்த வளர்ச்சி
## (கி.பி. 10ஆம் நூற்றாண்டு வரை)

**சைவப்புலவர் கு. றஜீபன் M.A.,**
*நிறைவேற்றுப்பணிப்பாளர்,*
*சைவசித்தாந்த ஆய்வு நிறுவனம், யாழ்ப்பாணம்.*

**முகவுரை**

உலகில் தோன்றிய தொன்மையான மதங்களுள் சமயம் என்ற சிறப்புப் பெயரோடு விளங்குவது சைவசமயம் ஒன்றேயாகும். மிகத் தொன்மையான வரலாற்றினையும் ஆழ்ந்த தத்துவஞானக் கருத்துக்களையும், இனிமையான சமய இலக்கியங்களையும் ஒழுக்கமான வாழ்க்கை முறைகளையும் கொண்ட ஒரு சமயமாக சைவசமயம் விளங்குகின்றது. உலகில் காணப்படும் மொழிகளில் சமஸ்கிருதத்தை தேவமொழியென்றும், சீன மொழியை அலங்கார மொழி என்றும் கூறப்படும் தருணத்தில் தமிழ்மொழியை பக்தி மொழி என்று கூறி பெருமைப்பட்டுக் கொள்ளும் அளவிற்கு சைவம் மொழியைக் கூட பக்தியாகச் செதுக்கி இருக்கின்றது. இப்படிப்பட்ட அகன்ற, விரிந்து, செறிந்த சைவ சமயத்தில் காணப்படுகின்ற தத்துவக் கருத்துக்களில் சைவசமயத்துக்கே சிறப்பாக உரிமையாகக் கொள்ளப்படுகின்ற தத்துவமான சைவசித்தாந்தம் சமய இலக்கியங்களில் எவ்வாறு காணப்படுகின்றது என்பதனை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

அந்தவகையில் சமய இலக்கியங்களின் வரையறைக்குட்பட்ட மிகத்தொன்மையான மூலஇலக்கியமான வேதங்களில் இருந்து கி.பி.10ஆம் நூற்றாண்டு வரையான நாயன்மார் காலம்வரை சிவஞானப்பேற்றுச் சிந்தனை பல்வேறு வகைகளில் வளர்ச்சி கண்டுவந்துள்ளது. ஆயினும் வேதங்கள் முதல் திருவாசகம் ஈறாகத் தோன்றிய சமய இலக்கியங்களில் சைவசித்தாந்தக் கருத்துகள் காணப்பட்டபோதும் அவை சைவசித்தாந்தம் எனப் பகுத்துரைபடவில்லை. கி.பி.13ஆம் நூற்றாண்டளவில்தான் சைவசித்தாந்தம் தன்னை முழுமைப்படுத்திய ஒரு தனித்து இயங்கும் தத்துவமாக வெளி உலகிற்குள் பிரவேசித்தது. மிகப் பிந்திய காலத்தில் தோற்றம்பெற்ற தத்துவமாயினும் தன் தத்துவக் கருத்து நிலை வளர்ச்சி வேதங்களில் இருந்தே காணப்படுகின்றது என்பது ஆராய்ச்சி முடிபாகும்.

இந்நிலையில் கி.பி.10ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட சமய இலக்கியங்களில் சைவசித்தாந்த மெய்யியல் வளர்ச்சி நிலைகளை ஆராய்வதற்கு, ஆய்வு ஒழுங்கு முறையாக,

1. வேதத்தில் சைவசித்தாந்த கருத்துநிலை
2. உபநிடதங்களில் சைவசித்தாந்தம்
3. ஆகமங்களில் சைவசித்தாந்தப்பேறு
4. புராணங்களில் சைவசித்தாந்த வளர்ச்சி
5. திருமுருகாற்றுப்படையில் சைவசித்தாந்தம்
6. திருமுறைகளில் சைவசித்தாந்தம்
7. திருவாசகத்தில் சைவசித்தாந்தம் எனப் பின்வரும் தலைப்புக்களின் கீழ் ஆராயப் படவிருக்கின்றன. ஆய்வுமுறைக் கட்டமைப்புக்கு அமைவாக ஒழுங்குபடுத்தப் பட்ட ஒரு ஆய்வுமுறையாக இது மேற்கொள்ளப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வேதத்தில் சைவசித்தாந்த கருத்துநிலை**

இந்திய தத்துவ இயல் இரண்டுவழியில் ஆன்மிக அறிவியல் ஆராய்ச்சியினை வேதங்களின் ஊடே ஆராய்ந்திருக்கிறது.

1. மரபுவழி ஆராய்ச்சி,
2. நவீன ஐரோப்பிய வழி ஆராய்ச்சி.

இந்து தத்துவ இயலில் இரண்டும் இன்றுவரை பெரும் தாக்கத்தினை ஏற்படுத்தி வருகின்றது. வேதங்களில் ஆராயப்பட்டிருக்கின்ற பல்வேறு விடயங்களில், இங்கு ஆராய வேண்டியது சைவசித்தாந்த தத்துவஇயல் வேதங்களில் காணப்படுகின்றனவா? அவை எவ்வாறு காணப்படுகின்றன? அவற்றுக்கும் காலத்தால் பின் எழுந்த சைவசித்தாந்தத்திற்கும் என்ன தொடர்பு? சைவசித்தாந்தத்தின் மூலம் வேதத்தில் கருக்கொள்கிறதா? போன்ற வினாக்களே ஆராய்ச்சிகளாக உள்ளன.

கி.பி.13ஆம் நூற்றாண்டில் முழுமை அடைந்து வெளிவந்த சைவ தத்துவமாக சைவசித்தாந்தம் காணப்பட்டபோதும் வேதங்களில் ஆராயப்பட்ட கடவுள், உலகு, உயிர் என்ற முப்பொருள் தத்துவம் பற்றிய ஆராய்ச்சிதான் சைவசித்தாந்தத்திலும் பதி, பசு, பாசம் என்ற சைவசித்தாந்த கலைச் சொல்லாக்க வழிமுறையில் ஆராயப்பட்டிருக்கிறது. ஆகவே வேதங்களும், சைவ சித்தாந்தமும் முப்பொருள் கோட்பாட்டை ஆராய்ந்து ஏற்றிருக்கின்றன என்பதில் இரண்டும் ஒன்றுபடுகின்றன.

வேதங்களில் காணப்படுகின்ற தத்துவ நிலை ஆராய்ச்சிகளில் சைவசித்தாந்தக் கருத்துக்களின் உயிர்ப்பு எந்நிலையில் காணப்படுகிறது என்பதை ஆராய்வோம். முதலில், வேதத்தில் கூறப்பட்டுள்ள பலதெய்வக் கோட்பாட்டினை எடுத்துக்கொள்வோம். மேனாட்டார், இருக்குவேதம் சைவ சித்தாந்தம் கூறும் பதியாகிய சிவனை உருத்திரன் என்றே குறிப்பிடுகின்றனர். இந்திரன், வருணன் முதலான பலதெய்வக்கோட்பாட்டில் உருத்திரனை முக்கியத்துவம் அற்ற ஒரு தெய்வமாகவும் கீழான நிலையில் இருக்கும் ஒரு தெய்வமாகவும் காட்டியிருக்கிறது என்பர். இதனை உறுதிசெய்யும் வகையில் ஏ.ஏ. மாக்டனால்ட் என்பவர் எழுதிய "வேதகால தேவதைக் கட்டுக்கதைகள்" (Vedic Mythology) என்ற நூலில் உருத்திரன் பற்றிய எல்லா வேதக்குறிப்புகளும் தொகுத்துத் தரப்பெற்றுள்ளன. அதில் அவர் கூறுவனவற்றைத் தெரிந்துகொள்வதால் மிகப் பழைய தாகிய இருக்கு வேதந்தொடங்கி உருத்திரன் பற்றிய வளர்ச்சியை ஓரளவு அறிய முடியும். அக்கட்டுரையின் சில பகுதிகள் வருமாறு.

"உருத்திரன் - இருக்குவேதத்தில் மிகவும் தாழ்மையான ஓர் இடத்தையே பெற்றுள்ளான். முழுவதுமாக மூன்றே தோத்திரங்கள் (Hymns) மட்டுமே உள்ளன. மற்றொரு தோத்திரத்தில் ஒருபகுதி இருப்பதுடன் அவனுடைய பெயர் 75 இடங்களில் பேசப்படுகின்றது" என்றவாறு அமைகின்றது. இந்நிலையில் இருந்து நோக்கினால் பல தெய்வக் கொள்கை கொண்ட வேதங்களில் தெய்வங்களை சமநிலையில் வைத்து எண்ணுவதை விட்டு உருத்திரனுக்குக் கீழான நிலை கொடுக்கப்பட்டதற்கு ஆரிய திராவிட பேதம் காரணமாகவும் அமைந்திருக்கலாம் என எண்ணத் தோன்றுகிறது. இது சைவசித்தாந்தம் கூறுகின்ற ஒரு தெய்வக்கொள்கைக்கு மாறானதாக இருப்பதோடு சைவசித்தாந்தம் உயர்ந்த நிலையில் வைத்துப் பேசுகின்ற சிவனை வேதங்கள் இழிவுபடுத்தியிருக்கிறது என்றே எண்ணத்தோன்றுகிறது.

ஆனாலும் இருக்குவேதத்தில் உருத்திரனுக்குக் கொடுக்கப்பட்ட தாழ்வான நிலையும் அவனுக்கு வழங்கப்பட்ட தொழிலுமே பிற்காலத்தில் உருத்திரன்- சிவன் என்னும் நாமம் கொண்டு பெருவளர்ச்சியுற்ற தத்துவப் பொருள் ஒன்றே. காண்பதற்கு, இருக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதத்தில் உருத்திரன் என்று நாமம்கொண்டு அஞ்சத்தக்க ஒருவனாகவும் உருத்திரனே படைப்பின் விதையை உற்பத்திசெய்கிறான். அந்த விதை பூமியில் விழுமாறு அம்பெய்கி றவனும் உருத்திரனே. தானே காரணமாக நின்று உற்பத்தி செய்த அதனைத்தானே முன்னின்று அழிக்கவும் செய்கிறான். உருத்தி ரன் ஒன்றுக்கொன்று முரண்பட்ட இச் செயல்களைச் செய்தல் அவனுக்கு இயல்பாய் அமைந்துள்ளது. இந்த மண்ணில் மென் மேலும் புதிய உயிர்வர்க்கங்கள் தோன்று மாறு அவனே படைக்கப்போகிறான். இப்படைப்புத் தொழிலே அழித்தல் தொழி லுக்கு வித்தாய் அமைகிறது. இந்தத் தொழில் முறையின் வடிவத்தையே சைவசித்தாந்தம் பதிக்குரிய தொழிலாகப் படைத்தல், காத்தல், அழித்தல் என்பதை காட்டுகிறது. இது வேதத்தில் சைவசித்தாந்த பதிக்கோட் பாட்டை எடுத்துக்காட்டுவதாக அமைகிறது. பிரமசூத்திர நீலகண்ட பாடிய மொழி பெயர்ப்பில் காசிவாசி செந்திநாதையர் இதனைத் துல்லியமாகக்காட்டியிருக்கிறார்.

வேதகாலத்திற்கு முன்பிருந்த இறை பக்திக் கோட்பாட்டில் சிவன் முக்கியத்து வப்படுத்தப்பட்ட ஒரு தெய்வமாகக் காணப் பட்டதாகவும் அதன்பின் தோன்றிய ஆரிய, திராவிட காழ்ப்புணர்வு காரணமாகவே வேதத்தில் சிவன் முக்கியத்துவம் அற்ற தாழ்வான தெய்வமாகக் காணப்பட்டான் என்பதைப் பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தன் அவர்கள் தனது "பெரியபுராணம் ஓர் ஆய்வு" என்ற நூலில் "ரிக்கில் ருத்ரனுக்கு ஒதுக்கப் பெற்றுள்ள இடம் மிகமிகத் தாழ்வான ஒன்று ஆகும். கொடியவனும், அச்சத்தை விளைவிப் பவனும் ஆகிய ருத்ரனுடைய வடிவமைப் புக்கள் பல இடங்களில் ரிக்கில் பேசப்படு கின்றன." (பக்கம் 19) என்று ஆராய்ந்திருப்பது அவரின் ஆங்கிலக் கல்வியின் பாதிப்பையே காட்டுகிறது. வேதகாலத்தில் இறைபக்திக் கோட்பாடு பயத்தின் அடிப்படையிலேயே ஆரம்பமானது, இயற்கையின் சீற்றங்களைக் கண்டு அஞ்சிய மனிதன் அச்சீற்றங்களில் இருந்து தம்மைப் பாதுகாக்கவே இயற்கைத் தெய்வங்களான இந்திரன், வருணன், அக்கினி, வாயு முதலானவர்களை வழிபட்டான் என்ற கருத்தினைச் சரி என வைத்துக் கொண்டாலும் தவறில்லை. அப்பர்சுவாமிகள் "அஞ்சி ஆகிலும் அன்பு பட்டாகிலும், நெஞ்சம் வாழ்நினை" (திருக்குறுந்தொகை) என்று குறிப்பிடுகிறார். அங்கு குறிப்பிடப்படும் உருத்திரன் இவர்கள் எல்லோரையும் விட கொடுமையானவன் என்று சித்தரித்தத னாலும் அவனுக்குப் படைத்தல், காத்தல், அழித்தல் ஆகியன வழங்கப்பட்டிருந்ததாலும் மக்கள் உருத்திரனுக்கு அஞ்சி நாளடைவில் அவனையே வழிபடத்தொடங்கியபோது ஏனைய தெய்வங்கள் முக்கியத்துவம் அற்ற தெய்வங்களாக மாறிவிடுவதற்கு வேதங்களே துணைசெய்திருக்கின்றன. இதனால் உருத்திர னுடைய வளர்ச்சி உருத்திரன்-சிவனாகி, தனிப்பெரும் சிவனாகி சைவசித்தாந்தத்தில் சிவதத்துவமாக வளர்ச்சிகண்ட நிலையில் வேதத்தில் குறிப்பிடப்படும் உருத்திரனும் சைவசித்தாந்தம் குறிப்பிடும் சிவனும் முழுமுதற்பொருளாகக் காணப்படுகின்றனர். சித்தாந்த முப்பொருளில் முதற்பொருளாகிய பதியின் பரிபூரணம் வேதத்திலும் உணரப் பட்டிருக்கிறது.

மேலும் உருத்திரன் தன் வில்லை மரத்தில் மாட்டித் தொங்கவிட்டுவிட்டு மனிதர்களை அணுகும்போது அம்மனிதர்களுக்கு மகிழ்ச்சியையும் (சம்பு) இந்த உலகிலேயே அமைதியையும் (சங்கர) தருகிறான் என்று தைத்ரீய ஸம்ஹிதை கூறுகிறது. மேலும் அவனுடைய அருளால் மகிழ்ச்சியையும் துன்பத்தையும் அவன் தரும்பொழுது சிவன் என்று பெயர்பெறுகிறான். இதுவே சைவ சித்தாந்தத்தில் இறைவன் ஆன்மாக்கள் மீது கொண்ட கருணையினால் கீழிறங்கி வருதல் என்ற தடத்தநிலையினை குறிப்பதாக அமைந் திருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகவே வேதத்தில் இறைவனின் சொரூப நிலை, தடத்தநிலை என்ற சைவசித்தாந்த பதிக்கோட்பாடு பேசப்பட்டிருப்பது உறுதி செய்யப்படுகிறது.

வேதத்தில் கூறப்படுகின்ற சிவ தத்துவத்தினை பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தன் "பெரியபுராணம் ஓர் ஆய்வு" என்ற நூலில் "தமஸ் அழிவை முன்விட்டுக் கீழ்நோக்கிச் செல்லும் இழுப்பு சக்தியாகும். தமஸ் என்பது உருத்திரனுடைய இருண்ட இடமாகும். அதிலிருந்து சமஹார அக்கினி மேலோங்கி எழுகிறது. அது இந்த உலகில் உள்ள பரு உடலுடன் கூடிய இருப்பை அழித்து அகங்காரத்திலிருந்து விடுதலை அளிக்கிறது. உருத்திரனின் ஆயிரக்கணக்கான அம்புகள் தம் இலக்கை அடைந்தவுடன் சாந்தத்தின் காரணனான சம்புவாகவும் ஆனந்தம் தரக்கூடிய சங்கரனாகவும் விடுதலை நல்கும் சிவனாகவும் உருத்திரன் விளங்குகிறான். விடுதலை நல்கி மகிழ்ச்சி தரக்கூடியவன் ஆகலின் சிவன் எல்லா உயிர்களிடமும் அந்தர்யாமியாய் விடுதலை, சாந்தம் என்பவற்றை நல்கக்கூடிய வன்மை படைத்தவனாய் உறைகிறான். ஒரு புல்லின் இலையிலும், தூசின் சிறு துகளிலும், ஒலியிலும், எதிரொலியிலும், பொறிபுலன்களால் அறியப்படும் இந்த உலகில் உள்ள அனைத்துப் பொருள்களிலும் அவனே உறைகிறான்." என்று விளக்கிச் செல்கிறார்.

**"ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே.."**
**என்ற திருத்தாண்டகத்திலும்,**
**"எங்குமெவையும் எரியுறு நீர்போல் – கெம்**
**தங்கும் அவன்தானே தனி"**
**"பல்லாருயிருணரும் பான்மையென மேலொருவன்**
**இல்லாதான் எங்கள் இறை"**

என்ற திருவருட்பயன் பாடலிலும் சொல்லப்படும் சிவபரம்பொருளின் பூரணத்துவம் வேதத்திலும் உயிர்பெற்றிருப்பதனை நிலைநிறுத்தக் கூடியதாக உள்ளது. இதனை உணர்ந்துதான் ஒருமுறை காஞ்சிப் பெரியவர் சந்திரசேகரேந்திர சுவாமிகள்

"வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது
நாதன் நாமம் நமச்சிவாயவே"

என்று கூறி ஆசி வழங்கியிருக்கிறார்கள் என்று "இந்துமத வேதத்தின் மகிமை" என்ற நூலில் யாக்ஞவல்கியப்ரியா (பக்கம் 36) குறிப்பிட்டுச் செல்கிறார். ஆகவே நான்கு வேதங்களினதும் மெய்ப்பொருளாக சித்தாந்தம் உணர்த்தும் சிவனே காணப்படுகிறான்.

இவ்வாறு பதிக்கோட்பாட்டின் அடிப்படையில் சைவசித்தாந்தம் உணர்த்துகின்ற சிவனுக்குரிய முத்தொழிலும், இருக்குவேதத்தில் உருத்திரனுக்குரிய முத்தொழிலாக காட்டப்படுவதும், அழித்தலைச் செய்யும் உருத்திரன் இருக்குவேதத்தில் தலைமைக்கடவுளாகவும் விளக்கப்பட்டுள்ளான். அதுமட்டுமன்றி அருளல் என்பதும் அவனது தொழிலாக உரைப்பட்டதுடன் காலப்போக்கில் பிற்பட்ட வேதநூல்கள் முத்தொழிலாற்றும் அதிகாரங்கள் யாவும் உருத்திரனுக்கே படிப்படியாக வழங்கப்பட்டுள்ளதை சுவேதாஸ்வரத உபநிடதம் குறிக்கிறது.[3]

இருக்குவேதத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் முத்தொழில் நிலைப்பாட்டை பின்வந்த சைவசித்தாந்தம் ஐந்தொழிலாக ஆக்கி பஞ்சகிருத்தியம் செய்பவன் பதி என விளக்கிச்செல்கிறது. சைவசித்தாந்தம் காட்டுகின்ற கடவுட்கொள்கையில் முழுமுதற் பொருளை சொரூபநிலை, தடத்தநிலை என இருநிலையில் காட்டி, சிவன் தடத்தநிலையில் ஐந்தொழிலைச் செய்கிறான் எனவும் சொரூப நிலையில் அவன் வேதங்களையும் கடந்த "பரப்பிரம்மசிவம்" என நிற்கின்றான் எனவும் சுட்டிச்செல்கின்றது. இவ்வாறு பதி என்றழைக்கப்படும் சிவனுக்கும் வேதங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம்பெறும் உருத்திரனுக்கும் இடையில் உள்ள தொடர்பு நெருக்கமானதாகக் காணப் படுகிறது. இத் தொடர்பினால்தான் வேதங் களில் கூறபபட்ட உருத்திரன் யசுர் வேதகாலத்தில் முக்கியமான வளர்ச்சிக்கட் டத்தை அடைந்து உருத்திரசிவன் என அழைக்கப்பட்டான்.

யசுர்வேதமானது சிவ வழிபாட்டு நெறிக்கு மட்டுமின்றி தத்துவ கருத்துநிலை வளர்ச்சிக்கும் முன்னோடியாக அமைந்த ஒன்றாகும். தத்துவமரபிலே யசுர்வேதம் உருத்திரசிவனை பசுபதியாகவும், வைத்தியநா தனாகவும் வருணித்துள்ளமையால் பசுபதி யென்பது வளர்ப்புவிலங்குகளின் தலைவன் என்றும், வைத்தியநாதன் என்பது மருத்துவர் களின் தலைவன் என்றும் கூறப்பட்டமை வேதத்தில் சைவசித்தாந்தக் கருத்துச் செறிவை நினைவூட்டுகிறது. பசு என்பது தளையுற்ற ஆன்மாவை உணர்த்தும் சாஸ்திர கலைச் சொல் (காரண இடுகுறிப்பெயர்) ஆயிற்று.

இறைவன் மருத்துவ குணம் கொண்டவன் என்பதை பின்வந்த திருமுறைகளில்
"கூற்றாயினவாறு விலக்ககலீர்............"
எனவயிற்று நோய் தீர்க்க திருநாவுக்கரசரும்

"மந்திரமாவது நீறு ..................................
வெந்துயர்தீர்ப்பது நீறு.........................."

என சம்பந்தர் பாண்டியன் வெப்புநோய் தீரப்பாடிய "வெப்பொடு குளிரும் வாதம் மிகை யான பித்தும்.." எனவரும் கோளறு திருப்பதிகம் முதலியன இறைவன் சிறந்த மருத்துவன் என்பதனை உணர்த்தின. மேலும் இறைவனை வைத்தியநாதன் என்றும், சித்தியார் "மலம் அறுக்கும் மருந்து அற்றால் உடன்மாயும்" என்றும் இக்கருத்துக்குச் சாத்திர வடிவம் தந்துள்ளது.

வேதநூல்களில் சொரூப சிவத்தைக் குறிக்கும் சூக்கும பஞ்சாட்சர மந்திரம் நடு நாயகமாகப் போற்றப்பட்டுள்ளது. இத்த கைய வேதபாரம்பரியத்தை பின்பற்றியே திருமந்திரமும், சூக்குமபஞ்சாட்சரம், தூல பஞ்சாட்சரம் என்பவற்றை சிறந்த மந்திரமாக போற்றியிருக்க வேண்டும். சைவசித்தாந்த பாரம் பரியத்திலும் அதற்கு முன்னோடியாக எழுந்த சமய இலக்கியங்களில் பஞ்சாட்சர மந்திரம் போற்றப்பட்டிருப்பது சைவசித்தாந் தம் கொண்டுள்ள பதி பற்றிய ஆராய்ச்சி வேதத்தில் தொடங்கப்பெறுகிறது என்பது உண்மையாகும்.

**வேதகாலத்தில் ஆன்மா**

சமய தத்துவ ஆராய்ச்சியில் சிறப்பிடம் பெறுகின்ற முப்பொருள்களில் இரண்டாவது ஆன்மா. நமது கண்ணுக்குப் புலப்படாமல் ஒவ்வொரு உடலிலும் இருந்து தொழிற் படுகின்ற உயிர் அணுவுக்குப் பெயர்தான் ஆன்மா. அத்தகைய ஆன்மாக்கள் அழிவில்லா தவை என்றும் நித்தியமானவை. உடல் அழியும்போதும் ஆன்மா அழிவதில்லை என்ற கருத்து வேதங்களால் ஒப்புக்கொள்ளப்பட்ட வையாயினும் உடல் அழிந்தபின் ஆன்மா வுக்கு என்ன நிகழ்கிறது என்பதில் மட்டுமே வேதக்கொள்கைகளுக்கும் பிற்கால சமயதத்து வக் கொள்கைகளுக்கும் சிறிது வேறுபாடு காணப்படுகிறது. வேதங்களில் குறிப்பிடப் பட்டிருக்கும் ஆன்மா உடலைவிட்டு நீங்கிய பின் அதன் வினைக்கேற்ப மோட்சத்துக்கோ அல்லது நரகத்துக்கோ செல்கிறது. தேவயா னம், பிதிர்யானம் ஆன்மாக்களுக்கு மறு பிறப்பு உண்டென்னும் கருத்து வேதங்களில் வெளிப்படையாகக் காணவில்லை அதனால் தான் வேதகாலத்தில் இறந்தவரின் உடல் எரிக்கப்பட்டதென்றும் முன்னைய ஆய்வா ளர்கள் எழுதினர். ஆனால் சிந்துவெளி நாகரிகத்தில் கண்டெடுக்கப்பட்ட புதைகுழிக ளில் இருந்து அங்கு இறந்தவரின் உடல் புதைக்கப்பட்டிருக்கலாமென்றும் ஆன்மா வுக்கு மறுபிறப்பு உண்டென்ற கருத்தியல்பு நிலவியிருக்கலாம் என்ற கருத்து ஆராய்ச்சியா ளர்களால் முன்வைக்கப்பட்டிருக்கிறது. எனி னும் வேதங்களின் முற்பகுதியாகிய மந்திரப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதியிலே மறுபிறப்புப் பற்றிய குறிப்பு காணப்படவில்லையாயினும் பிராமணத்திலே இவை பற்றி சிற்சில குறிப்புக்கள் காணப்படுகின்றன. இவையே பிற்காலத்தில் மறுபிறப்புப் பற்றிய கொள்கைகள் விருத்தியடைந்து சைவசித்தாந்தத்தில் நிறைவடைவதற்கு காரணமானது. சைவசித்தாந்த ஆன்மா ஆராய்ச்சியியலில் கன்மக் கோட்பாட்டினுடைய விருத்திக்கு வேதகால ஆன்மா பற்றிய ஆராய்ச்சி மூலகாரணமாக இருந்தது. மந்திரப் பகுதியில் ஆன்மாவுக்கு மறுபிறப்பு உண்டா? இல்லையா? என்பதை தெளிவாக வரையறுத்திராதது ஆராய்ச்சிக்குரியதொன்றாகும்.

**வேதங்களில் உலகு**

வேதங்களில் காணப்படும் உலகு பற்றிய கருத்துநிலை ஆராய்ச்சியில் இந்த உலகு உண்மையாதா? பொய்யானதா? என்பதில் தத்துவ ஞானிகளிடம் கருத்துமோதல்களே காணப்படுகின்றன. இவர்களில் சங்கர வேதாந்திகள் உலகம் என்பது வெறும் பொய்த் தோற்றமே என்கின்றனர். சைவசித்தாந்த வாதிகள் உலகம் பொய்யல்ல அது இல்லாத பொருளல்ல உள்பொருளே என்ற கருதியலினூடு செல்கின்றனர். இந்த இருபெரும் வாதங்களில், உலகம் பொய்யல்ல உண்மையானது என்ற கருத்துநிலைதான் வேதங்களில் காணப்படுவதுடன் இது சைவசித்தாந்த இயலையும் மெய்ப்பிக் கின்றது. இந்த உலகம் பஞ்சபூதங்களால் ஆனது. இந்த உலக உற்பத்தி எவ்வாறு நிகழ்ந்தது என்பதில் வேதாந்திகளும் சைவசித்தாந்திகளும் வேறுபடுகின்றனர்.

வேதங்களின் கருத்துப்படி அறிவுடைய ஒருவனே உலக உற்பத்திக்குக் காரணமானவன். அறிவுடைய ஒருவன் அறிவற்ற சடப்பொருளாகிய இந்த உலகை தன்னிடத்தில் இருந்து உற்பத்திசெய்தானா? அல்லது சடமாகிய இந்த உலகத்தைச் சடமான ஒரு மூலப்பொருளில் இருந்து உற்பத்தி செய்தானா? என்ற வினாக்களுக்கு தன்னிடத்தில் இருந்து உற்பத்திசெய்தான் என்று சங்கர வேதாந்திகள் கொண்ட கொள்கையை உறுதிசெய்வதாகவும், புறம்பான ஒரு பொருளாக மாயையில் இருந்து உற்பத்தி செய்தான் என்று சைவ சித்தாந்திகள் கொண்ட கொள்கைக்கு ஆதரவாகவும் வேதங்கள் விடையளித்திருக்கின்றன. ஆகவே சைவ சித்தாந்தம் கொண்ட உலகு பற்றிய ஆராய்ச்சியும் வேதத்தில் முளை விட்டிருப்பதனை அவதானிக்க முடிகிறது.

**வேதகால ஒரு தெய்வக்கோட்பாடும் பிற்கால சைவ சித்தாந்த வளர்ச்சியும்**

வேதகாலத்திலே பல தெய்வக் கோட்பாடு நிலவினாலும் காலப்போக்கில் அவர்களிடையே ஒரு தெய்வக்கோட்பாடு என்ற நிலைக்கு வளர்ச்சியடைந்துள்ளதனை இருக்கு வேத மகாவாக்கியங்களின் மூலமாக அறிய முடிகிறது. பலதெய்வங்களை வழிபடுகின்ற போது குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட சில தேவைகளை நிறைவேற்றுமுகமாக ஒரு தெய்வத்தை ஏனைய தெய்வங்களிலும் பார்க்க உயர்த்திப் போற்றி யாகக்கிரியைகள் மூலமாக வழிபட்டதை அறிந்து கொள்கிறோம். இவ்வாறு பிரஜாபதியே ஏனைய தெய்வங்களிலும் பார்க்க உயர்ந்ததென்று கருதினர். ஏனெனில் மக்களுக்குத் தலைவனாக விளங் கும் பண்பு அவனிடத்திலே காணப்பட்டமையாகும். சில வேளைகளிலே இந்திரனை உயர்த்திப் போற்றி வழிபட்டிருக்கிறார்கள். அவன் சிறந்த போர் வீரன் தோற்றப்பொலிவும் ஆளுமையும் அவனிடத்திலே காணப்பட்டன. இத்தகைய திறன்கள் தமக்கு வேண்டி வழிபட்டனர். இந்த சிந்தனைகளை தொகுத்து நோக்கும்போது ஒரு சக்தியினையே வெவ்வேறு சந்தர்ப்பங்களிலே வெவ்வேறு தேவை கருதி வெவ்வேறு நாமங்களினாலே வழிபட்டிருக்கலாம் என சிந்திக்கக்கூடியதாக இருக்கின்றது. இருக்கு வேதம் 1ம் மண்டலம் 164ஆவது பாடல் 46ஆவது வரியான "ஏகம் சத் விப்ரா பஹுதா வதந்தி" உள்பொருள் ஒன்றே: அறிஞர்கள் அதனை பல நாமங்களிட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைப்பர் எனப்பொருள் கொள்ளப்படுகின்றது. எனவே வேதகாலத்தில் இறுதிப் பகுதியிலே பல தெய்வக் கோட்பாட்டிலிருந்து ஒரு தெய்வக் கோட்பாடு வளர்ச்சியடைந்தமை சைவசித்தாந்த பதிக் கோட்பாட்டினை வேதங்கள் ஏற்றிருந்தமை புலனாகிறது.

மேலே கூறிய ஒரு தெய்வக்கோட்பாடு பற்றிய கருத்து பிற்கால சமய இலக்கியங்களிலும் தத்துவத்துறையிலும் முக்கிய இடத்தை வகிக்கின்றது. சமய இலக்கியங்களிலே ஆகமங்களை எடுத்துக்கொண்டால் அது கூறும் திருக்கோயில் அமைப்புகளிலே துவாரபாலகருடைய கை அமைதிகள் காட்டி நிற்கும் தத்துவத்தினை ஆராய்கின்ற பொழுது, உள்ளே இருப்பது வேறொன்றுமில்லை, இருப்பது ஒன்றுதான் என்ற கருத்தைச் சுட்டி நிற்கின்றது. இதனைத் தொடர்ந்து மணிவாசகருடைய திருவாசகத்தை நோக்குகின்ற போது, "ஏகன் அநேகன் இறைவன் அடி வாழ்க" என்ற வரிகள் கவனித்தற்குரியன. எனவே அக்காலத்திலே இறைவன் ஒருவனே ஆன்மாக்களின் தேவை கருதி வெவ்வேறு வடிவங்களிலே காட்சி கொடுக்கும் பொழுது வெவ்வேறு நாமங்களைப்பெற்று விளங்குகின்றான் என்பதைச் சித்தாந்த வாயிலாக அறிகின்றோம்.

**வேதகால ஒழுக்கத்தில் சைவசித்தாந்தம்**

வேத காலத்திலே ஒழுக்கம் பற்றிய கருத்தானது கடவுள்கோட்பாட்டுப் பின்னணியிலே விளக்கப்பட்டிருப்பதனைக் காணலாம். அக்காலத்திலே ஒழுக்கமானது ரிதம் என்ற சொல்லினாலே அழைக்கப்பட்டது. ரிதம் என்பது ஒழுங்கு, நியதி, நியமம் என்பது பொருள். இதற்குப் பொறுப்பாக வருணன் என்ற கடவுளைப் போற்றினர். இதனாலே அவனுக்கு ரிதசயகோபன் என்ற பெயரும் கொடுக்கப்பட்டது. அதாவது மனிதர்களிடத்திலே பேணப்படுகின்ற ஒழுங்கினைக் காப்பது அவனுடைய முக்கிய கடமையாகும். அக்கால மனிதர்களினது முக்கிய கடமையானது நாளாந்தம் வேள்வியாக கிரியைகள் மூலமாக இயற்கை சக்திகளை திருப்திப்படுத்துவது ஆகும். இவ்வாறு திருப்திப்படுத்தப்படாவிட்டால் அந்த ஒழுக்கத்திலிருந்து வழுவியவர்களாகவே கருதப்படுவர். அதுமட்டுமல்லாது வர்ணனுடைய கோபத்திற்கு ஆளாக வேண்டிவரும் பய நம்பிக்கையும் அவர்களிடையே நிலவியது.

வேதகால ஒழுங்கு பற்றிய கருத்தானது உபநிடதங்கள் இதிகாசங்கள் ஆகிய இலக்கியங்களிலே தருமம்(அறம்) என்றவகையிலும் புராணங்களிலே பக்தி என்றவகையிலும் திருமுறை இலக்கியங்களிலே தூயஅன்பு என்றவகையிலும் சைவசித்தாந்தத்திலே ஒழுக்கம் என்ற நிலையிலும் வளர்ச்சியடைந்திருப்பதனைக் காணமுடிகிறது.

சைவசித்தாந்தத்தின் இலட்சியமே மனிதனுக்கு உலக துன்பங்களில் இருந்து விடுதலை அளித்து மீட்சிகொடுப்பதுதான். விடுதலை என்பது ஆத்ம சுதந்திரம் எனக்கருதி ஆத்ம சுதந்திரம் அடைதலே மெய்யடியார்களது குறிக்கோள் என விதிக்கப்பட்டது. இக் குறிக்கோள் நிறைவடைவதற்கு அவர் எத்தகைய ஒழுக்க நடத்தைகளைப் பின்பற்ற வேண்டும் என்பதனைச் சைவசித்தாந்தம் ஒழுக்கவியலின் ஊடாக விளக்கிச்செல்கின்றது.

இவற்றிலே நால்வகை ஒழுக்கநெறிகள் சித்தாந்தத்திலே சிறப்பிடம் பெறுகின்றன. சித்தாந்தமானது ஒழுக்கநெறிகளைப் போதிப்பதிலே தன்னை ஒரு சமயமாவும், செயல் வழியில் அவற்றினை நடைமுறைப்படுத்தும் ஒரு வாழ்வியலாகவும், இறுதி விடுதலையடைவதிலே அறிவு வழி நின்று ஞானநிலையில் தன்னை ஒரு தத்துவமாகவும் அமைத்துக் கொண்டுள்ளதென்றால் மிகையாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதகாலத்தில் மக்களுக்கு பயத்தின் மூலமாவே ஒழுக்கம் புகட்டப்பட்டது. தெய்வம் தண்டிக்கும் என்ற பயநிலையே அவனை ஒழுக்கமான வாழ்வு வாழ வைத்திருக்கிறது. அங்கு கற்பிக்கப்பட்ட ஒழுக்கத்தின் பரிணாம வளர்ச்சியையே நாம் சைவசித்தாந்தத்தில் நால்வகை ஒழுக்க நெறிகளுக்கூடாகக் காண்கின்றோம். வேதத்திலே ஒழுங்கு படுத்தப்படாமல் ஆங்காங்கு காணப்பட்ட ஒழுக்க எண்ணங்களை சைவசித்தாந்தம் ஒழுங்குபடுத்தி ஏற்றுக்கொண்டது.

**உபநிடதங்களில் சைவசித்தாந்தம்**

இந்துநாகரிகத்தினுடைய பெருமைகளை பறைசாற்றி நிற்கின்ற சமய தத்துவ நூல்களிலே உபநிடதங்கள் முக்கிய இடத்தை வகிக்கின்றன. இது இந்து தத்துவ வரலாற்றிலே போற்றப்படுகின்ற பிரதானமான 3 நூல்களில் ஒன்றாக வைத்து எண்ணப்படுகின்றது. வேதத்தின் முடிந்த முடிவான கருத்துக்களைக் கூறும் வகையிலே சிறப்புப் பெறுகின்றது. வேதாந்தம் என்ற சொல்லினாலே இந்திய தத்துவப்பரப்பில் அழைக்கப்படுகிறது. காலத்துக்குக் காலம் மேற் கொள்ளப்பட்ட உண்மையை நோக்கிய பயணத்தினுடைய அதிமுக்கிய பயணமாக அமைகின்றது. தன்னைத்தானே அறிந்து கொள்ளுகின்ற ஒரு பயணமாக இவ்விலக்கியம் பெருமை பெறுகின்றது. இதனாலே ஞானம் என்று அழைக்கின்ற ஒரு மரபு நிலவிவருகின்றது. இவ்வகையிலே நோக்குகின்றபோது வேதங்கள் விட்டகுறைகளை நிவர்த்தி செய்யும் வகையிலும் காலத்துக்கு காலம் பேணப்பட்ட ஆன்மிகத்தின் சுரங்கமாகவும் உபநிடதங்கள் வைத்தெண்ணப்படுகின்றன.

உபநிடதங்களினுடைய முக்கியத்துவத்தை அறிந்துகொள்வதற்கு முன்னதாக உபநிடதம் என்பதனுடைய பொருளினை விளக்கிக் கொள்ளுதல் பொருத்தமானதாகும். உபநிடதம் என்ற சொல்லினை உப+நி+த என பிரித்துப் பொருள் கொள்ளுகின்போது குருவின் அருகிலிருந்து சிரத்தையோடு கற்க வேண்டிய மெஞ்ஞான இரகசியங்களைக் கொண்டதென்று பெருமைபடுத்தப்பட்டது. வரலாற்றிலே 200க்கும் மேற்பட்ட உபநிடதங்கள் எழுச்சிபெற்றவை என்றும் 108 உபநிடதங்கள் கிடைக்கப்பெற்றவையென்றும் அவற்றிலே 12 உபநிடதங்களுக்கு சங்கராச்சாரியார் உரை வகுத்தார் என்றும் கூறப்படுகின்றது. முக்கியமான உபநிடதங்களாவன ஈச, கேன, கட, முண்டக, மாண்டூக்கிய, மைத்திராணிய, சாந்தோக்கிய, பிரசன்ன போன்றவற்றைக் குறிப்பிடலாம். உபநிடதங்கள் பலவகைப்பட்டாலும் அவற்றிலே மூன்று முக்கிய பொருள்கள் பற்றி ஆராயப்பட்டுள்ளது. அவை, கடவுள், ஆன்மா, உலகம் என்பனவாகும். இத்தகைய கருத்துக்களை வெவ்வேறு வாயில்களாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது. அதாவது உரையாடல், உபதேசம், நாடகம், வினாவிடை, கணிதம் என்பன வாகும்.

**சமய வரலாற்றில் உபநிடதங்கள்**

இந்து சமய வரலாற்றிலே காலத்துக்குக் காலம் போற்றப்பட்டு வந்த ஆத்மிக மரபுகளை விளங்கிக்கொள்கின்ற இலக்கியங்களிலே உபநிடதங்கள் முக்கிய இடத்தை வகிக்கின்றன. இந்தவகையில் உபநிடதங்கள் தோற்றம் பெற்ற பின்னணியை நோக்குகின்றபோது அஞ்ஞானத்தைப் போக்குவதற்கு அறவாழ்க்கையைக் கட்டியெழுப்புவது அவசியம் என வலியுறுத்துவதைக் காணலாம்.

உபநிடதங்களை ஆக்கியவர்களும் ஆக்கிய இடமும் பண்பாடு பரவுதற்கு, வளருவதற்கு ஏற்றதொரு சூழ்நிலையாக அமைந்திருக்கிறது. உபநிடதங்களை ஆக்கியவர்களுக்கூடாக தூய்மையடைந்தவர்கள் அந்தக் காலத்திலே வாழ்ந்திருக்கிறார்கள் என்பதனை அறிந்துகொள்கின்றோம். மேலும் கவனிப்பாரற்றுக் கிடந்த வனங்களும் வனங்களிலே காணப்படுகின்ற மரங்களும் எமது வாழ்க்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைக்கு உதவுவனவாக அமைந்துள்ளமையினை அதர்வனவேதத்தைச் சேர்ந்த உபநிடதங்கள் வாயிலாக அறிந்துகொள்ளலாம். எடுத்துக்காட்டாக மாண்டூக்கிய உபநிடதம், சைதன்ய உபநிடதம், பிரசன்ன உபநிடதம், முண்டக உபநிடதம் போன்றவற்றினூடாக அறிந்துகொள்ளலாம்.

உபநிடதங்கள் ஒருவனுடைய வாழ்வு அறவாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டமைய வேண்டும் என்பதை சிந்தித்திருக்கின்றன. அதற்கு எடுத்துக்காட்டாக வாழ்க்கையினுடைய முதற்கட்டம் என்று சொல்லப்படுகின்ற பிரமச்சரிய நிலையினை உபநிடதங்கள் எடுத்துக்கூறுகின்றன. பக்குவம் அடைந்த மாணவன் ஒருவன் ஏற்ற குருவை நாடி அவருக்கு பணிவிடைகள் செய்து ஐம்புலன்களை அடக்கிக்கொண்டு தனக்கு ஏற்பட்ட சந்தேகங்களினைத் தீர்த்துக் கொள்கிறான். இங்கே குரு பாரம்பரியத்தின் இன்றியமையாத் தன்மையினை விளங்கிக் கொள்கின்றோம். இதுமட்டுமன்றி மாணவனிடத்திலே எதிர்பார்க்கப்பட்ட பணிவு, கடமை, உணர்வு, குருபக்தி, ஐம்புல அடக்கம் என்பன உபநிடதங்கள் கூறுகின்ற சமய சிந்தனைகளாக அறவாழ்க்கைப்படி அமைந்திருக்கின்றன. இதுவே பின் எழுந்த சைவ சித்தாந்த வாழ்வியலிலும், சித்தாந்த ஒழுக்கவியலிலும் பேசப்பட்டிருக்கின்றது. இதனை உறுதி செய்யும் வகையில் குருகுலத்தைவிட்டு வெளியேறுகின்ற மாணவனை நோக்கிக் குருவானவர் வழங்கும் ஆசீர்வாதங்கள் ஒருவனுடைய வாழ்க்கையிலே கடைப்பிடித்து ஒழுகவேண்டிய அறஒழுக்க சிந்தனைகளாக விளங்குகின்றன. யசுர்வேத, தைத்திரீய உபநிடதத்தில்

"சத்யம் வத, தா்மம்சர, ஸ்வாத்யாயாத்மா. ப்ரமத ஆசார்யாய ப்ரியம் தனம் ஆஹ்ருத்ய ப்ரஜாதந்தும்மா வ்யவச்சேத்ஸீ"
(தைத்திரீய உபநிடதம்)

1. தாய் தந்தையரைப் பேணுதல்
2. குருவை தெய்வமாகப் போற்றுதல்
3. விருந்தினரை உபதேசித்தல்
4. உண்மை பேசுக
5. அறம்செய்க.

போன்ற சிந்தனைகள் மனம் கொள்ளத் தக்கவையாக இருக்கின்றன. இந்த சிந்தனைகளை அடிப்படையாக கொண்டு பிற்காலத்திலே சமய இலக்கியங்களும், சமயப் பெரியார்களும் ஒழுக்க சிந்தனைகளுடைய முக்கியத்துவத்தை முதன்மைப்படுத்தியிருக்கின்றார்கள். இந்த வகையிலே தொடர்ச்சியாக சமயவரலாற்றை விளங்கிக் கொள்வதற்கும் இலக்கியங்கள் எழுச்சி பெறுவதற்கும் உபநிடதங்கள் சனாதனதா்ம வரலாற்றிலே முக்கிய இடம் வகித்திருப்பதோடு பிற்பட்ட கால தத்துவவளர்ச்சிக்கு இவையே உருவம் கொடுத்திருக்கின்றன எனத் தெள்ளிதில் உணரலாம்.

மேலே கூறிய விடயங்களை மேலும் விளக்குவோம். பக்தி இலக்கியங்கள் என்று சொல்லப்படுகின்ற திருமுறைகள் கூறுகின்ற சமய ஒழுக்கத்திற்கு உபநிடதங்கள் வழிகாட்டியாக அமைந்திருக்கின்றது. "தாயினும் நல்ல தலைவரென்றடியார்." என்பதற்கிணங்க தாய்தந்தையரை வாழ்க்கையிலே முதன்மைப் படுத்தியிருப்பதைக் காணலாம். ஓரிடத்திலே அறம்செய விரும்பு, ஆறுவது சினம் என்றது இவை ஒரு மனிதனுடைய வாழ்க்கை வழிகாட்டிகளாக அமைந்திருக்கின்றன. சுவாமி விவேகானந்தர் இந்திய சமயத்தை உலகலாவிய ரீதியிலே பரப்புவதற்கு அடிப்படையாக உபநிடதங்கள் கூறுகின்ற ஒழுக்க சிந்தனைகள் அமைந்திருக்கின்றன.

உபநிடதங்கள் இலகுவான சமய வழிபாட்டினை முதன்மைப்படுத்தியிருக்கின்றன. அதுவே தியானம் எனப்படும். இதற்கு பொருளோ, காலமோ, இடமோ தேவையில்லை. ஐம்புலனை அடக்கிய தூய்மையான ஒரே குறிக்கோளைக் கொண்ட உள்ளமே தேவையானதாகும். எனவே யோகதத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துவங்கள் எழுச்சி பெறுவதற்கும் காலத்துக்குக் காலம் வளர்ச்சியடைந்துவந்த சமயவழி பாட்டு மரபுகளை விளங்கிக் கொள்வதற்கும் உபநிடதங்கள் வழிகாட்டிய வகையிலே இந்து சமய வரலாற்றில் முக்கிய இடத்தை வகிக் கின்றன.

மேலும் உபநிடதங்கள் சமயத்தின் ஊடாக வளர்ச்சியடைந்த தத்துவசிந்தனை களுக்கு வித்திட்டிருக்கின்றன. உதாரணமாக கடவுள், ஆன்மா, உலகு, கன்மம், மறுபிறப்பு, மாயை, போன்றவை பற்றி எடுத்து ஆராய்ந்த வகையிலே முக்கிய இடத்தை வகிப்பதோடு சைவசித்தாந்த தத்துவவளர்ச்சிக்கும் இவையே காரணமான நிலையில் சைவசித்தாந்தத்தின் கருவூல்கள் உபநிடதங்களே என்று சொல்லும் அளவிற்கு சிறப்புற்றிருக்கின்றன. அதனாலே தான் "சுத்தாத்துவித சைவசித்தாந்தம்" என்ற தொடர் வழக்குக்கு வரலாயிற்று.

**உபநிடதங்களில் பிரமமும், சைவசித்தாந்த கருத்து நிலை வளர்ச்சியும்**

உபநிடதங்களைக் கொண்டு பிரமம் பற்றிய கருத்துக்களை ஆராய்கின்றபொழுது அங்கே விளங்கமுடியாத ஒரு பொருளாகவும் கூறப்பட்டிருத்தலை மன்னர் - சீடர், கணவன் - மனைவி உரையாடல்களில் இருந்து விளங்கிக் கொள்கிறோம். எடுத்துக்காட்டாக, பாக்ஞவல்யருக்கும் கார்க்கிக்கும் இடையே நடைபெற்ற உரையாடலில் இருந்து சிருட் டிக்கு ஆதாரம் எதுவென வினவியபோது பாக்ஞவல்யர், "அது அழிவற்றதாகிய பிரமம் அந்த அழிவற்றபொருள் தடிப்பானதுமல்ல நீண்டதுமல்ல குறுகியதுமல்ல இருளானது மல்ல ஒளியானதுமல்ல, என விளக்குகிறார். தொகுத்து நோக்கும்போது கண்ணுக்குக் புலனாகாத வடிவமற்ற நாமமற்ற ஒரு பொருளே பிரமம் என அறிந்து கொள்கி றோம்.

பிருகதாரணிய உபநிடதத்திலே பிரமம் பற்றி பல்வேறுபட்ட விளக்கங்கள் கொடுக்கப் பட்டுள்ளதனைக் காணலாம். அங்கே சீடர் களை நோக்கி மறைபொருள் பற்றி எடுத்துக் கூறுவதனால் "இதுவல்ல இதுவல்ல" என மறுத்துக்கூறிப் பிரமம் பற்றி விளக்கப்பட்டி ருக்கிறது. குறிப்பாக சூரியன், சந்திரன், மின்னல், ஆகாயம், நீர், நெருப்பு, காற்று, திசைகள் போன்றவையாவும் பிரமத்துக்கு விளக்கமாகக் கூறப்படுகின்றன.

உபநிடதங்களிலே பிரமம் பற்றிக் கூறுகையில் உலகின் அடிப்படைச் சக்தியை பிரமம் எனவும் சிலசமயம் ஆத்மன் எனவும் அழைத்துள்ளமையைக் காணலாம். இங்கு ஆத்மன் என்ற சொல் பிரமத்தின் மறு பெயராகவே கூறப்படுகிறது. சில உபநிடதங்க ளிலே தெளிவற்ற தொடர்பற்ற கருத்துக்களும் இடம்பெற்றிருக்கின்றன. இப்படியான கருத் துக்களே பிற்காலத்தில் எழுந்த தத்துவ விளக்கங்களும் அடிப்படைக் கோட்பாடு களை வெவ்வேறு வகையில் எடுத்து ஆராய்வ தற்கு காரணமாக இருந்திருக்கலாம். உதாரண மாக பிருகதாரணிய உபநிடதத்தின் 1ஆம் அத்தியாயத்தில் "ஆதியில் இவ் உலகமெல் லாம் பிரமமாக இருந்தது." என்று கூற்றுக் காணப்படுகிறது. அதே உபநிடதத்தில் இன்னொரு பகுதியிலே ஆதியில் ஆத்மன் ஒன்றுதான் தனியாக இருந்தது என்ற கூற்றும் காணப்படுகிறது. இந்த சிந்தனைச் சங்கரரு டைய அத்வைதக் கோட்பாட்டுக்கு அடிப் படையாக அமைந்துள்ளது எனலாம். மேலும் தைத்திரீய உபநிடதத்திலே உண்டான பிரா ணிகள் எல்லாம் அதனிடமிருந்து உண்டா கியவை, அவை எதனால் உயிர்வாழ்கின்ற னவோ, முடிவுறும்போது எதனிடம் புகுந்து மறைகின்றனவோ, அதுவே பிரமம் என்ற கூற்று காணப்படுகிறது. கேன உபநிடதத்திலே பிரமம் இதுவென சொல்வது மிக அருமை யாக இருக்கிறது.

"எது வாக்கால் விளக்கம்பெறாதோ ஆனால் வாக்கு எதனால் விளக்கம் பெறுமோ அதுவே பிரமம். எதை ஒருவன் மனத்தால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணருவதில்லையோ, ஆனால் மனம் எதனால் உணரப்பெறும் என்று கூறுகிறார்களோ அதுவே பிரமம். எதை ஒருவன் கண்ணால் பார்ப்பதில்லையோ ஆனால் கண் எதனால் பார்ப்பதாகிறதோ அதுவே பிரமம் எதை ஒருவன் மூக்கால் நுகர்வதில்லையோ, ஆனால் மூக்கு எதனால் நுகர்வதாகிறதோ அதுவே பிரமம் என்ற கருத்து சைவசித்தாந்தம் கூறுகின்ற அடிப்படைக் கோட்பாடுகளுக்கு முன்னோடியாக அமைந்திருக்கிறது.

மேற்கூறிய சிந்தனைகள் பக்தி இலக்கியங்களான திருமுறையிலும் இழையோடியிருப்பதை விளங்கிக் கொள்கிறோம். திருமூலர்

"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்."
1804 (102.சிவபூசை)

என்ற வரிகள் மனங்கொள்ளத்தக்கவை. சங்கரருடைய கருத்துப்படி பிரமத்தை அறிந்தவன் பிரமமாகவே ஆகிவிடுகிறான். இங்கே ஆன்மாவானது ஆணவத்தின் பிடியில் இருந்து விடுபட்டு தன்னை மறந்த நிலையில் அதன் பித்தனாகிவிடுகிறது. இதனையே அப்பரும் திருத்தாண்டகத்தில் "முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள் ......" என்ற பாடல் அடிகள் மூலம் எடுத்துக்காட்டியுள்ளார். எனவே உபநிடதங்களிலே கூறப்பட்டுள்ள பிரமம் பற்றிய கருத்துக்கள் பிற்காலத் தத்துவத்துறைகளுடைய வளர்ச்சிக்கும் பக்தி இலக்கிய வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைந்துள்ளன எனலாம்.

சாந்தோக்கிய உபநிடதத்திலே ஆத்மன் யார் பிரமம் என்றால் என்ன? என்ற வினாக்களுக்கு, பிறப்பற்ற அழிவற்ற நித்தியமான ஆத்மனே பிரமம் எனப்படுகிறது. மாண்டூக்கிய உபநிடதத்திலே அப்பிரம்மனே ஆத்மன் என்று அறியுங்கள் என்று கூறப்பட்டுள்ளது. சுவேதாஸ்வர உபநிடதத்திலே தயிரிலே வெண்ணெய் போல அந்த ஆத்மன் எல்லாவற்றிலும் வியாபித்திருக்கின்றதோ அதுவே பிரமம் எனக் கூறப்படுகிறது. (அப்பர் சுவாமிகள் "விறகில் தீயினன் பாலில் படுநெய்போல்) இவ் உபநிடதம் கூறுகின்ற பிரமம் பற்றிய கருத்துக்களே சைவசித்தாந்தம் கூறுகின்ற பதிக்கோட்பாட்டுக்கு அடிப்படை. மேலும் உபநிடதங்களிலே உலகத்தின் தோற்றத்துக்கும் ஆன்மாவின் தோற்றத்துக்கும் அடிப்படையாக உள்ளது பிரமம் எனலாம். சாந்தோக்கிய உபநிடதத்தில் சுவேதகேதுவிற்கும் உத்தாகலருக்கும் இடையிலே நடைபெற்ற உரையாடலில் பிரமத்திலிருந்தே பிரபஞ்சம் தோன்றுகிறது என்ற கருத்து விளக்கப்பட்டுள்ளது. ஒரு ஆலம் விதையை உதாரணமாகக் கொண்டு, கண்ணுக்கு புலனாகாத மிக நுண்ணிய விதையிலிருந்து இலைகளோடும் கிளைகளோடும் கூடிய பெரிய ஆலவிருட்சம் தோன்றுகிறது போல கண்ணுக்குப் புலனாகாத பிரமத்திலிருந்து பிரபஞ்சம் தோன்றுகிறது. எனக்கூறி நீரிலே கலந்த உப்பு அதன் எல்லாப்பகுதியிலும் வியாபித்திருப்பதுபோல பிரமம் உலகெங்கணும் வியாபித்திருக்கின்றது என விளக்குகின்றார். அனைத்திற்கும் அடிப்படையாக அமைந்த ஒரு சக்திக்கு உபநிடதங்கள் பிரமம் என்ற பெயரை கொடுக்கின்றன. சுவேதாஸ்வதர உபநிடதம் ஒருவனுக்குள்ளே ஆத்மன் இருப்பதைக் கொண்டு பிரமத்தின் உண்மையை விளக்குகிறது. ஒரு ஆத்மா தானே தன் சுகதுக்கங்களை நிர்ணயிப்பதற்கு வலுவற்றதாக இருக்கையிலே அதனைப்பார்க்கிலும் சக்தி வாய்ந்த ஒரு பொருள் உண்டென்பது புலனாகும். எனவே ஆத்மாவே பிரமத்துக்குச் சான்று எனக் கூறுகிறது.

**உபநிடதங்களின் கருத்துநிலைத் துணிபு**

மொழி அமைப்பைக் கருத்திற் கொண்டு நோக்கும்போது உரைநடைப் பாணியில் அமைந்த இவ் இலக்கியம் புதிய, பழைய மொழி அமைப்பையும் கருத்தில் கொண்டது. சில உபநிடதங்கள் முழுவதும் செய்யுள் நடையில் விளங்குகின்றன. இவை காலத்தால் பிந்தியவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணமாக :

1. கட உபநிடதம்
2. சுவேதாஸ்வர உபநிடதம்
3. மகாநாரதீயம்
4. ஈசோவாஸ்ய உபநிடதம்
5. முண்டகம்

அதர்வ வேதத்தைச் சார்ந்த "மாண்டூக் கிய உபநிடதமும்" செய்யுள் நடையில் அமைந்தவை ஆகும். 200க்கும் அதிகமான உபநிடதங்கள் காணப்பட்டாலும் பல கிடைத்தில. கிடைத்தவற்றில் 12 நூல்கள் முக்கியமானவை. இவற்றின் சிறப்பைப் பாரதியார் தனது கவிதையில்

"பன்னிரு நூல் எங்கள் நூலே
பார் மிசை ஏது ஒரு நூல்"

என்று புகழ்கின்றார். "பிரஸ்தானத்தி ரயம்" என்று அழைக்கப்படும் பிரம்மசூத் திரம், பகவத்கீதை, உபநிடதம் என்பவற்றுள் இந்து சமயத்திற்கும் இந்திய தத்துவத்திற்கும் ஆதாரமான மூலநூலாக உபநிடதம் கொள் ளப்படுகிறது. வேதங்களின் சிரம். அதிமுக்கிய பகுதியாகக் கொண்டமையால் "வேதங்களின் சாரமே உபநிடதங்கள்" எனக் கொண்டு,

"வேதாந்தம்" என்ற பெயரும் இதற்கு வழங்கலா யிற்று.

உபநிடதம் என்ற வடமொழிச் சொற்க ளுக்கு குரு, சீடனுக்கு உபதேசித்த மொழியோ என்ற நேரடிக் கருத்து இருந்தபோதும் குருவா னவர் தம்மிடம் வந்த அனைத்துச் சீடருக்கும் உபதேசிக்கவில்லை. ஆன்மிகப் பக்குவம் உள்ளகுரு அதே பக்குவத்தை எய்தக் கூடிய சீடனுக்கு அருளிய உரைகளே முக்கியமான உபநிடதமாகக் கொள்ளப்பட்டன.

அந்தவகையில் இந்திரனிடம் எழுந்த கேள்விகள் சில பிரஜாபதியிடம் தீர்க்கப்பட் டன. "ஐயனே மூப்பு, மரணம், சோகம், பசி, தாகம், இவைகள் யாவும் தீண்டாத ஆன்மா ஒன்று உண்டா?" அறியத்தக்கதா? அல்லது அடையமுடியுமா? என்று கேட்கப்பட்ட கேள்விக்கு உன்னுடைய சரீரமே ஆத்மா என்ற விடை கிடைக்கப்பெற்றது. இதில் திருப்தி அடையா இந்திரன் அது எவ்வாறு இயங்குகின்றது. எனக் கேட்டான் "வண்டி யில் கட்டிய குதிரை போல் ஆத்மா சரீரத்தில் கட்டப்பட்டு நிற்கின்றது." காண்பது கண் ணல்ல கண்ணை கருவியாகக் கொண்டு காண்பது ஆன்மா, பேசுவது நாக்கல்ல, நாக்கைக் கருவியாகக் கொண்டு பேசுவது ஆன்மா. மனது ஆத்மா அல்ல மனதை அடக்கித் தியானத்தில் மூழ்கி, பரமான்மாவை கண்டு ஆனந்தம் அடைதலே ஆன்மா என்று கூறப்பட்டது.

அவ்வாறாக ஆத்மா உடலை எப்படி இயக்குகின்றது என்ற கேள்விக்கு, படுக்கை யில் கிடக்கும் எமது உடலை எழுந்து உட்காரச் செய்வதும் உட்கார்ந்து இருக்கும் உடலை எழுந்து நடக்கச் செய்வதும் ஆகிய இயக்கமே ஆன்மா. ஆன்மா உடலை உற்பத்தி செய்வதில்லை. இய்குவது மட்டும்தான். ஆத்மா இல்லை என்று மறுப்போம் ஆனால் எம்மையே இல்லை என்று மறுப்பதுபோல் ஆகும். ஆத்மா என்ற பொருள் பல கவசங்களால் மூடப்பட்டு அதற்குள் சூக்கும மான பொருளாக இருக்கிறது என்பதை தைத்திரீய உபநிடதம் கூறுகின்றது.

1. அன்னமயகோசம்- உணவினால் ஆனது
2. பிராணமயகோசம்- துடிப்பு, இயக்கம்
3. மான்மயகோசம்- ஜீவ சக்தி
4. விஞ்ஞானமயகோசம்- அறிவு
5. ஆனந்தமயகோசம்- உணர்வு

இவற்றுக்குள் நடுவில் உள்ள பொருளே ஆன்மா என்று கூறப்படுகிறது. உபநிடதக் கோட்பாட்டில் கூறப்பட்ட ஆன்மாவின் கவசங்கள் மேலைத்தேசத்தின் அறிவியல் பரப்பையே வியக்கவைத்தது. காரணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலைத்தேசம் உடல், உளம் சேர்ந்த உளவியல் கோட்பாட்டில் உடல் அழிவிற்கு உறுப்புகள் காரணமா? உளம் காரணமா? என்ற கேள்விக்கு கீழைத்தேச சமயதத்துவ மான உபநிடதம் மேற்கூறப்பட்ட ஐந்து கவசம் அழிக்கப்படின் ஆத்மா சிதைவுறும் எனக் கூறியது. இதனை சிக்மன்ட்ஃப்ரோல்ட் டின்மாணவரான ஜுல் எனும் உளவியல் ஏற்றுக்கொண்டவர். இவ் ஆன்மா பற்றிய கருத்துநிலையினை சைவசித்தாந்தம் தனது ஆன்மா பற்றிய தெளிவுக்கு அடிப்படையாக எடுத்துக்கொண்டது.

வேதங்கள் ஆன்மா ஒன்று எனக்கூற உபநிடதங்கள் ஆன்மாக்கள் பல என்று உரைக் கின்றன. உதாரணமாக,
"ஒருவர் அழுகின்றபோது மற்றவர் மகிழ்ச்சி யாக இருக்கிறார். ஒருவர் செயலாற்றிக் கொண்டு இருக்கும் போதும் மற்றவர் உறங்கிக் கொண்டு இருக்கிறார்."

ஆகவே ஆன்மாக்கள் ஒன்று எனக் கொண்டால் எல்லா உயிரினமும் ஒரே பொழுதில் ஒரு செயலை ஆற்றிக் கொண்டி ருக்க வேண்டும். ஆகவே ஆன்மாக்கள் பல ஆன்மாவின் உண்மை இயல்பு பற்றி,

1. கனவுநிலை
2. நனவுநிலை
3. இதற்கு அப்பாலான கனவு இல்லாத உறக்கநிலை.
4. துரியநிலை (யோகநிலை)

எனும் நான்கு நிலைகள் கூறப்பட்டுள் ளன. ஆன்மாவின் பிறப்புப் பற்றிக் கூறும் போது ஆன்மாவானது தான் செய்த வினைக்கு ஏற்ப பிறவிகளை எடுத்துக் கொண்டிருக்கும் இதற்கு உதாரணமாக: ஒரு புல்லின் நுனியில் இருந்து புழுவானது அதன் அடிக்கும், நுனிக்கும் மாறி மாறி வருவது போலவும், பாம்பானது தனது செட்டைகளைக் கழற்றி விட்டு மீண்டும் புதிய செட்டைகளை பெற்றுக்கொள்ளுதல் போலவும் என கூறுகின் றது. இது பிற்காலத்தில் எழுந்த சைவ சித்தாந்த கருத்தியலில் உயிர்களின் பல பிறப்புக்கள் பற்றிய கருத்தமைவோடு ஒன்றிய தோடு சித்தாந்த இலக்கியமாகத் திகழும் திருமுறைகளில் மணிவாசகரின் திருவாச கத்தில் "புல்லாய் பூடாய் புழுவாய் மரமாகி.." உணர்த்துவதன் மூலம் உபநிடத சாரம் சித்தாந்தத்தில் தொனிப்பதைக் காணலாம்.

பரமான்வாவுக்கும் ஜீவான்மாவுக்கும் இடையிலான தொடர்பு பற்றிக் கூறும் போது ஒரு மரத்தில் தித்திப்பான கனிகளும் காய்களும் உண்டு. கனிகளை உண்டு வாழும் பறவை பரமான்மா. காய்களை உண்டு வாழும் பறவை ஜீவான்மா. ஆகவே, அறிதல் உணரக் கூடிய பொருள் ஆன்மா என்றும் அறிவிக் காமல் உணரக்கூடிய பொருள் இறைவன் என்றும் கூறப்படுகிறது. இக்கருத்தினை பின் வந்த சைவசித்தாந்தம் ஏற்றுக்கொண்டதனை திருவருட்பயன் உயிரவைநிலையில்,

"பொறியின்றி யொன்றும் புணராத புந்திக்
கறிவென்ற பேர்நன் றற"

என்று ஆன்மாக்கள் தாமே எதனையும் உணரமாட்டாதவை அறிவித்தால் மட்டுமே அறியக்கூடியவை என்று சித்தாந்தம் உயிர்கள் பற்றிக் கொண்டிருந்த வரையறைக்கு உபநிடதங்கள் உருவம் கொடுத்திருக்கிறது.

உபநிடதம் கூறுகின்ற முத்திநிலைகள் இரண்டு ஆகும்.

1. விதேகமுத்தி- தேகம் நீங்கிய பின்னர் ஏற்படுவது.
2. ஜீவன் முத்தி- உடலுடன் இருக்கும் போது பெறக்கூடியது

இங்கு ஜீவன் முத்தி பற்றி சித்தியார் சிறப்பாகக் குறிப்பிடுகிறது. இந்த முத்திநிலை யினை அடைந்தவர்களாக சமயவரலாற்றில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருஞானசம்பந்தர், சுந்தரர் ஆகியோரைச் சுட்டலாம்.

முத்தியை அடைவதற்குரிய வழிகளாக சுட்டப்படுபவை,

1. வைராக்கியம்- பற்றறுத்தல்
2. ஞானம்- மூன்று வழிகளைக் கூறும்.
1. சிரவணம்- பற்றறுத்தல்
2. மனனம்- மனதில் பதியவைத்தல்
3. நிதித்தியாசனம்- கேட்டவற்றைத் தியானித்தல்

மேலும் இந்த ஞானம் பற்றிச் சித்தியார் "கேட்டலுடன் சிந்தித்தல் தெளிதல் நிட்டை" என்று கூறுகிறது.

இந்த ஆன்மாவின் இறுதி நிலையில் இறைவனோடு ஒன்றித்து வாழும் என்பதை

1. ஆதுதான் நீ- தத்துவமஸி
2. நான் பிரமமாய் இருக்கிறேன்- அகம் பிரமாஸ்மி

என்ற கருத்துக்களின் ஊடாக இரண்டு அற்ற ஒன்றாக்கிக் கூறப்பட்டது.

**பிரமம்**

பிரமம் என்பது வார்த்தைகளால் வர்ணிக்க முடியாதது. மனதைக் கொண்டு நினைப்பது பிரமம் அல்ல. எந்த சக்தியால் மனம் நினைக்கப்பண்ணப்படுகிறதோ அதுவே பிரமம். எதனால் சுவாசம் சுவாசிக்கப் படுகிறதோ அதுவே பிரமம். வண்டி ஓடுவது சக்கரம் உருளுவதால். மாறாக வண்டி சக்கரத்தை உருட்டிப்பார்ப்பது அல்ல. நாம் அறிவினால் பிரமத்தை காணப்பார்ப்பது ஒரு உவமையின் மூலம் எடுத்துக் கூறப் படுகிறது:

ஒருவன் தான் தன் தோளில் ஏறிநிற்பது போன்றது. ஆகவே பிரமம் என்பது நித்திய மாய் எங்கும் பரவி நிற்கும் மிக நுட்பமான பொருள். அது அழிவற்றது அனைத்துக்கும் அது பிறப்பிடம்.

பிரமத்திடம் இருந்து உலகம் எங்ஙனம் உற்பத்தி ஆனது என்ற கேள்விக்கு சிலந்தி தன்னிடத்தில் இருந்து நூலை உண்டாக்கி அதை மீண்டும் தனக்குள்ளே உள்ளடக்கிக் கொள்வது போலவும் பூமியில் இருந்து செடிகள் உண்டாவது போலவும் தலையிலும், உடலிலும், மயிர் முளைப்பது போலவும் உலகம் யாவும் பிரமத்திடம் இருந்து உண்டானது.

கண்ணுக்குத் தெரியாத மிக நுட்பமான இப் பருப்பொருளில் இருந்து உலகம் எங்ஙனம் உற்பத்தி ஆக முடிந்தது என்ற கேள்விக்கு, விடையாக நுண்ணிய ஆலம் வித்தில் இருந்து விழுதுகளும், இலைகளும், கிளைகளும் கொண்ட பிரமாண்டமான விருட்சம் உண்டாவது போல உலகம் முழுவதும் பரவியிருக்கும் இப்பரம்பொருள் வாழ்ந்துகொண்டிருக்கிறது. இந்த வியாபகத் தன்மையை உத்தாலகர் சுவேதகேதுவிடம் விளக்கும்போது தண்ணீரில் கரைந்துள்ள உப்பின் உருவம் கண்ணுக்குப் புலப்படாத போதும் அதன் இயல்பு தண்ணீர் முழுவதும் செறிந்திருப்பது போல என்கிறார்.

உபநிடதங்களிலே பிரமத்திற்கு இரண்டு நிலைகள் கூறப்படுகின்றன.

1. பிரமம் உலகத்தோடு கூடி உலகத்தின் உள்நின்று உணர்த்தும்
2. அனைத்தையும் கடந்து எல்லாவற்றையும் தன்னுள் அடக்கிய நிலை

இதனை சாந்தேக்கிய உபநிடதம் விளக்கு கின்றது. இங்கு பிரமம் ஆனது தஸ்யலன் என்ற பெயரால் அழைக்கப்படுகிறது.

தஸ்யலன் தோன்றுவதற்கும், பெறுவதற்கும், பின்னர் ஒடுங்குவதற்கும் காரணமாக உள்ளது என்பது கருத்தாகும்.

நிஸ்பிரபஞ்சநிலை- உலகை கடந்து நிற்கும் நிலை ஆகும். இது நிஸ்பிரபஞ்சம் என்று அழைக்கப்படும். பிருகதாரணிய உபநிடதம் இதனை விளக்குகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நிலையில் சப்பிரபஞ்ச நிலை என்பது ஒன்றாய், உடனாய் விளங்கும் நிலை. நிஸ்பிரபஞ்சநிலை என்பது வேறாய் நிற்கும் நிலை.

**உபநிடதங்களில் சைவசித்தாந்தம்**

இன்றைய உலக மெயட்பொருளியல் வரலாறு கீழைத்தேச மெய்யில், மேலைத்தேச மெய்யில் என இட வரலாற்று அடிப்ப டையில் இரு கூறுகளாகப் பிரிந்திருக்கும் நிலையில், கீழைத்தேச மெய்யியலில் இந்து சமயத்தின் மெய்யியலானது உலகமெய்யியற் கோட்பாடுகள் பலவற்றிற்கு விளக்கம் அளித்த மெய்யியலாக இந்து சமயத்தின் அறிவுக்க ருவூலமாக இந்து மெய்யியலின் இதயமாக உபநிடதங்கள் விளங்குகின்றன.

உபநிடதம் என்பது மறைபொருட் கோட்பாடுகளை அறிவுறுத்தும் ஆசிரியரின் அடியில் இருந்து கேட்டல் எனப்பொருள் படும். இதற்கு மூன்று சுலோகங்களில் நுட்பமான கருத்துக் கூறப்பட்டுள்ளது. இந்நிலையில் 108 உபநிடதங்களில் சைவ சித்தாந்த மெய்யியல் கருத்தநிலை வளர்ச்சி பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். வேதத்தில் சைவசித்தாந்தம் கருக்கொள்கிறது. உபநிடதத்தில் அது உருவம் பெறுகிறது ஆகமங்களில் அவற்றின் அதிநுட்பநிலை தெரிகிறது. திருமுறைகளில் மூலமாக வெளி உலகில் பிறந்து சித்தாந்த சாஸ்திரங்கள் மூலமாக வளர்ச்சி கண்டுள்ளது என்னும் கருத்தியலுக்கு அமைவாக உபநிடதங்களைக் கொண்டு சைவசித்தாந்தம் வளர்ச்சி பெற்றிருக்கிறது என்பதை நோக்கு வோம்.

பொதுவாக இந்து மெய்யியல் முப் பொருள் பற்றிய ஆராய்ச்சி மூலமாகவே தனது தத்துவ இயக்க அறிவியலில் தன்னை நிலைநிறுத்துகிறது. அந்நிலையில் கடவுள், ஆன்மா, உலகு எனும் முப்பொருள் பற்றிய ஆராய்ச்சிகளையே வேதம் மேற்கொண்டது. அதன் வழி பிரம்மம், ஆத்மன், உலகு எனும் தத்துவ கலைச்சொல்லாக்கத்திற்கூடாக உப நிடதம் தனது தத்துவ ஆய்வினை மேற் கொண்டுள்ளது. இருக்கு வேதத்தில் மறை மொழியின் மந்திரவலியைக் குறிப்பதற்கு வழங்கிய பிரமன் என்னும் சொல்லே உபநிடதங்களில் இவ்வாறு புதுவிளக்கம் பெற்றுத் தோன்றுகிறது.

யாவற்றையும் உட்படுத்தும் ஆன்மாவி னது உபநிடதம் என்று விவரிக்கம் பெறும் உபநிடதமானது பிராமணங்களின் ஈற்றுப் பகுதிகளாக அமைவதோடு பிராமணங்க ளிலிருந்து உபநிடதங்களுக்கு ஆரண்யகப் பகுதிகள் மூலம் கருத்து வளர்ச்சி ஏற்படுகிறது. (கீழைத்தேச மேலைநாடுகளின் மெய்ப் பொருளியல் வரலாறு) சமயச் சடங்குகள் குறித்து பிராமணங்கள் பேச உபநிடதங்கள் பரம்பொருள் குறித்த போத னைகளைக் கொண்டிருக்கின்றன. மேலும் உபநிடத மெய்ப்பொருள் உண்மைகள் தோன்றுவதற் கும் ஆரணியகங்களே காரணமாக அமைந்தி ருக்கின்ற நிலையில் மக்களின் ஈடேற்றத்திற்கு உபநிடதங்கள் நல்குவதாகச் சொல்லப்படும் மெய்யறிவானது பிரம்மத் தின் உண்மையை அறிவதோடு மட்டும் அமைந்துவிடாது மற்று அப்பிரமத்தினை இடையறாது உணரும் உணர்வே அம்மெய்யறிவாகும். மக்களின் உயிரிலே பிரமம் உறைகின்றது. உண்மையிற் பிரமம் மக்களுயிராகவே உள்ளது. பிரமமே ஆன்மா. அவன் பிறப்பினின்றும் வீடு பெறுகின்றான். அவனுடைய உயிர் பிரமத் தோடு இரண்டறக் கலந்து விடுகின்றது. அந்நிலையில் அவன் இன்ப துன்பங்களையும் பிறப்பிறப்புக் களையும் பெற்றவனாகிறான். துயிலும் ஒருவனது உயிர் விடுதலை பெற்று ஒரு புள்ளாகவேனும் புத்தேளாகவேனும் உலகெங்கனும் உலாவி வரும். இத்தகைய ஒரு உயர்ந்த நிலையில் பிரமம் இருக்க அதனோடு விடுதலைபெறும் ஆன்மாவானது ஒன்றாகி விடுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சிந்தையுள் நினைந்த முற்றிச் சிவகதி அடையலாமே"

என்ற திருவாக்காலும் உணர்ந்து கொள்ள முடிகிறது. இதனூடு: உபநிடதங்கள் முழுவதிலும் ஜீவான்மாவும் பரமான்மாவும் ஒன்றே என்ற கருத்து மீண்டும் மீண்டும் வலியுறுத்தப்படுவதையும் அவதானிக்கலாம்.

உபநிடதங்கள் உயர் அனுபூதி நிலைக் கருவூலகங்களே. இவை பொதுவாக, மெய்யுணர்வினால் வீடு பேறடைவதையே எடுத்துக் கூறுகின்றன. அன்பு நெறியாகவும், செய்நெறியாகவும் வீடு பேறடைவதை வலியுறுத்தவில்லையாயினும் முக்கிய உபநிடதங்கள் எல்லாம் சைவசித்தாந்தம் பொருளை நுவல்வனவே என இலக்கிய கலாநிதி பண்டிதமணி மு. கந்தையா அவர்கள் குறிப்பிடுகின்றார். அவர் மேலும் குறிப்பிடுமிடத்து சொற்சுருக்கியும் பொருளாழ்ந்தும் உள்ள சூத்திரங்களாக உபநிடதங்கள் காணப்படுகின்றன. வேத மந்திரங்களின் இருதயத்தை உபநிடதங்கள் பிராமணங்கள் முதலியன கொண்டே அறிதல் கூடும் அவையெல்லாம் சைவசித்தாந்தப் பொருள் நுவல்வனவே என்பது உண்மை (சைவசித்தாந்தம் விளக்க விருத்தியில் யாழ்ப்பாண அறிவியல் மேதையின் சுவடுகள். யாழ் பல்கலைக்கழக வெளியீடு) இத்தகைசார் அறிஞர்களின் குறிப்புக்களின் ஊடும் உபநிடதங்களில் சைவசித்தாந்த கருத்து நிலை வளர்ச்சி அமைந்திருப்பதனை நிறுவக் கூடியதாக இருக்கின்றது.

இவ்வாறு உபநிடத ஆராய்ச்சியில் அதிக முக்கியத்துவம் பெறும் ஆய்வுத்துறையாக பிரமம், ஆத்மன் என்பது காணப்படுகிறது. இந்த ஆய்வு முறையானது சைவசித்தாந்த மெய்ப்பொருளியலை மேலும் வலுவுள்ளதாக்கின்றது. உபநிடதத்தில் பிரமத்தின் இயல்புகள் குறித்துப் பேசுமிடத்து வருணன் பிரமத்தைப் பற்றிக்குறிப்பிடுமிடத்து "எதனின்று இவையனைத்தும் தோன்றுகின்றனவோ தோன்றிய அவை எதனால் வாழ்கின்றனவோ, பிரியும் போது எதனுள் இடம் பெறுகின்றனவோ அதனை அறிய அவாவைக் கொள்க" இவ்வாறு அறியப்படும் அதுவே பிரமம் ஆகும் என்பதில் இருந்து உலகின் தோற்ற ஒடுக்கத்திற்கு பிரமமே முழுமுதல் கர்த்தா எனும் கருத்து உயர்ந்த இடம் பெறுகிறது. இதனைச் சைவசித்தாந்தம்,

"ஆக்கியெவையு மளித்தா தாசுடன டங்கப் போக்குமவன் போகாப் புகல்"

எனத் திருவருட்பயன் சித்தாந்தக் கண்ணோட்டத்தில் விளக்கிச் செல்கின்றது. இக்கருத்தினை மேலும் வலியுத்தும் வகையில் "பிரமம் நிமித்த காரணமாய் நின்று, முதற் காரணமாய மாயையிலிருந்து பிரபஞ்சத்தை தோற்றுவித்து, தான் அவற்றுடன் கலப்பினால் ஒன்றாய் நிற்கிறது." என்பது சைவசித்தாந்தப் பொருள்நிலை. படைத்தல், ஒன்றாய் நிற்றல் என்ற இரு தன்மைகள் இங்கே இடம்பெறுகின்றன. சைவசித்தாந்தப்பொருள் நிலைக்கு முற்றிலும் ஒத்துவரக் கூடிய ஒரு விளக்கம் தைத்திரிய உபநிடதத்தில் இருக்கிறது. அதனது "பிரமம் இது எல்லாவற்றையும் சிருட்டித்தது. சிருட்டித்து அவற்றிற் பிரவேசித்தது. பிரவேசித்து "சத்" ஆகிய உயிர்களாயும் "தியத்" ஆகிய பாசப்பொருள்களாயும் ஆயிற்று.

"இரு நிலனாய்த் தீயாகி நீருமாகி இயமானனாய்.."

என்பன போல் வருகின்ற திருமுறைக் கருத்தும் இவ்வுபநிடதக் கருத்தும் ஒன்றே. மேலும் இப்பிரமத்தின் தன்மை பற்றி, எங்கிருந்து இவ் உலகத்தினது உயிர்கள் பிறக்கின்றனவோ. அழிவில் அவை எங்கே பிரவேசிக்கின்றனவோ அது பிரமம் என்ற ரீதியில் தைத்திரீய உபநிடதம் பிரமம் பற்றிக் குறிப்பிடுகின்றது. இதனைச் சைவ சித்தாந்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அவன் அவள் அது ." சிவஞானபோதச் சூத்திரத்தின் ஊடாக தனது கருத்து வளர்ச்சியினை ஏற்படுத்திக் கொண்டது மெய்ப்பொருளியலில் முக்கியமான கேள்விகளாகிய ஆன்மா யாது? பிரமம் யாது? என்ற கேள்விகள் சந்தேகத்தில் அமைந்து காணப்படுகின்றன. இக் கேள்விகளின் ஊடு பிரமம், ஆன்மா என்ற சொற்கள் அகத்தும், புறத்தும் உள்ள ஒரே உட் பொருளைக் குறிப்பன எனும் வகையினை சைவசித்தாந்தம் அப்படியே பெற்றுக் கொண்டுள்ளது. ஆன்மாவுக்குச் சார்ந்ததன் வண்ணமாதல் என்பதோர் இலக்கணம் உண்டு. பளிங்கானது தான் சாரும் நிறத்தைத் தன்நிறமாகக் கொண்டதுபோல் இருக்கும். உபநிடதங்கள் குறிப்பிடுவது போல பிரமத்தின் வண்ணமாக இருக்க வேண்டியது ஆன்மா. ஆனால் அநாதியாகவே அதனிடத்தில் கொண்ட ஆணவ மறைப்பினால் அது திசை திருப்பபட்டு பிரமத்தைச் சாராத அதற்கெதிர் ஆணவத்தைச் சார்ந்து ஆணவமாகி விடும் விபரீதம் ஒன்று நேர்கிறது. இது காதற்கிழத்தியைப் புறக்கணித்து சேரிப்பரத்தையில் விழும் நிலை போன்றது என குமரகுருபரசுவாமிகள் குறிப்பிடுகின்றார். இவ்வாறு அந்த ஆணவ அழிப்பைப் பெற்று, பிரமத்தை அடைதலையே சைவசித்தாந்தம் முக்தி என்கிறது. இங்கு ஆன்மாவில் பிரமத்தின் விசேடம் உறைத்துக் கிடக்கின்றது என்ற சிந்தனை உபநிடதங்களில் இருந்து பெறப்பட்டதாகும்.

இந்நிலைப்பட்ட ஆய்வு முறையின் விரிவஞ்சி சுவேதாஸ்வர உபநிடதத்தை மட்டும் எடுத்து அவற்றில் சைவசிந்தாந்தக் கருத்து நிலை வளர்ச்சியினை நோக்குவதே சாலச்சிறந்ததாகும். உண்மையாகப் பிரமப்பொருள் இதுவென நிச்சயித்தற்கெழுந்தது சுவேதாஸ்வர உபநிடதம் ஆகையால் இவ் ஆய்வுக்கு அதனை எடுத்துக் கொண்டோம்.

"ஓம் ப்ரஹ்மவாதிஹோ வதந்தி"

பிரமம் இதுவென நிச்சயிதற்குரிய குறிப்புகளும் நாம் எதிலிருந்து தோன்றினோம். எதனால் இருக்கிறோம் என்பன போன்ற வினாக்களுக்கு விடைகளும் காணப்படுகின்றன. படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல், எனும் ஐந்தொழில்களைச் செய்வது எதுவோ அதுவே பிரமம். தோற்றம், நிலைப்பு, ஒடுக்கம் ஆகிய மூன்றும் பிரமத்துள் அடக்கம். இக்கருத்தினை பின்வந்த சைவசித்தாந்தம் ஏற்றுக் கொண்டதற்கு ஆதாரமாக,

"தோற்றுவித்தளித்துப் பின்னுந் துடைத்தருள் தொழில்கள் மூன்றும்

போற்றவோ...."(53) என சிவஞானசித்தியார் குறிப்பிடுகின்றது. ஆகவே பிரமம் தான்முழுமுதல் உலகின் உயிரின் அசைவியக்கத்திற்குக் காரணம் என்று உபநிடதக் கருத்தியலைச் சைவசித்தாந்தம் பதிக்குள் அடக்கியிருக்கிறது.

மேலும் அடுத்த மந்திரமான "தேத்யாநயோ காநுகதா ......" என்பதில் ஆன்ம குணங்களினால் மறைக்கப்பட்ட தேவாத்ம சக்தி எனப்படும் பராசக்தியைத் தியான யோகம் கற்றவர்களாகிய அவர்கள் (முனிவர்கள்) கண்டார்கள், காலம் முதல் ஆன்மா இறுதியாகிய எல்லாக் காரணங்களையும் கடந்து நிற்கின்ற ஒருவன் எவனோ அவனையே பிரமம் என்று உரைகண்டிருக்கின்றனர். முதல்வன் பாச, பசுஞானங்களால் அறியப்படாதவன் அப்படிப்பட்டவனை சாதாரண கண்களால் காணமுடியாது கண்ணுக்கு ஒளி காட்சித்திறனை நல்குவது போல ஆன்மாவுக்கு ஆத்மஞான ஒளி கிடைக்கும் பட்சத்திலேயே இறைவனைக் காணமுடியும். இதனை ஆதரிக்கும் வகையில்,

**"காட்டிய கண்ணே தனைக்காணா கண்ணுக்குக்**
**காட்டாயவுள்ளத்தைக் கண்காணா காட்டிய**
**உள்ளந்தனைக் காணா வுள்ளத்தின் கண்ணாய**
**கள்வன்றா னுள்ளத்திற்காண்"** (9:1:55)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என சிவஞானபோதம் உணர்த்திச் செல்கின்றது. இவ்வாறு ஆத்ம ஞானம் வாய்க்கப் பெற்றவர்களாலேயே இறைவனது தேவாத்ம சக்தியைக் கண்டுணரும் நிலையில், இச் சக்தியானது அக்கினிக்குச் சூடு போல முதல்வனுக்கு குணமாயுள்ள ஞானசக்தியே எனப்பொருள் கொள்ளப்பட்டது. பாசஞான பசுஞானங்களுக்கு எட்டாத இறைவனை அவனருளாலேயே காணவேண்டும் என்ப தற்கு சுருதிப்பிரமாணங்களில் முண்டகம் "பரமாத்மா கண்களினாலும் வாக்கினாலும் ஏனைக் கருவி கரணங்களினாலும் அடை யப்படு பவனல்லன் தவத்தினாலும் கிரியை களினாலும் அவனை அடைய முடியாது அவனது ஞானப் பிரசாதத்தினால் விசுத்தசத்வ மடைந்து தியான யோக முற்று நிட்கள வடிவினான அவனைக் காண்கிறான்."

"ஊனக்கண் பாச முணராப் பதியை
ஞானக்கண்ணின்றி சிந்தை நாடி"

என சிவஞான போதத்திலும்

"பாசஞானத்தாலும் பசுஞானத்தாலும்
பார்ப்பரிய பரம்பரனைப் பதி ஞானத்தாலே
நேசமொடு முள்ளத்தே நாடி"

எனச் சித்தியாரிலும்,
இத் தந்திரத்திற் காண்டுமென் றிருந்தோர்க்கு
அகத்தந்திரத்தின் அவ்வயி னொளித்தும்"

"அவனருளாலே யாவன்றாள்வணங்கி"

எனத் திருவாசத்திலும் அவனன்றி ஓர் அணுவும் அசையாது என்பதற்கிணங்க சித்தாந்தம் சித்தரிக்கின்ற செம்பொருள் பற்றியே உபநிடத ஆராய்ச்சி வடிவம் முன்னமே உருவம் பெற்றுவிட்டது. உபநிடதங்கள் பிரம் மத்தை அறிவியற் பூர்வமாக ஆராய்கின்றன. சைவசிந்தாந்தம் பிரம்மத்தை அறிவியற் பூர்வமாகவும், வாழ்வியல் பூர்வமாகவும் ஆராய்கின்றது. அந்த வகையில் சுவேதாஸ்வர உபநிடதத்தில் ஆராயப்பட்டிருக்கின்ற அனைத்து விடயங்களையும் குறிப்பாக மாயை பற்றிய கருத்தினையும் சைவசித் தாந்தம் உள்வாங்கித் தன்னை செறிவுபடுத்திக் கொண்டது.

"பல்லாருயிருணரும் பாண்மையென மேவொருவன்
இல்லாதான்னொங்கள் இறை"

என்று திருவருட்ப்பயன் உயர்த்தி வைக் கின்ற பதி மகத்துவம் உபநிடத்தின் சாரம் என்பதில் ஐயமில்லை.

இவ்வாறு உபநிடதங்கள் உணர்த்துகின்ற மெய்ப்பொருளியற் கருத்துக்கள் ஒருவர் சீவன் முக்தர் நிலை அடைவதற்குரிய வழிகளாகும் என இலக்கிய கலாநிதி பண்டிதணி மு. கந்தையா அவர்கள் உரைக்குமிடத்து ஒருவன் மோட்ச நிலை எய்துவதற்கான பக்குவத்தைப் பெறுவதற்கு புலனடக்கம் முதலான கட்டுப் பாட்டு நெறிகள் இரண்டு படிநிலைகளில் மேற்கொள்ளப்படக் கூடியன. அத்வைத உண்மைகளை ஐயந் திரிபறக் கற்றும் கேட்டும் தெளிதற்குத் தன்னைத் தயார் செய்யும் நிலை முதலாவது நிலையாகும். தன்னாலே தன்னை உணரும் வகையிற் செய்யப்படும் யோக அநுசாரமான பயிற்சிகள் இரண்டாவது நிலையாகும்..

இம் முதலாவது நிலை பகவத்கீதை போதிக்கும் கர்மயோகநிலை போல்வது. அதன்மூலம் சுகதுக்க அனுபவங்களிற் பற்று நீங்கியிருக்கும் இயல்பு ஏற்படும் இரண்டா வது நிலை சிரவணம் மனனம் நிதித்தியாசனம் என்பவற்றில் ஈடுபடும் நிலையாகும். உபநிடத உண்மைகளை முற்றவுணர்ந்த ஒரு குருமுக மாக அவற்றைக் கேட்டல் சிரவணம் எனப்படும். இதன்படி உபநிடத உண்மைக ளைப் பற்றிய புத்தி நிச்சயம் ஏற்பட்டு பழகிப்போன அறிவு வாசனைகள் அழியும் பட்சத்தில் ஒருவர் சீவன் முக்தர் ஆவர்" என உரைத்திருப்பதன் மூலம் சைவசித்தாந்தம் உணர்த்துகின்ற ஞானமார்க்க நெறிக்கு உபநிடத மூலங்களே காரணமாய் அமைந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருக்கலாம் என எண்ணத் தோன்றுகிறது. உபநிடதம் அறிவு மார்க்கத்துக்கு முதலிடம் கொடுக்க சைவசித்தாந்தம் பக்தி மார்க்கத்துக்கு முதலிடம் கொடுத்தமையும் உபநிடதம் காட்டிய உருவமற்ற அரூவநிலையிலுள்ள பரமான்மா பிற்பட்ட காலத்தில்,

" குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில்
குமிண் சிரிப்பும் பனித்த சடையும் ....."

என இறைவனுக்கு உருவம் கொடுத்திருக்கும் தடத்த லக்கணத்தில் ஈசுவரனாக இலகுவில் வழிபடத்தக்க (உபநிடத வழிவந்த) வளர்ச்சி நிலையே எனலாம்.

ஆகவே தொகுத்து நோக்கும் போது இந்துதத்துவப் பரப்பில் அறிவுநிலைப்பட்ட சிந்தனையாகக் காணப்படுகின்ற உபநிடதங்கள் உணர்த்தி இருக்கின்ற பிரமம், ஆன்மா, உலகு, கன்மம், மறுபிறப்பு, மாயை, ஒழுக்கம் என்னும் தத்துவ ஆராய்வுப்பொருள்களை சைவசித்தாந்தம் தனது கருத்து நிலை வளர்ச்சிக்கு ஆதாரமாகக் கொண்டு வளர்த்தது. இதனைவிட உபநிடதத்தில் கையாளப்பட்ட ஆராய்ச்சி வடிவங்களையும் சைவசித்தாந்தம் தனது ஆராய்ச்சி வடிவங்களுக்கு உரமாக பெற்றுக் கொண்டன. உபநிடதம் தனது ஆராய்ச்சிக்காக எடுத்துக் கொண்ட அறிவுத்தளத்தைச் சைவசித்தாந்தம் அறிவுத்தளம், உணர்வுத்தளம், என இரண்டாக தனது இயங்குதளங்களாக மாற்றியமைத்துக் கொண்டது சைவசித்தாந்தத்தின் அறிவுக் கருவூலமாக இதயபீடமாக உபநிடதங்களைப் பெற்றுக் கொண்டமைக்கு சைவசித்தாந்தம் ஆராய்ச்சி நிலைச் சார்புகள் உபநிடதங்களில் உருவம் பெற்றமைக்குச் சான்றாக அமைந்திருக்கின்றது.

**ஆகமங்களில் சைவசித்தாந்தப் பேறு**

சிவம் என்னும் செம்பொருளில் உறைந்து ஊறி அச்சிவபரம்பொருளைச் சிந்தைக்கினிதாய் ஆக்கிய சமயம் சைவசமயம். அச்சைவ மரபில் வேதங்கள் எவ்வளவு முக்கியமானவையோ அவற்றைவிட முக்கியமானவையாக ஆகமங்கள் விளங்குகின்றன.

"வேதமோடு ஆகமம் மெய்யாம் இறைவன் நூல்
ஓது பொதுவும் சிறப்பும் என்று உன்னுக"

என்று திருமந்திரம் குறிப்பிடுகிறது.

சிவபரம்பொருளால் உருவாக்கப்பட்டதாகவும் சிவப்பரம்பொருளை உணர்த்துவதாகவும் விளங்குவது "சைவசமயம்" என்று காரணாகமம் விளங்கிக் கூறுகின்றது. சைவசித்தாந்த அறிவியல் உண்மைகள் ஒரு நெறிப்பட தொடர்ந்திருக்கின்ற நிலையில் சிவாகமங்கள் காணப்படுகின்றன. மாசில்லாக் காட்சிகளாக மறை பொருள்கள் கண்டு உணர்வதற்கு உரியனவாக இச்சிவாகமங்கள் வேதங்களை விட அதிகளவாகவே மெய்யியல் விளக்கத்தை உணரக்கூடியவை. இதனையே "மெய்யியற் கொள்கைகளில் உடன்பாடு தெய்வநம்பிக்கை இவ்வழிக்கைகூடாது" என சேர்.பொன்.இராமநாதன் அவர்களும் குறிப்பிட்டுள்ளார். இவ்வகையில் இச்சிவாகமங்கள் உரைக்கின்ற மெய்யியலை ஞானங்கள் முதல் சாதாரணமானவர்கள் வரை விலக்கி பக்குவமெய்துவதற்காகவே சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நாற்பாதங்கள் கொண்டிருக்கின்றன. இந்நிலைப்பட்ட சமயத்துவரை உலகில் விளங்கும் எல்லா சமயங்களின் கோட்பாடுகளும் சைவ சமயத்தவர்களுள் ஏதாவதொன்றில் அடக்கிவிடுவதால் சைவசமயத்தில் எல்லைக்கு அப்பால் விளக்கக்கூடிய சமயம் எதுவும் இல்லை என மெய்கண்டசாஸ்திரங்கள் அறுதியிட்டுக் கூறுகின்றன.

இந்நிலையில் எடுத்து ஆராயப் புகுகின்ற சிவாகமங்கள் எனப்படும். சாஸ்திரங்களில் பெருந்தொகுப்பு சைவம், பாகபதம், ஸோமம், லாகுலம் என நான்கு வகைப்படும். காரணாகமம் கூறுகின்ற நிலையில் காமிகம் வாதுளம் ஈறாக உள்ள இருபத்தெட்டு சிவாகமங்களும் இவற்றின் வழித் தோன்றல்களாய் அமைந்த உபாகமங்களும் சித்தாந்தம் என்பதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடங்கும். சிவாகமங்கள் என்ற பெருந் தொகுப்பினுள் ஒரு பகுதியாக அடங்கி விளங்குவதையே சித்தாந்த சாஸ்திரங்கள் எனப்படும். ஆகமங்கள் சித்தாந்த சைவத்தின் பிறப்பிடமாகத் தென்னாடே விளங்குகின்றது எனும் கோட்பாட்டிற்கு ஆதாரம் ஆகமத்திலே காணப்படுகின்றது. இதனைக் காரணாகமம் கூறுகின்றது. இந்நிலைப்பாட்டில் மேலும் ஒன்றாக சித்தாந்தம் என்ற சொற்றொடர் திருமந்திரத்தில் கையாளப்பட்டிருப்பதைவிட இதற்கு முற்பட்ட சிவாகமங்களிலும் இத்தொடர் கையாளப்பட்டிருக்கிறது என முனைவர் எஸ்.பி.சபாரத்தினம் அவர்கள் தனது "சைவ ஆகமங்கள் ஓர் அறிமுகம்" (பக்.10 காமி காமம்:119,120) என்னும் நூலில் குறிப்பிடுகின்றார். ஆகவே, இருபத்தெட்டு சிவாகமங்களும் சித்தாந்த சாஸ்திரங்கள் என சிவாகமங்கள் குறிப்பிட்டுச் சொல்வதனையும் காண்க. மேலும் இக்கருத்துக்குச் சான்று சேர்க்கும் வகையில் காமிக ஆகமமும் "தருக்க முறையாலும் ஆராய்ச்சி முறையாலும் முடிந்த பொருளை முறையாக உணர்த்துவதாலும் காமிகம் முதலானவையே சித்தாந்த சாஸ்திரங்கள்: மற்றவையெல்லாம் பூர்வபட்ச நூல்கள்" என சிவாகமத்தின் சார்புநூலாகக் கருதப்பெறும் இரத்தினத் திரயமும் வலியுறுத்திச் செல்கின்றன.

ஆகமங்கள் சைவசித்தாந்தக் கருத்து மூலங்களாக உள்ளன. சித்தியாரை அருளிய அருணந்திசிவாச்சாரியார், சகலாகம பண்டிதர் எனப் பாராட்டப்பட்டார். செறிவூட்டப்பட்டிருக்கின்றது. இங்கு ஒவ்வோர் ஆகமமும் சரியை, கிரியை, யோகம், ஞானம் என நான்கு பகுதிகளாக அமைந்தது. இவை பதி, பசு பாசம் என்னும் முப்பொருள்களையும் விளக்கிக் கூறுகின்றன. இவற்றில் மிருகேந் திரம் எனும் உபாகமம் முப்பொருள் பற்றிய கேள்வி நிலை ஆராய்ச்சிக்குச் சித்தாந்த விளக்கம் கொடுத்திருக்கிறது. மேலும் இறை எனப்படும் பதியைப்பற்றியும் உயிர் எனப்ப டும் பசுவைப்பற்றியும் தாளைகள் எனப்படும் பாசங்களைப் பற்றியும் விரிவாக ஆராய்ந்து கூறும் சிவாகமங்கள் தனது ஆராய்ச்சி வழிகளாக வைத்த நாற்பாதங்களே சைவசித்தாந்தப் பெருமையை விளக்கிநிற்கின்றன.

சரியை என்று சொல்லப்படுகின்ற தொண்டுமார்க்கம் ஊடாகவும் கிரியை என்று சொல்லப்படுகின்ற சடங்கு மார்க்கம் ஊடாகவும் யோகம் என்று சொல்லப்படுகின்ற யோக நெறிக்கூடாகவும் ஞானம் எனப்படும். ஞானநிலைக்கூடாகவும் பரம்பொருளை அடையலாம் என்பதே சித்தாந்தத்துணிபு. இதற்கு சான்றாகவே நால்வர் இந்நான்குமார்க்கங்களில் நின்று சாலோக முதலியவற்றை அடைந்ததை வரலாறு உணர்த்தும். சரியை நெறியில் நின்றவருக்கு, கிரியை, யோக, ஞான நெறிகள் கூடாமல் எப்படி சிவகதி எட்டும்? அவர்கள் முத்திப்பேற்றை அடையலாமா என்ற ஆசங்கை எழுதுவது நித்தியட்சமானதே "ஆன்மாவின் இந்செறிப்பினால் அந்தாரமாவிழிக்கும் நிலையில்தான் ஒருவருக்கு நாற்பாதம் கைகூடும்" அதாவது ஒருவனின் வாழ்வியல் படி நிலைகள் போன்று அமைந்திருப்பதே நாற்பாதங்களாகும். கிரியை நெறியில் ஆன்மா நிற்கும் போதுதான் ஒருவனுக்குத் தொண்டு எனும் உணர்வுமே லோங்குகிறது. இது பணிவான அறமாகும் போது அவனது உணர்வு கிரியை நெறிக்கு மேல் எழுகிறது. கிரியை வழிப்பட்ட ஒழுக்கமுறை யோகநெறிக்கு உயருகிறது. யோகத்தில் தன்னை இழந்து நாமம் கெட்டு ஓடும் செம்பொன்னும் ஒப்பவே நோக்கும் காட்சிப்படிவத்தில் ஞானநெறி உயருகிறது. இந்நிலையில் அனைத்தும் அடங்கிப் பிரமம் ஒன்றே பெறும் ஒரே பொருள் என்ற உணர்வு எழுந்து, ஞான நிலையிலிருந்து ஆன்மா முத்தி பெறுகிறது. ஒருவனுக்குள் இருக்கும் பக்தியானது சரியை, கிரியை, யோகம், ஞானம் எனப்பல நிலைகளில் உயர்ந்து இறுதியில் முத்திப்பேற்றை அடைவிக்கின்றது. இதுவே ஆகமங்கள் உணர்த்தும் நாற்பாதநெறியின் சித்தாந்த விளக்கமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சைவசித்தாந்த நோக்கில் ஆன்மாக்கள் முப்பொருள்கள் பற்றிமட்டும் தத்து வார்த்த நிலைகளையும் உணர்ந்திருக்கின்றன. இதனை சூரியப்பட்டர் தனது சைவசித்தாந்த பரிபாசை என்னும் நூலில் நால்வகை நெறிகளுக்கும் முப்பொருளுக்கும் உள்ள தொடர்புகள் பற்றிப் பின்வருமாறு கூறுவது மனங் கொள்ளத்தக்கது.

சரியை முதலான நான்கு பாதங்களும் தனித்தனியே முப்பொருளைப் பற்றியும் பேசுகின்றன. சரியாபாதம் என்பது முக்கிய மாக ஆலயவழிபாட்டைக் கூறுவது - வழிபாடு செய்யப்படுபவராயிருத்தல் பற்றிப் பதியும் வழிபாடு செய்வது பற்றிப் பசுவும் வழிபடுவதற்கு சாதனங்களாக இறைவனின் அர்ப்பணிக்கத் தகுந்தவையாகவும் விளங்கு தல் பற்றிப் பாசமும் சரியாபாதத்தில் ஆராயப்படுகின்றன.

கிரியாபாதத்தில் முக்கியமாகக் கூறப்பெறுவது தீட்சை என்பது, தீட்சை எனும் கிரியையில் அனுக்கிரகம் புரியும் கருத்தாவாக விளங்குதல் பற்றிப் பதியும், திருவருளைப் பெறுதற்குத் தகுதி உடையதாக விளங்குதல் பற்றிப் பசுவும், ஆன்மாவினால் நீக்கத்தக்கவை என்பது பற்றிப் பாசமும் ஆராயப் பெறுகின்றன.

யோகபாதத்தில் முக்கியமாக இடம் பெறுவது தியானம் என்பது தியானிக் கப்படும் பொருளாக இருத்தல் பற்றிப் பதியும், தியானிக்கும் கர்த்தாவாக இருத்தல் பற்றிப் பசுவும், தியானத்தால் மறக்கத் தகுந்தவையாக விளங்குதல் பற்றிப் பாசமும் யோகாபாதத்தில் ஆராயப் பெறுகின்றன.

நான்கு பாதங்களுள் முதன்மையானது ஞானாபாதமே, ஞானாபாதத்தில் பதி, பசு, பாசங்கள் நிரூபணம் செய்யப்படுகின்றன.

சிவாகமங்களின் யோகா பாதங்களில் கூறப்பட்டுள்ள யோக முறைகளையும் யோகநுட்பங்களையும் தொகுத்து யாழ்ப் பாணம் ஞானப்பிரகாச முனிவர் சிவயோக ரத்தினம், சிவயோகசாரம் எனும் இரு நூல்களை எழுதி இருக்கிறார்.

"சைவசித்தாந்த உண்மையை உள் அனுபவமாகப் பெறுவதே வாழ்க்கையின் முடிவான நோக்கம். அதைப் பெறுவதற்கேற்ற தகுதிப்பாட்டை வருவிப்பது சிவ புண்ணியம். புண்ணியங்களில் உயர் புண்ணியம் சிவபுண்ணியம். சிவபுண்ணியச் செயல்கள் அனைத்துக்குஞ் சிரோமணியாய்த் திகழ்வது சிவபூசை. பிரபஞ்ச வாழ்க்கையில் பொய் மையும் அசுத்த இயல்புகளுமே மனிதனை மீளமீளப் பந்தத்திற்கு ஆளாக்குவன. அவ்விரண்டையும் நீக்கி உயிரிலும் உடலிலும் ஏன் புற உலகிலுங் கூடச் சிவத்துவ அபிவியக்தியை ஏற்படுத்துவது சிவபூசை. என கிரியை நெறியில் உணர்த்தப்படும் சிவபூசை விளக்கத் தத்துவம் இவ்வாறு அமைந்துள்ளது. (சைவகாவலன் பத்திரிகை) இதனை மேலும் உறுதிசெய்யும் வகையில் சைவநாற் பாதங்க ளானது கிரியையே மையமாகக் கொண்டவை இங்கு கிரியை என்று சொல்லப்படுவது சிவபூசையே இச் சிவபூசையை மெய்கண்ட தேவர் வைதிகக் கிரியைகளினால் முத்தி சித்திக்கும் என்றிருக்கும் நம்பிக்கையை,

"பசித்துண்டு பின்னும் பசிப்பானை ஒக்கும்"

இசைத்து வருவினையி லின்பம்..." எனச் சிவஞானபோத 8ஆம் சூத்திரத்தின் உதாரண வெண்பாவின் மூலம் உணர்த்தி இருப்பதைக் கொண்டு சித்தாந்தத்தில் கிரியைகளின் முக்கியம் உணரப்பாலது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சிவாகமங்களின் ஞானபாதத்தில் சைவசித்தாந்தம்

சிவாகமங்கள் குறிப்பிடுகின்ற நான்கு நெறிகளில் ஞானபாதத்தில்தான் சைவசித்தாந்தம் நன்கு சுடர்விடுகின்றது. சிவாகமங்களின் நான்கு பாதங்களுள் ஞான பாதமே சிறப்பு வாய்ந்த தலைமைத்தன்மை கொண்டிருக்கின்றது. இதன் அடிப்படையையும் முதன்மையையும் உணர்ந்துதான் சிவாகமங்களே "சிவஞானம்" என்று சுட்டப்படுகின்றன. மேலும் பரஞானம் அபர ஞானம் என இரண்டும் சிவஞானம் எனப்படும். அவற்றுள் பரஞானத்தைப் போதிப்பது எல்லா ஞானங்கட்கும் பொதுவாதலின், ஈண்டு சிவஞானம் என்றது அவ்வபரஞானமாகிய சிவாகமமேயாம் என்று மாதவச் சிவஞான முனிவர் தமது மாபாடியத்தில் கூறியுள்ளமை உரைக்கத்தக்கது.

சிவாகமத் திருமேனி கொண்டுள்ள சிவபெருமானுக்குப் பொருளாக ஒவ்வொரு சிவாகமத்தில் ஞானபாதம் அமைகின்றது. காமிக ஆகமம் கூறுகின்றது: வேதங்களின் முடிவுப் பகுதி உபநிடதங்கள் போல் ஆகமங்களின் முடிவுப்பகுதி ஆகமமாந்தம் எனும் பொதுப்பெயரால் அழைக்கப்பட்டு, ஆகமாந்தம் என்பது சித்தாந்தம் என்னும் பொருள் கொள்ளப்பட்டது. இதனை "வேதத்தின் அந்தமும் மிக்க சித்தாந்தமும்" என திருமூலரும் சிவாகமங்களில் ஞானபாதக் கருவூலங்களாக அமைவன ஞானமித்தம். திருவுந்தியார் திருக்களிற்றுப்படியார் போன்ற சித்தாந்த சாஸ்திரங்களும் இதனை உறுதி செய்கின்றன. முப்பொருள்களில் பசுவானது பாசத்தில் நின்று நீங்கிப் பதியை அடைவதற்குரிய சாஸ்திரங்களை விளக்கி அச்சாஸ்திர முறைகளை மேற்கொள்வதால் அடையப்படும் சித்தாந்த முத்தி நிலையினையும் ஞானபாதம் விளக்கி நிற்கின்றது.

இன்று ஞானபாதங்கள் காணப்படுகின்ற ஆகமங்களாக சுவாம்புவம், ரௌரவம், மகுடம், கிரணம் பௌத்ர ஆகமம், மிருகேந்திர ஆகமம், மதங்க பாரமேசுவர ஆகமம் தேவிகாலோத்தரம் என்பன காணப்படுகின்றன. இவற்றில் ஒவ்வொன்றின் ஞானபாதமும் தனிச்சிறப்பு வாய்ந்தவை. அவற்றுள் கிரண ஆகமத்தில் பசு இலக்கணம் அவற்றின் பல வேறுபாடுகள், சக்திநிபாதம், இறைவன் திருமேனி கொள்ளுவதன் நோக்கம் முதலான கருத்துக்கள் நுட்பமாக விளக்கப்பட்டுள்ளன. தத்துவங்கள் பற்றிய ஆராய்ச்சியை மதங்க பரமேசுவர ஆகமமும், மூவகை உயிர் வர்க்கங்களின் இயல்புகளும் மாயையின் இயல்புகளும் கன்மம் செயற்படும் முறையும் இருவினை ஒப்பும், சித்தாந்த அளவையல் முதலான கருத்துக்களை பௌத்ர ஆகமமும், இறைவனின் ஐந்தொழிலைப் பற்றியும் சக்திபாதவகைகளைப் பற்றி மிருகேந்திர ஆகமமும் கூறுகின்றன. இவ்வாறாக ஒவ்வோர் ஆகமத்திலும் ஞானபாதம் தனிச்சிறப்பு வாய்ந்ததாகவும் சித்தாந்தம் பேருண்மைகளை கொண்டதாகவும் காணப்படுகின்றது.

### திருமுறைகளில் சைவசித்தாந்தம்

வேதம் முதல் சிவாகமம் பத்ததிகள் ஈறாகவுள்ள முன்னைய சைவ சாஸ்திரங்களுக்கும், அஸ்டப் பிரகரணம் முதல் பண்டாரச் சாஸ்திரங்கள் ஈறாகவுள்ள பின்னைய சாஸ்திரங்களுக்கும் இடைப்பட்ட காலத்திலே தோன்றி அச்சாஸ்திரங்கள் கூறும் சைவசித்தாந்தப் பொருளிலக்கணத்துக்கு இலக்கியமாகத் திகழ்வன தேவாரத்திரு முறைகள்.

இம்முன்னைய சாஸ்திரங்கள் கூறும் உண்மை முடிபுகள் பின்னைய சாஸ்திரங்களிலும் பிறழாது நிலைபெறத்தக்க வகையிற் சைவமெய்யியலுக்கு நித்திய வாழ்வழிப் பவையாக இத்திருமுறைகள் விளங்குகின்றன. அந்த சாஸ்திரங்கள் இலக்கண ரீதியாகத் தரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மைகளை அனுபவங்களாக வெளிக் காட்டும் தன்மையில் இவற்றின் மகிமை முக்கியத்துவம் பெறுகிறது. தமிழ் இலக்கியப் பரப்பில் பல்லவர்காலம் என்றவரை யறைக்குள் வரும் கி.பி. 6 - கி.பி.9 வரையான காலசட்டத்தில் பக்தி நெறியில் எழுந்த இலக்கியங்களுள் முதன்மையானவையாகத் திகழ்பவை மூவர் பாடிய திருமுறைகளே. "திருமுறைகள் தமிழ் வேதம்" என்று சிறப்புக் கொடுக்கப்பட்டிருக்கும் உயரிய சிந்தனையில் நின்று அத்திருமுறைகளில் காணப்படுகின்ற சைவசித்தாந்தப் பொருளை தெளிவுபடுத்து வதே இப்பகுதியின் நோக்கம். இம்முயற்சி யானது தேன் நிரப்பப்பட்ட கிண்ணத்துக்குள் இனிப்பு இருக்கிறதா? என்று தேடும் அறியமை முயற்சியே இருப்பினும் ஆய்வு நோக்கிற்கமைய இவற்றில் சிந்தாந்தக் கருத்து நிலை வளர்ச்சியினைச் சுருங்கிய வடிவில் எடுத்து விளக்குவோம்.

முக்தி சாதனமாகிய சித்தாந்தப் பேருண்மைகளையே திருமுறைகள், நமது உள்ளடக்கமாகக் கொண்டிருக்கின்றன. வேதங்களில், உபநிடதங்களில், ஆராயப் பட்ட பதி, பசு, பாசம் எனும் இலக்கண நெறிப்பட்ட ஆய்வினை திருமுறைகள் இலக்கியநயம் படைத்ததாக விளக்கிச் செல் கின்றன. சைவசித்தாந்த உண்மைகளை அறிவு விளக்கத்தைவிட அனுபவவிளக்கத்தின் மூலமே உணர்த்திச் செல்கின்றன. மெய்யியல் ஆய்வில் உணர்த்தப்படுகின்ற முப்பொருள் களை ஏனைய சமயங்கள் விகாரமுறக் காட்டி, முரண்களை முனைப்பாக்கிக் கொண்டன. பதி ஒன்றே நிலையான பொருள். பசுவும் பாசமும் அதுபோல் தனியான பொருள்களாகா. அவை பதியில் இருந்து அவ்வப்போது தோன்றி, ஒடுங்குவன என்று தத்துவக் கோட்பாட்டா ளர்கள் முரண்பட்டுக் கொண்டிருக்க சைவ சித்தாந்தம் மட்டும் பதியை எவ்வகையி லும் விகாரமுறாத பூரணப்பொருளாக குறிப் பிடும். இதனால்தான் சித்தாந்தம் இன்றுவரை அறிவுநிலைச் சிகரம் ஏறி இருக்கிறது. இச்சைவ சித்தாந்தக் கருத்துக்கு ஆதாரம் சேர்க்கும் வகையில் பசு, பாசம் என்பன தாமாகவே உள்ள பொருள்கள் என்று திருமுறைகள் வலியுறுத்திச் செல்கின்றன. இதனை திருஞான சம்பந்தர்,

"விளையாததொர் பரிசில்வரு பசு பாசவேதனை யொண்
தளையாயின தவிரவ் வருள்தலைவன்"

என விளக்கிச் செல்கிறார்.

இத்திருமுறைகள் மூவாத பேரன்பின் முதிர்வில் முகிழ்த்த ஞானக்கனிகளாகும். சிவஞானப் பேறுடைய இக்கனிகளில் சித் தாந்த மணம் கமழும் தன்மையினை உலகிற்கு உணர்த்த அகத்தியர் தேவாரத்திரட்டில் தேவாரத் திருப்பதிகங்களின் உள்ளக்கி டையாக திருவருள், திருவெண்ணீறு, அஞ்செ ழுத்துண்மை, கோயிற்றிரம், சிவனுருவம், திருவடி, அருச்சனை, அடிமைநிலை எனும் எட்டு வகைப்பட்ட பொருட்பகுதிகள் இடம் பெற்றிருக்கின்றன. இதனை

"குருவருளும் வெண்ணீறெழுத்தஞ்சும் கோயில்
அரனுருவும் என்றவை மேலாக்கும்.............."

என வரும் வெண்பா குறிக்கின்றது. இதனைத் தொடர்ந்து சித்தாந்தச் செழும் பொருளை இனிது விளக்கும் தனித்தனிப் பாடலாக உமாபதி சிவாச்சாரியரால் தொகுக் கப்பெற்ற "அருணெறித்திரட்டு" முக்கிய மானதாகும். இத்திரட்டில் பதிமுது நிலை, உயிரவைநிலை, இருண்மலநிலை, அருளது நிலை, அருளுருநிலை, அறியும்நெறி, உயிர்விளக்கம், இன்புறுநிலை, அஞ்செழுத் தருள்நிலை, அணைந்தோர் தன்மை எனப் பத்து அதிகாரங்களாகப் பகுக்கப்பெற் றுள்ளது. இம்முறை திருவருட்பயன் ஒழுங்கில் அமைந்துள்ளது. "திருவருட்பயன் என்பது திருவருட்பனுவலாகிய தேவாரத் திரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையின் பயனாகச் சைவசித்தாந்தத் தத்துவ உண்மைகளைச் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் நோக்கத்துடன் இயற்றப் பெற்றது. இத்திருமுறைகள் திருவருள் முதலிய எட்டு வகையாலும் பதிமுதுநிலை முதலிய எட்டு வகையானும், பகுத்து ஆராயப்பட்டி ருக்கின் றன. தேவாரத்திருப்பதிகங்கள் திருவாசகம் முதலிய சைவத்திருமுறைகளின் சாரமாக அமைந்தனவே சிவஞானபோதம் முதலிய சாத்திரங்கள் ஆகும்.

மேலும் சைவசித்தாந்த உண்மைகளில் ஒன்று உடல் பெற்று உலகில் வாழும் ஆன்மாக்கள் கன்ம முடிவில் உடலை விட்டு நீங்கி, சுவர்க்க, நரகஞ் சென்று, மீண்டும் பிறப்பெடுக்கும் என்பதாகும். இத்தத்துவக் கருத்தை,

"துறக்கப் படாத வுடலைத் துறந்துவெந் தூதுவரோடு
இறப்பன் இறந்தால் இருவிசும் பேறுவன் ஏறிவந்து
பிறப்பன் பிறந்தாற் பிறையணி வாய்சடைப் பிஞ்ஞகன்பேர்
மறப்பன் கொலோ வென்றென்னுள்ளங் கிடந்து மறுகிடுமே!"

எனத் திருநாவுக்கரசர் தேவாரம் உணர்த்துகிறது. மேலும்,

"தடுத்தாட்டித் தருமனார் தமர்செக்கில் இடும்போது
தடுத்தாட்கொள்வான்"

எனச்சுந்தரமூர்த்திசுவாமிகள் உரைப்ப தும் நோக்கத்தக்கது.

மேலும் உலக இயல்பொழுங்கில் இரவு, பகல் என்ற பொழுது இருப்பதுபோல இருவி னைப் பந்தத்துக்கு உட்பட்டுள்ள உயிர்க ளுக்கு வாழ்விலுடைய அனுபவத்தை நல்கி, அதன் வாயிலாக அவற்றை ஈடேற்ற உள்ள வரே சிவன். உயிரின் வினைச் சார்புப்படி இன்பப்பலன் கொடுத்தல் போல் துன்பப் பலனும் வேண்டியவர் ஆகிறார். உடலை விட்டு உயிர் நீங்கியபின் அதன் கன்ம வினைகளுக்கேற்ப அவற்றுக்கு சுவர்க்கப் பேறு, நரகப்பேறு என்பவற்றையும் அவரே கொடுக்கின்றார். நரகத்தில் வீழ்ந்த ஆன்மாக் களை அறக் கருணையினால் மீட்டெடுத்து அவைகளைப் பேறு அடைவதற்கு வழிகாட் டுபவரும் அவரே என்கிறது சைவசித்தாந்த கோட்பாடு. இதனை திருநாவுக்கரசர்,

"எழுவாய் இறுவாய் இலாதன வெங்கட்
பிணிதவிர்த்து
வழுவா மருத்துவ மாவன மாநரகக் குழிவாய்
விழுவா ரவர்தம்மை வீழ்ப்பன மீட்பன"

என உரைக்கின்றார். நரகத்துக்குப் போகும் ஆன்மா சிலரின் விருப்பு, வெறுப்புப் படியல்லாமல் அவற்றின் பாவத்துக்கு விமோசனம் பெறும்பொருட்டே செல்கிறது எனும் உயரிய சித்தாந்த ஞானம் உணர்த்தப் படுகிறது. இறைவன் கருணை ஒன்றே: மறக்கருணையும் அறக்கருணையே.

இது சைவசித்தாந்த தனித்துவக்கோட் பாடாக அமையும் விடயம் அதாவது வேறெந்தத் தத்துவ தரிசனங்களிலும் காணப்ப டாதவாறு ஆன்மாக்களுக்குக் கருணை என்ற வகையில் துன்பகரமான அனுபவங்களைப் பெறச் செய்து பக்குவத்தின் வழி சிவகதி அடையலாம் என்பதாக வலியுறுத்துகிறது. இதனைத் திருநாவுக்கரசர்,

"ஓதுவித்தாய்முன் அறறவுரை காட்டி
அமணரொடே
காதுவித்தாய்கட்ட நோய்பிணி தீர்த்தாய்
கலந்தருளிப்
போதுவித்தாய் நின்பணிபிழைக் கிற்புளி
யம்வளாரால்
மோதுவிப்பாய் உகப்பாய் முனி வாய்கச்சி
யேகம்பனே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று தெளிவுறுத்துகின்றார். இதனைத் தத்துவப்பிரகாசம் "இச்சையின் அச்சுறுவித் தல்" என்கிறது.

சைவசித்தாந்தம் என்னும் தமிழ் ஞானக் கலவையில் திருஞானசம்பந்த மூர்த்திகளது திருப்பதிகங்களில் காணப்படும் சைவசித் தாந்தக் கருத்துக்களை எடுத்து நோக்குவோம்.

"செந்நெலங் கழனிப்பழ னத்தய லேசெழும்
புன்னை வெண்கிளியிற் பவளம் புரைபூந்தராய்
நுண்ணி நல்லிமை யோர்முடி தோய்கழலீர் சொலீர்
"பின்னுசெஞ்சடையிற் பிறைபாம்புடன் வைத்தே"

எனும் பாடலில் பிறைபாம்புடன் வைத்ததன் திருவுளக் குறிப்பு யாது? என்பதற்கான விடையாக அமையக்கூடிய சைவசித்தாந்த ஞான விளக்கமொன்றை இரு முனைகளில் உணரக்கூடியதாக இருக்கிறது. ஒன்றையொன்று ஒவ்வாத வேறுவேறு உருவும் வேறுவேறு இயற்கையும் வெகுவாக மலிந்து கிடக்கின்ற இப்பிரபஞ்சத்தை சிவன் தனது ஒரே ஆணைக்குள் வைத்தியக்கும் அவர் மகிமையாகிய பதியிலக்கணம் இதில் விளக் கிடப்படுகிறது. இயற்கையில் பாம்பு மதிக் குப் பகை. ஆனால் சிவன் சடையில் அவை அவனது ஆணையால் பகை தவிர்த்து இணக்கமுற்றிருக்கின்றன. இது சிவனை விட்டு அகன்று திரியும் பந்த வாழ்வில் மட்டுமே இப்பகை முகிழ்க்கிறது. அவனை அணைத்துப் பெறும் முத்தி வாழ்வில் பகைக்கு இடமில்லை என்பதனையே காட்டு கிறது.

இதனை அப்பர் சுவாமிகளும் "பாம் பொடு திங்கள் பகை தீர்த்தாண்டாய்" என்றும் அருளிச் செய்திருக்கிறார். சிவன் நிழலில் ஆன்மாக்களுக்கு உயர்வு, தாழ்வு, பகை நட்பு, எதுவுமில்லை. எல்லாம் ஒன்றுதான் எனும் நிலையையே இது குறிக்கின்றது. இது பின்னர் உலகவாழ்வியலிலும் ஆன்மா கொண்டியங் கும் உடலிலும் அந்த உடலால் செய்யப்படும் தொழிலால் வேறுபாடு காணப்படுவது சிவபேற்றுக்குத் தடையாகும் என்பதனை "பித்தா" என்று அழைத்த சுந்தரர் பின் அனுபவ ஞான முதிர்ச்சியில் "தில்லைவாழ் தம் அடியார்க்குமடியேன்" என பேதம் பார்க்காது ஆன்மாக்களெல்லாம் அவன் நிழலில் சர்வமயம் என்பதனைக் காட்டியுள்ளார். இது சிவஞானப்பேற்றை அணுகும் ஆன்மாக் களுக்கு சம அனுக்கிரகவாதமாக கைக் கொள்ளப்படுகிறது.

பரந்தேழுந்த சமன் முதலாம்
பரசமய இருள் நீங்கி
சிரந் தமுவு சைவநெறி
திரு நீற்றின் ஒளி வளிங்க
அரைந்தை கெடப் புகலியர் கோன்
அமுது செய்யப்
திருமுலைப் பால் சுரந்தளித்த சிவகாம
சுந்தரி பூங்களல் போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

பளை, இரட்டைக்கேணி

# அருள்மிகு கண்ணகை அம்பாள்

# பதிகம்

"சிவ சக்தியே நம"

**(எண் சீர் நெடிலடி ஆசிரிய விருத்தம்)**

திருச்சிற்றம்பலம்

சீர்கொண்ட செஞ்சுடர்ப் பிரகாச மானதொரு
திவ்ய தரமான வடிவும்
சிந்தைசெயு மன்பர் வினை தீரவே யழகொழுகு
திருவிழியி னருளாட்சியும்
வார்கொண்ட வனமுலையி னமுதமே சொரிந்தடியர்
வருவினைகள் தீர்க்கு மாண்பும்
வண்டுபடி மலரழக பாரமுந் திருநுதலின்
வைத்த செந்தூர வடிவும்
தார்கொண்ட சுடர்முத்து மாலையுந் திருமுடியும்
சந்திர வடிவான முகமும்
தண்டைகள் சிலம்போடு கொண்டதொரு
கொலுசுமாய் தன்னிக ரிலாத வடியும்
பார்கொண்ட பளை யிரட்டைக் கேணியானபதி
பண்புற் றமர்ந்த வுமையே
பட்சமுறு மெய்யன்பர் மெச்சவருள் புரிகின்ற
பத்தினி கண்ணகை யம்மனே. 1

கல்லாத சிந்தையும் பொல்லாத குணமுமொரு
கழிபிணி யதான வுடலும்
கலைஞான மின்மையுந் தொலையாத வறுமையுங்
கருணை யில்லாத நெஞ்சும்
இல்லாத குற்றங்களே பேசிடும் நாவும்
இடருற் றிரங்கு மனமும்
ஏழையேன் பெற்றிந்த நானிலந் தன்னிலே
என்னாளுந் துன்ப முறவோ
வல்லாளி யாய்வந்து மாமதுரை மீதிலே
வாதிட்டு வென்ற வன்னே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்வினை யெலாமகல நல்லருள் புரிந்துனது
மலரடியின் நீழல் தருவாய்
எல்லவருமே வந்து போற்றிடும் பளை
யிரட்டைக் கேணிமீ துறைந்தே
இன்னருள் புரிந்திடும் தன்னிகரில் தெய்வமே
இறைவி கண்ணகை யம்மனே. 2

சிங்கார ரூபிநீ மங்காத புகழாழி
திரிலோக நாயகியு நீ
சிந்திக்கு மன்பர்க்கு வந்துற்ற மிடிபகைமை
தீர்த்திடும் மகமாயி நீ
கங்கா நதிச் சடையர் பங்கான தேவி நீ
காமாட்சி மீனாட்சி நீ
கருமாரி யபிராமி யுலகாளு மாதேவி
காளி கங்காளியு நீ
எங்கா யினும் நினைந் திட்டவர்கள் நேர்வந்து
இலம்பாடு நீக்குபவள் நீ
ஈரேழு புவனத்து மேவான மாசத்தி
ஈஸ்வரி மாதங்கி நீ
துங்கமிகு பைரவி துர்க்கை மாலினி நீலி
சூலி எண்டோளியு நீ
சொல்லரிய பளை யிரட்டைக் கேணிமீ துறையுஞ்
சோதி கண்ணகை யம்மனே. 3

வங்கமிகு சோணாட்டு பூம்புகார் நகருற்ற
வணிகர் குல மாதாகியே
மணவாள னாயுற்ற கோவலன் தன்னோடு
வழுதிநகர் தன்னி லெய்தி
சங்கையுறு மாயர்குடி தன்னிலே தங்கியே
தலைவன் தனக்கு நேர்ந்த
சதிமரண மதுகேட்டு மனதுமிக வேகவே
சஞ்சலத் துடனேகியே
மங்காத புகழ்மீனவன் செழியன் தேவியொடு
மாள வாதிட்ட வன்னே
மருவல ரெலாமடிய நினதுகோ லோச்சியே
வாழ்விப்ப துன் பாரமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெங்கான பொழிலோங்கு பளை யிரட்டைக் கேணி
தெய்வீக வொளி வீசியே
திருமல்க வருள்புரியு மொருதெய்வ மாதரசி
தேவி கண்ணகை யம்மனே. 4

வானாகி மண்ணாகி வளியாகி நீராகி
மாறாத தேயு வாகி
மங்காத வொளியாகி வெளியாகி மலையாகி
மதியாகி யருண னாகி
ஊனாகி யுயிராகி யுயிருனுக் குயிராகி
ஓங்கார சக்தி யாகி
ஓதரிய மறையாகி யாகமந் தானாகி
உபநிடதத் துச்சி யாகி
தேனாரும் பதினெண் புராணமா யிதிகாச
சிந்தைமகிழ் தந்திர மதாய்
தெவிட்டாத வெண்ணென் கலைக்ஞான மாகியே
தேடரிய சிந்து மாகி
மானாகர் மகளாகி வளர்சோழ நாடதனில்
வந்தவ தரித்த வன்னே
வளர்தெங்கு பொழிலோங்கு பளையிரட்டைக் கேணி
மாது கண்ணகை யம்மனே. 5

சந்ததம் பொய்பேசி யுலகா யுதத்திலே
தடுமாறி யுளலு கின்ற
சஞ்சலப் பேய்கொண்ட மனிதரொடு கூடியிச்
சுகலோக வாழ்வை நம்பி
பந்தமிக வேகொண்டு மனைமக்கள் சுற்றமெனும்
பாச வலையிற் சிக்கியே
பரமுத்தி தருமுன்றன் பாதத்தை யெண்ணாது
பணவாசை கொண்டு நைந்தேன்
அந்திவளர் செஞ்சடைக் கடவுளொரு பாகத்தை
அள்ளிப் பிடித்த வன்னே
அடியேனை யுன்றன் பதத்தணைத் தேவந்து
ஆள்வதுன் பார மம்மா
கந்தமலர் வாவிசெறி பளையிரட்டைக் கேணி
கலந்தங் குறைந் தருளியே
கனக மழையே பொழியு மமுதகுணசாகர்
கண்ணகைப் பெண் ணரசியே. 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராதி யைம்பூத காரணி பூரணி
பகவதி சாமுண்டியே
பஞ்சசபை தோறுநட மாடிடுஞ் சங்கரன்
பங்கான தேவி நீயே
நேராதி யில்லாத சங்கரி சிவை கௌரி
நிமலை காமாட்சி நீயே
நீங்காது உலகெலா ரட்சைபுரி பராசத்தி
நிகரிலா மீனாட்சி நீ
பேராதியான தொரு சக்தியே கௌமாரி
பெட்புறு விசாலாட்சி நீ
பிச்சாடனர்க் கன்னமுத வன்ன பூரணி
பிஞ்ஞகி கரு மாரியே
நீராதி யோடை செறி பளையிரட்டைக் கேணி
நீங்காம லுறையுமன்னே
நித்தமும் வணங்கன்பர் சித்தமது நீங்காத
வித்தகி கண்ணகை யம்மனே. 7

வஞ்சகத் துட்டரொடு மதயானை சிங்கமும்
வன சார மிருகங்களும்
வாதாடு மூடரொடு ஈயாத லோபரும்
வருபில்லி யொடு சூனியம்
நெஞ்மதி லுனதுதிரு நாமமுன்னிய வளவில்
நிலைபிரிந் தோடு மன்றோ
நிமலை யபிராமியே யுனது திருவடியதனை
நிதமும் பிடித்த வடியேன்
சஞ்சலங் கொண்டிந்த வுலகத்து வாழ்விலே
தடுமாறல் முறையாகுமோ
சகலசன வசீகரி யகிலாண்ட நாயகி
தற்பரை சக முதல்வியே
மஞ்சுபடி தெங்குசெறி பளை யிரட்டைக்கேணி
வாழ்விக்க வந்த வுமையே
வாலை பிரகாசமுறு ஞானமா ரூபியே
மாது கண்ணகை யம்மனே. 8

ஓமெனும் பிரணவப் பொருளுநீ யருளுநீ
ஓதரிய மாசத்தி நீ
உலகிடைத் தோற்றமா யெண்பத்து நான்குநூ
றுற்றதொரு யோனி யெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானாகியே நின்று நால்வகைத் தோற்றமும்
தலையளித் தாளு மன்னே
தமியேனுன் னிருபாத பங்கயந் தன்னையே
தஞ்சமென் றுன்னி வந்தேன்
கானல் நீர் போலிந்த வாழ்விலே யுழலாது
கருணை விழியது பரப்பி
கனகச் சிலம்பணியு மிருபாத நீழலின்
காட்சிதந் தாட்சி செய்வாய்
பானற் றடஞ்சூழும் பளை யிரட்டைக்கேணி
பண்புற் றமர்ந்த தாயே
பட்சமுறு மெய்யடியர் மெச்சவருள் புரிகின்ற
பத்தினி கண்ணகை யம்மனே. 9

சந்தமு முனது திரு மலரடியை மறவாத
தவவாழ்க்கை வாழ வறியேன்
சற்சனர்கள் கூட்ட மறியேன் நினது சந்நிதியில்
சரியைநெறி நின்று மறியேன்
பந்தவினை தீரவே கந்தமலர் கைக்கொண்டு
பண்ணாரந்த பூசை செய்தே
பதமுத்தி யேபெறுங் கிரியைநெறி நிற்கின்ற
பக்குவஞ் சற்று மறியேன்
சிந்தையை யடக்கியே சும்மா விருக்கின்ற
திறமான யோக மறியேன்
தீவினையி னேனையிவ் வேளைதனி லேவந்து
திருவடிகள் தந் தாளுவாய்
கந்தமல ரோடை செறி பளை யிரட்டைக்கேணி
கருதுற் றமர்ந்த வுமையே
கற்பரசியான தொரு மெய்க்கடவுளே எங்கள்
கண்ணகைப் பெண்ணரசியே. 10

திருச்சிற்றம்பலம்

**இரட்டைக்கேணி கண்ணகை அம்பாள் பதிகம் முற்றிற்று**

**ஆக்கம் :**
*சிவஅன்பன் குமாரசாமி புலவர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஓம் சக்தி வேல்

பளை, இரட்டைக்கேணி

# அருள்மிகு கண்ணகை அம்பாள்

# திருஊஞ்சல்

"சிவ சக்தியே நம"

காப்பு (வெண்பா)

தெங்கினங்கள் சூழ்ந்தோங்கு சீரார் பளைநகரில்
தங்கும் இரட்டைக்கேணி தன்பதியாய் – தங்குமருள்
அம்பாள் தனக்கோர் அணியூஞ்சற் பாவிசைக்கத்
தும்பிமுகர் பாதந் துணை.

திருச்சிற்றம்பலம்

சீரோங்கு யாழ்நகரின் கீழ்பா லோங்கிச்
சிறந்திலங்கு பளைப்பதியின் சிறப்பு மிக்க
ஏரோங்கு செந்நெல் வயல் தென்னஞ் சோலை
எழிலோங்கு மலரிமகிழ் வெள்ளில் நாவல்
தாரோங்கு கொன்றை கூவிளையே நொச்சி
தலமோங்கும் ஆல்அரசோ டுணாவே சூழ்ந்து
பாரோங்கு திருவிரட்டைக் கேணி மேவும்
பத்தினிக் கண்ணகைத்தாயே யாடீ ரூஞ்சல். 1

அரிய சதுர்மறை நிறைதூ ணாகநாட்டி
ஆறங்கம் தந்திரங்கள் சட்ட மாக்கி
பெரியசிவ தோத்திரங்கள் கயிறாய் மாட்டி
பிரணவப்பொற் பலகையெனும் ஊஞ்சல் மேவி
தெரிவரிய தேவகுழாந் தொழுதே யேத்த
சிறந்தவர மகளிர்புகழ் பாடி ஆட்ட
வரியரவின் மணிப்பரற் பொற் சிலம்பு பூண்ட
மாதா கண்ணகைத்தாயே யாடீ ரூஞ்சல். 2

ஆதிசிவ னிடத்தமர்ந்த தேவி யானாய்
அருட் பராசக்தி பரைநீலி அத்தன்
பாதியுமை கவுமாரி சாம்பவி மாதங்கி
பராபரி யாமளை கொற்றி பவானியானாய்
ஏதிகடற் புவியடியர் வாழ வென்று
இருஞ்சபையில் வழக்குரைத்த இயவுளானாய்
சோதிவடி வானவளே இரட்டைக்கேணி
துலங்கருள் கண்ணகைத்தாயே யாடீ ரூஞ்சல். 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திமைசேர் அடியர்குழாம் பரவி யேத்தப்
பரிந்தருள்செய் பராபரையே பாண்டி நாட்டில்
நித்திலஞ்சேர் மணிமார்பன் செழிய னோடு
நேர்நின்று வழக்குரைத்து நீதி கேட்டே
அந்தமுறு சிலம்புடைத்துப் பரலைக் காட்டி
அனலூட்டி மதுரைநகர் அழித்த தேவி
மெத்துபுகழ் பளை யிரட்டைக் கேணிமேய
விமலை கண்ணகைத்தாயே யாடீ ரூஞ்சல். 4

அப்பேறாத் தோணிபுரத் தோன்ற லார்க்கு
அன்புடனே பாலூட்டு மமுதச் செம்பொன்
செப்புநிகர் முலையாளே யாடீ ரூஞ்சல்
தென்கலையை யுகந்தவளே யாடீ ரூஞ்சல்
ஒப்பிலா மலைமகளே யாடீ ரூஞ்சல்
ஓதுமறை யுட்பொருளே யாடீ ரூஞ்சல்
எப்போதும் அருள்செய் பளை இரட்டைக் கேணி
எழுந்தருள் கண்ணகைத்தாயே யாடீ ரூஞ்சல். 5

மானாய்க்கர் செய்தவத்தால் அவதரித்தே
வழவர்திரு நாட்டினிடை வளர்ந்து பின்னாள்
தேனாறு பாய்ந்தோங்கு பாண்டி நாட்டில்
சென்று வழக்குரைத்துத் தீமூட்டி யிட்டு
வானாரு மலைவளஞ்சேர் சேர நாட்டில்
வந்துனது தெய்வீக வடிவங் காட்டி
ஏனோரும் வணங்கியிட ஈழ நாட்டில்
எழுந்தருள் கண்ணகைத்தாயே யாடீ ரூஞ்சல். 6

விண்மாத ராட்டிசைப்ப வாடீ ரூஞ்சல்
விளங்கு பைம்பொன் னணியாரே யாடீ ரூஞ்சல்
மண்மாதர் வழுத்தியிட வாடீ ரூஞ்சல்
வரிவளைக்கை மாதரசே யாடீ ரூஞ்சல்
எண்ணார்தம் புரமெரித்தீர் ஆடி ரூஞ்சல்
ஈசனிடத் தேவியரே யாடீ ரூஞ்சல்
பண்ணார்ந்த பளைஇரட்டைக் கேணி மேய
பாராபரை கண்ணகைத்தாயே யாடீ ரூஞ்சல். 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னையே மெய்யடியார்க் கருளே செய்யும்
அன்பான தயாபரியே ஆதி சத்தி
முன்னைவினை நீக்கியிடும் முத்து மாரி
முகுந்தனுடை சோதரியே முன்னீர் ஞாலம்
தன்னில வதரித்துத் தெய்வீகக் கோலந்
தான்காட்டி யாட்கொண்ட தாயே யென்றும்
கன்னல் வயற் பளை இரட்டைக் கேணிமேய
கண்ணகையாம் தேவியரே யாட ரூஞ்சல். 8

கார்தங்கு குழலாரே யாட ரூஞ்சல்
கவலைகளைத் தீர்ப்பவரே யாட ரூஞ்சல்
சீர்தங்கு நுதலாரே யாட ரூஞ்சல்
தீவினைகள் கழைபவரே ஆட ரூஞ்சல்
வார்தங்கு கனதனத்தீர் ஆடி ரூஞ்சல்
வண்ணமதி முகமுடையீர் ஆடி ரூஞ்சல்
ஏர்தங்கு பளை இரட்டைக் கேணி மேய
இறைவி கண்ணகைத்தாயே யாட ரூஞ்சல். 9

அருமைசெறி சதுர்மறை அந்தணரும் வாழி
ஆனினமும் மாதர் கற்பும் அறனும் வாழி
கருமைசெறி முகில் வாழி கணநாதன் வாழி
கருதரிய வஞ்சுமுகக் கடவுள் வாழி
அருமைபெறு வேல்வாழி மயிலும் வாழி
ஆறுமுகன் தேவியருள் மலிந்து வாழி
பெருமைபெறு பளை இரட்டைக் கேணிமேய
பெட்பார் கண்ணகை யருளும் வாழி வாழி. 10

திருச்சிற்றம்பலம்

## எச்சரீக்கை

திருமேவிய அரனாரிடத் தேவி – எச்சரீக்கை
செழிய னரசழிய அடர்திருவே – எச்சரீக்கை
மருவார்பொழில் செறிபூம்புகார் வந்தாய் – எச்சரீக்கை
மானாகர்செய் தவத்தால் வளர்மாதே – எச்சரீக்கை
அருமாமணிச் சிலம்போ டவதரித்தாய் – எச்சரீக்கை
அணிசோமலை நாட்டார்க்கருள் அம்மை – எச்சரீக்கை
இருள்நீங்கிடப் பளைமாநகர் இயைந்தாய் – எச்சரீக்கை
இரட்டைக் கேணிப்பதி மேவிய இறைவி – எச்சரீக்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பராக்கு

ஏதமில் சிவனாரிடத் திறைவி – பராக்கு
எங்கு மருள் தங்குமுகத் தெழிலே – பராக்கு
நாதவடி வானவெங்கள் நாரி – பராக்கு
நான்மறையி னுட்பொருளாம் நங்காய் – பராக்கு
பாதகங்கள் தீர்த்தருள்செய் பரையே – பராக்கு
பளை இரட்டைக் கேணியவர் பாவாய் – பராக்கு
காதலுறு மடியர்துயர் கழைவாய் – பராக்கு
கண்ணகையாம் கற்பரசித் தாயே – பராக்கு.

## லாலி

ஆதி லாலி எங்கள் தேவி லாலி – எம்மை
ஆண்டருள வந்தமுத்து மாரி லாலி
மாரி லாலி அருட் சோதி லாலி – வன்ன
மாலை பெற்ற கண்ணகையாம் தேவி லாலி
தேவி லாலி திரி சூலி லாலி – எங்கள்
தேவ தேவி நித்தவருள் மெத்த லாலி.

## மங்களம்

ஐந்துகரங் கொண்ட எங்கள் அப்பனுக்கு மங்களம்
ஆறுமுகன் தேவியர்க்கும் அரனரிக்கும் மங்களம்
சிம்புள் வடிவா னவர்க்கு மங்களம் பத்திரை
சேர்ந்த வைரவ சாமிக்கும் மங்களம்
அங்கயற்கண் ணம்மைக்கு மங்களம் – எங்கள்
ஆதிசக்தி யானவட்கு மங்களம் மங்களம்.

திருச்சிற்றம்பலம்

**ஆக்கம் :**
*சிவஅன்பன் குமாரசாமி புலவர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Harikanan, Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org